கேள்விகளும் பதில்களும்

மாலை வணக்கம், நண்பர்களே, இன்றிரவு இங்கு இருப்பது அருமையானது. மேலும் இவையெல்லாம் என் மீது விழுந்ததற்குக் காரணம், இன்று காலை நான் என் சகோதரனைப் பற்றியும், ஒரு நாளைக்கு இரண்டு ஆராதனைகள் என்றால் என்னவென்று எனக்குத் தெரியும் என்பதைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்ததுதான்.

2 எனக்குத்—எனக்குத் தொண்டையில் ஒரு சிறு கட்டி ஏற்பட்டது; நான் நிறைய பிரசங்கிக்கிறேன். அதன்பின்னர் நான் இந்தப் பள்ளத்தாக்கிலுள்ள நகரத்திற்குள் வந்தவுடனே, இங்கே ஒருவிதமான அண்ணம், இதை, அவர்கள் அதை, இங்கே இந்தப் பள்ளத்தாக்கில் உள்ள சீதோஷ்ணநிலை என்று அழைக்கிறார்கள், அது அந்த இடத்தை மிகவும் வீக்கமாக வைத்திருப்பதால், நான் இந்தப் பள்ளத்தாக்கில் இருக்கும்போதெல்லாம் தொடர்ந்து விழுங்கிக்கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது. நான் புறப்பட்டுச் சென்ற, இரண்டு நாட்களில், அது போய்விட்டது. திரும்பி வரும்போது, அது மீண்டும் உண்டாகிறது.

3 நான் சகோதரன் நெவில் மீது ஒருவிதமான உணர்வு கொண்டிருந்தேன், அதை—அதை அறிந்திருந்தபோது, வாலிப நபர்களாகிய உங்களில் சிலர் இருப்பதைக் காட்டிலும், நாங்கள் சற்று முதிர்ச்சியடைந்திருப்பதால், நாங்கள் வேறுவிதமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகையால் நாம் ஒருவரையொருவர் ஒருவிதமாக உணருகிறோம், நாட்கள் நெருங்கத் துவங்கும்போது, பொல்லாத நாட்கள் சமீபித்து வருகின்றன. கர்த்தருக்குச் சித்தமானால், நாம் இப்பொழுதே புறப்பட்டுச் செல்லப் போகிறோம் என்பதை அறிவோம்.

4 நான் நினைத்தேன், உங்களுக்குத் தெரியுமா, அடுத்த ஞாயிறு மாலை சகோதரன் போஸ் இங்கிருப்பார் என்று நான் நினைக்கிறேன். நான்...நீங்கள் அதைப் புரிந்து கொண்டீர்களா? ஆம், அடுத்த ஞாயிறு மாலை. அவர் அயல்நாடுகளிலிருந்து தன்னுடைய பயணங்கள் குறித்த ஒரு—ஒரு திரைப்படத்தைக் காண்பிக்க விரும்பினார்...சிக்காகோவுக்கு வருவதைக் குறித்து, அநேக ஆண்டுகளுக்கு முன்பு அவருக்கு ஒரு—ஒரு சொப்பனம் வந்தது. ஒருமுறை அந்தப் பாவப்பட்ட சிறுவன் மிகவும் மனம் உடைந்து, தன் செய்தி ஒருபோதும் நிறைவேறவில்லை என்று கூறினான். கர்த்தர் அதை ஏற்கனவே நிறைவேற்றியிருந்தார் என்பதை நான் அவனுக்கு விளக்கிக் கூறினேன். அப்பொழுது அவன் அதைப் புரிந்து கொண்டான்.

5 ஆகையால் கர்த்தர் அவனுக்கு மற்றொரு சொப்பனத்தைக்

கொடுத்தார். அதன்பின்னர் அர்த்தம் உரைக்கப்பட்டபோது, அவன் எங்குச் செல்ல வேண்டும் என்றும், என்ன செய்ய வேண்டும் என்றும் கூறினார். அவன் அங்குச் சென்று, என்னே, ஓ, என்னே, கென்யாவிற்கும், டாங்கனிக்காவிற்கும், உகாண்டாவிற்கும், அங்குள்ள அந்தத் தேசங்களுக்கும், அவர்களுடைய ஊழியங்களில் கர்த்தர் அவர்களுக்காக என்ன செய்திருக்கிறார் என்பது அதிசயமாயிருக்கிறது. அந்த ஜனங்களுக்கு மத்தியில், அங்குள்ள ஆப்பிரிக்க பழங்குடியினர் மத்தியில் கர்த்தர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதைக் காண்பிக்க, அவர் அந்தப் திரைப்படத்தைக் காண்பிக்க விரும்புகிறார். கர்த்தருக்குச் சித்தமானால், ஜனவரி மாதத்தில், நான் அங்கு அவருடன் சேர விரும்புகிறேன்...மேலும் அந்தப் பழங்குடிகளுக்கு மத்தியிலும், நான் மீண்டும் ரொடீஷியாவிற்கும், தென்னாப்பிரிக்காவிற்கும் செல்வதற்கு சற்று முன்னர் ஒரு கூட்டத்திற்காக நான் செல்ல விரும்புகிறேன்.

6 மேலும், அதன்பின்னர், அது வருகிற ஞாயிறு இரவாகும், எனவே இப்பொழுது, நினைவில் கொள்ளுங்கள். சகோதரன் ஜோசப்பிற்காகக் கடினமாக ஜெபியுங்கள், அவர் ஒரு அருமையான சிறிய சகோதரனாக இருந்து வருகிறார். நான் அவரையும், அவருடைய ஐக்கியம் போன்றவையையும் மிகவும் பாராட்டியிருக்கிறேன்.

7 அதன்பின்னர், இந்த அடுத்த வாரம், அதன் பின்னர் நாங்கள் விட்டுச் செல்கிறோம்...சதர்ன் பைன்ஸூக்கும், அதன்பின்னர் தெற்கு கரோலினாவிலுள்ள கொலம்பியாவிற்கும்; அதன்பின்னர் அங்கிருந்து கௌ பேலஸுக்கு, மேற்குக் கடற்கரைக்கு, பின்னர் மேலே கிராஸ் வேலிக்கு; உலகக் கண்காட்சிக்குச் சென்று, மீண்டும் ஒரேகானுக்குத் திரும்புகிறோம்; அதன்பின்னர் பிரிட்டிஷ் கொலம்பியாவிலும், இப்படியே இந்த இலையுதிர் காலத்தின் பிற்பகுதி வரையிலும் இது தொடர்ந்துகொண்டே இருக்கும். அதன்பின்னர் இந்த இலையுதிர் காலத்தில், கர்த்தர் அருளினால், கர்த்தருக்கு சித்தமானால், இன்னும் சில கூட்டங்கள் இங்கே இருக்கும் என்று நாம் நம்புகிறோம்.

8 பிறகு நான் புறப்படுவதற்கு முன்பு, ஒரு சில கேள்விகளைக் கேட்பது ஒரு நல்ல காரியமாக இருக்கும் என்று, நான் எண்ணினேன். நீங்கள் கேள்விகளைக் கேட்கும்போது, ஜனங்களின் இருதயங்களில் என்ன இருக்கிறது என்பதை நீங்கள் கண்டறிகிறீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகையால் உங்களுக்குத் தெரியுமா, இன்றிரவு, ஒருவிதமாக இங்குள்ள ஜனங்களின் சிறு மந்தையோடு, எங்களுடைய இதயத்திலிருந்து ஒரு சிறிய மனந்திறந்த உரையாடலை நடத்தலாம் என்று அப்பொழுது நான் நினைத்தேன். சில சமயங்களில், பிரசங்கம் செய்வதை விட, ஒருவரையொருவர் இன்னும் நன்றாகப் புரிந்துகொள்வது அதிக நன்மை தரும் என்று

நான் நினைக்கிறேன்.

9 இந்த வாரம் அவர் ஜெபத்திற்கு பதிலளிப்பதற்காக அவர் செய்ததை நாங்கள் கண்டதற்காக நாங்கள் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம், அது மிகவும் விசேஷித்ததாய் இருந்து வருகிறது. எனவே நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம், அவ்வளவு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

10 நாம் நேரமும், முடிவு நேரமும் நெருங்கி வருவதைக் காண்கிறோம், ஏதோக் காரியம் சம்பவிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்திருக்கிறோம். அவன் ஒரு—அவன் ஒரு சிந்தனையாளனாக இருந்தால், அது உண்மை என்பதை அறியாதவர் ஒருவரும் இல்லை. நாம் அறிவோம், நாம் காலங்களினூடாக அதை நோக்கிப் பார்க்கிறோம், ஒவ்வொருவரும் அதைக் கவனித்து வந்துள்ளனர். ஆனால், உங்களுக்குத் தெரியும், இப்பொழுது மிக அதிகமாகச் சம்பவிக்கிறது. அது சரியென்று நாம்—நாம் அறிவோம்...வெகுதூரத்தில் இருக்க முடியாது. இப்பொழுது இன்னும் சில நிமிடங்களில் நான் அதன் பேரில் பேசுவேன்.

11 ஆனால் இப்பொழுது, நாம் துவங்குவதற்கு, ஜெபத்திற்காக நம்முடைய தலைகளை அப்படியே வணங்குவோம். நம்முடைய தலைகள் வணங்கியிருக்கையில், தேவனுக்கு முன்பாக ஜெபத்தில் நினைவுகூரப்பட வேண்டும் என்று நாம் விரும்பும் ஏதேனும் ஒன்று நம் இதயங்களில் இருக்கிறதா என நான் யோசிக்கிறேன். அப்படி இருக்குமானால், உங்கள் கையை உயர்த்துங்கள். அவர் புரிந்துகொள்வார், அவர் அதைக் குறித்த எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். நீங்கள், "தேவனே, என்னை நினைவு கூரும்" என்று கூற விரும்புகிற சில வேண்டுகோள். கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

12 எங்கள் பரலோகப் பிதாவே, நாங்கள் இன்றிரவு அந்தக் கிருபையின் சிங்காசனத்தை அணுகும்போது, தேவனுடைய சிம்மாசனத்திற்கும் அவருடைய கிருபைக்கும் முன்பாகத் தைரியமாக வந்து, எங்களுக்குத் தேவையான எந்தவொரு விண்ணப்பத்தையும் கேட்கும்படி நீர் மிகவும் கிருபையுடன் எங்களைக் கட்டளையிட்டிருக்கிறீர். இரண்டு அல்லது மூன்று பேர் உமது நாமத்தில் கூடிவந்தால், நீர் எங்கள் மத்தியில் இருப்பீர் என்று எங்களுக்குச் சொன்னீர். நாங்கள் வாஞ்சித்த எதையும், நாங்கள் கேட்டால், நாங்கள் அதைப் பெற்றுக் கொள்வோம் என்று நாங்கள் விசுவாசித்தால், நாங்கள் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

13 இந்நாளின் நிலைமைகளையும், சபை மற்றும் ஜனங்களின் நிலைமைகளையும் நீர் அறிந்திருக்கிறீர், எங்களுடைய விண்ணப்பங்கள் உமக்கு முன்பாக உள்ளன. இப்பொழுது, கர்த்தாவே, நீர் கரங்களைக் கண்டிருக்கிறீர். நீர் ஜனங்களின் இருதயங்களையும், அவர்களுடைய வாஞ்சைகளையும்,

அவர்களுடைய தேவைகளையும் அறிந்திருக்கிறீர். நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறதை நாங்கள் காண்கிறோம், அது இப்பொழுது நெருக்கமாகக் கூடி வந்து, பெரிய மேகங்கள் அமர்ந்து கொண்டிருக்கின்றன. அநேக நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தீர்க்கதரிசிகள் உரைத்த காரியங்களை, இது வரையிலும் சம்பவிக்காததை நாங்கள் காண்கிறோம், இங்கே நாங்கள் அதை எங்களுடைய நாட்களில் காண்கிறோம்.

14 இப்பொழுது, பிதாவே, நாங்கள் கேட்கிற இந்த ஆசீர்வாதங்களை நீர் எங்களுக்கு அருள வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். வியாதியஸ்தரையும், பாதிக்கப்பட்டோரையும் சுகப்படுத்தும். கர்த்தாவே, ஜீவிக்கிற பரிசுத்த ஆவியின் வல்லமையோடும், நாங்கள் கேட்கிறவைகளை விசுவாசிக்கும் ஜீவனுள்ள விசுவாசத்தோடும் உம்முடைய சபைக்குத் திரும்ப அளியும். நாங்கள் கேட்பதற்கு முன்பே அதை எங்களுக்கு அளிக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயுள்ளது என்று நாங்கள் நிச்சயமுடையவர்களாயிருக்கிறபடியால், நாங்கள் அதைப் பெற்றுக்கொள்கிறோம் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். நாங்கள் தவறாகக் கேட்டுக்கொண்டிருக்கவில்லை, நாங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்காகவே கேட்டுக் கொண்டிருக்கிறோம், எனவே நீர் அதை எங்களுக்கு அருள வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

15 எங்கள் கூடுகையையும், எங்கள் போதகரையும், சபையின் ஊழியர்களையும், ஒவ்வொரு நபரையும், பிரசன்னமாயிருக்கிற கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினர்களையும் ஆசீர்வதியும். கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினராயிராதவர்கள், இன்றைக்கு எங்காவது அடைக்கலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள், வீட்டின் பின்புறத்திற்கு ஒரு வெடிகுண்டுத் தடுப்புப் பதுங்குகுழியை வாங்கும் அவர்கள், தேவனே, கர்த்தராகிய இயேசுவின் பாதுகாப்பான அரவணைப்பின் கீழ் வரட்டும், இந்த ஜீவியம் முடிவுறும்போது இதற்கு அப்பாற்பட்ட ஜீவியம் உண்டு என்பதை அறிந்திருக்கிறோம். வாக்குத்தத்தத்திற்காக உமக்கு நன்றி.

16 நாங்கள் ஒவ்வொரு இருதயத்தையும் உம்முடைய வார்த்தையினால் திருப்திபடுத்தும்படி, இந்தக் கேள்விகளுக்கான பதிலை இன்றிரவு எங்களுக்குத் தாரும். நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

17 கர்த்தருடைய வருகையை நெருங்கிக்கொண்டிருக்கிறது, அது என்ன ஒரு மகத்தான உறுதியாய் உள்ளது!

18 நான் சற்று முன்னர் பேசிக்கொண்டிருந்தேன், யாரோ ஒருவர் *காப்பீட்டைக்* குறித்து ஏதோ ஒன்றைக் கூறினார், அண்மையில் நான் வர்த்தக புருஷர்களோடு அவர்களுடைய மாநாடுகளில் ஒன்றில், ஒரு சர்வதேச மாநாட்டில் இருந்தேன். நான் ஒரு மண்டலத்தில் தான் கலந்து கொண்டேன். உலகம் முழுவதிலும் உள்ள முழு சுவிசேஷ

வர்த்தக புருஷர்களுக்காக நான் பேசுகிறேன். அதன்பின்னர் இந்தத்—இந்தத் தொடர் கூட்டம் மேற்கு கடற்கரையில் நடைபெறும், அங்கே உலகம் முழுவதிலுமிருந்து வந்துள்ள எல்லாப் பிரபலங்களும் அமர்ந்து கொண்டு...மிகவும் கண்ணியமாகவும் உடை உடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் என்னிடத்தில், "யாரோ ஒருவர் உங்களை 'சங்கை' என்று அழைப்பதை நான் கேட்டிருக்கிறேன்" என்றார்.

அதற்கு நான், "ஆம், ஐயா" என்றேன்.

"நீர் ஒரு பிரசங்கியாரா?" என்று கேட்டார்.

அதற்கு நான், "ஆம், ஐயா" என்றேன்.

அவர், "இந்த வர்த்தகர்களோடு நீர் என்ன செய்து கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டார்.

நான், "நான்—நான் ஒரு வர்த்தகன்" என்றேன்.

"ஓ?" அதற்கு அவர், "நீங்கள் எந்த விதமான வியாபாரத்தில் இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

நான், "உறுதி" என்றேன்.

19 அவர் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டதால், நான் *காப்பீட்டைக்* கூறுகிறேன் என்று அவர் நினைத்தார். எனவே அவர் என்னிடத்தில் கூறினார், அவர், "நீங்கள் எந்த நிறுவனத்துடன் இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

நான், "பரலோகக் குழுமம்" என்றேன்.

அதற்கு அவர், "எனக்கு அந்த ஒன்று தெரியாது என்று நான் நம்புகிறேன்" என்றார்.

நான், "நீங்கள் எந்த—எந்த விதமான காப்பீட்டை விற்கிறீர்கள்?" என்று கேட்டேன்—கேட்டேன்.

20 நான், "நான் ஒருபோதும் *காப்பீடு* என்று கூறவில்லை, நான் *உத்தரவாதம்* என்றே கூறினேன்."

"நீர் என்ன கூறுகிறீர்?" என்று கேட்டார்.

நான் கூறினேன்:

> ஆசீர்வதிக்கப்பட்ட உறுதி, இயேசு
> என்னுடையவர்!
> ஓ, என்னே தெய்வீக மகிமையின் ஒரு முன்ருசி!
> தேவனால் கிரயத்திற்கு கொள்ளப்பட்ட
> இரட்சிப்பின் சுதந்தரவாளி,
> அவருடைய ஆவியினால் பிறந்தேன்,
> அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டேன்.

21 எனவே, அன்றிரவு தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக நான் அறிமுகப்படுத்தப்பட்டபோது, நான் அதைக் கூறினேன். நான், "இப்போது, என்னிடம்—என்னிடம் கொள்கைகள் உள்ளன,

இங்குள்ள அல்லது நாடு முழுவதும் உள்ள உங்களில் யாரேனும், ஒரு கொள்கையின் பேரில் ஆர்வமுள்ளவர்கள், ஆராதனைக்குப் பிறகு, நான் அதை உங்களுடன் பேச விரும்புகிறேன். உறுதி, ஆசீர்வதிக்கப்பட்ட உறுதி!" என்றேன்.

22 இப்பொழுது, இந்தக் கேள்விகளைக் கேட்கையில், உங்களுடைய—உங்களுடைய சிந்தனையை அணுகுவதற்கு இது ஒரு சிறு அணுகுமுறையைக் கொடுக்கும் என்று நான் நினைத்தேன். என்னிடம் இரண்டு உள்ளன. நான் வாசலுக்குள் வந்தபோது, பில்லி இன்னும் அதிகமாக இருப்பதாகக் கூறினான், ஆனால், உண்மையாகவே, அவர்களை நோக்கிப் பார்க்க எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கவில்லை. அதற்குப் பதிலளிப்பதற்கு முன், நான் வேதப்பூர்வமாகச் சொல்வது சரிதானா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன், ஏனென்றால் நீங்கள்...அது அந்தவிதமாக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினீர்கள், அல்லது நான் அதற்குப் பதிலளிக்கும் முன்பு. எனவே ஒருகால் நான் அவைகளை வேறொரு நேரத்திற்கு நிறுத்தி வைக்கலாம். இப்பொழுது, ஒன்று...இப்பொழுது இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், நினைவில் கொள்ளுங்கள், என்னால் முடிந்தவரை நான் மிகச் சிறந்த முறையில் பதிலளித்துக் கொண்டிருக்கிறேன்.

23 ஆராதனைகளில் கேட்கப்படும் கேள்விகளுக்கு நான் பதிலளிப்பதில்லை. நான் ஒரு முறை அதை முயற்சித்தபோது, சிக்கலில் மாட்டிக் கொண்டேன். அவர்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டனர். அது திரு. ஆலனைப் பற்றியதாக இருந்தது, அல்லது கைகளிலும் முகத்திலும் இருந்த இரத்தம், எண்ணெய் போன்ற தடயங்கள் பரிசுத்த ஆவியின் அத்தாட்சியாக இருப்பதைப் பற்றியதாக இருந்தது. நான், "சரி, அதைக் குறித்து எனக்குத் தெரியாது" என்றேன், நான், "நான் அதைக் குறித்த எதையுமே வேதாகமத்தில் ஒருபோதும் கண்டதில்லை" என்றேன். நான், "ஆனால் நான்—நான் நினைக்கிறேன்...இந்தச் சகோதரனைப் போல என்னால் பிரசங்கிக்க முடிந்தால், நான் உணர்வுகளின் மேல் நம்பிக்கை வைக்கமாட்டேன். நான் சுவிசேஷத்தை மாத்திரமே பிரசங்கிக்கிறேன்" என்று கூறிவிட்டு சென்றேன்.

24 எனவே அவர்கள் சர்வதேச அளவில், "அன்புள்ள சகோதரன் பிரான்ஹாம்..." என்ற ஒரு கடிதத்தைப் பெற்றுள்ளனர், எனவே அது எல்லாவிடங்களுக்கும் சென்றது. அவர்கள் அதை தவறாகப் புரிந்து கொண்டனர். மேலும் நாங்கள் அந்த ஒலிநாடாக்களை அவர்களுக்கு அனுப்பி, அவர்கள் அதை மீண்டும் போட்டுக் கேட்கச் அனுமதித்து... நான் "அந்த மனிதனைக் குற்றப்படுத்தினேன்" என்று கூறினர். நான்—நான் அதைச் செய்யவில்லை. நான் எந்தச் சகோதரனையும் ஒருபோதும் கண்டிக்கவில்லை. சில சமயங்களில் நான் அவர்களோடு இணங்காமல் போகலாம், ஆனால் அது நட்பு அடிப்படையில்தான்.

25 அதன்பின்னர் இங்கே அண்மையில் ஒரு மனிதன், இந்த

மனிதனைக் குறித்து, *பிசாசுகளின் கடித்தல்* என்பதைக் குறித்து ஒரு புத்தகத்தை எழுதினார். அப்போது, ஒருவேளை, பதில் கூறவோ அல்லது அவருக்குத் தெரியப்படுத்தவோ இதுதான் சரியான நேரம் என்று நான் நினைத்தேன். அந்தப் புத்தகத்தை எழுதிய மனிதர், களத்தில் இருந்த ஒவ்வொரு சுவிசேஷகரையும் என்னைத் தவிர மற்ற அனைவரையும் விமர்சித்திருந்தார், அவர் என்னுடைய கூட்டத்தில் அமர்ந்திருந்தார், எனவே நான், "நான் பாராட்டுகிறேன், விமர்சனத்தை அல்ல, ஆனால்," என்று கூறி, "அந்தச் சகோதரன், வெளிப்படையாக, அவர் அதைக் *கிறிஸ்டியன் டைஜஸ்ட்* என்ற பத்திரிக்கையில் பாராட்டினார், நான் ஒருபோதும் காணிக்கை எடுக்காதவன் என்றும் கூறி, ஜனங்களிடம் பணத்திற்காகப் கெஞ்சவில்லை என்றும், அது போன்ற காரியங்களை அவர் பாராட்டினார்." அங்கே அமர்ந்திருந்த மனிதன். ஆனால் அந்த மனிதன் சகோதரன் ஆலனைக் குறித்து கூறியிருந்த ஏதோ ஒரு காரியம் சரியல்ல என்பதை நான் அறிந்த ஒரு சந்தர்ப்பம்.

அவர், "ஏ.ஏ. ஆலன் இந்தப் *பிசாசுகளின் கடித்தல்* என்ற புத்தகத்தை எழுதினார்" என்றார்.

26 இப்பொழுது, ஏ.ஏ. ஆலன் அந்தப் புத்தகத்தை ஒருபோதும் எழுதவில்லை. அந்தப் புத்தகத்தை எழுதியவரை நான் அறிவேன். மேலும் நான், "இப்பொழுது, அதை எழுதிய மனிதன், அதை எழுதியவர் யார் என்று வெளியே சென்று சரிபார்க்கும் அளவுக்குப் போதிய உத்தமமாயிருந்திருக்கவில்லை என்றால், அவர் சகோதரன் ஆலனை விமர்சிப்பதற்கு முன்பு, அவருடைய மற்ற சில விமர்சனங்கள் இந்தச் சகோதரர்களுக்கு உரியதல்ல என்று நான் ஒருவிதமாக நம்புகிறேன்" என்று கூறினேன். பார்த்தீர்களா? அங்கேயே அமர்ந்திருந்த அந்த மனிதர் எனக்காகப் பரிந்து பேசினார். ஆனால், அவருடைய கூற்று தவறானது என்பதை அவருக்குத் தெரியப்படுத்துவதுதான் என் நோக்கமாக இருந்தது, நீங்கள் பாருங்கள், சகோதரன் ஆலன் *பிசாசுகளின் கடித்தல்* என்னும் புத்தகத்தை எழுதவில்லை.

27 இப்பொழுது, இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிப்பதில், அவைகள் என்னுடைய மிகச்சிறந்த அறிவிற்க்கெட்டினவைகளாய் இருக்கின்றன. மேலும்...நான் அவைகளுக்கு வேத வாக்கியங்களைக் கொண்டு பதிலளிக்க முயற்சிப்பேன்.

28 இப்பொழுது, முதலாவது கொரிந்தியர் 7-ம் அதிகாரம் 15-ம் வசனத்தில் காணப்படுகிறது என்று நான் நினைக்கிறேன். எனவே இப்பொழுது நாம் அந்த வேதவாக்கியத்திற்குச் சென்று, அது எப்படியிருக்கிறது என்று பார்ப்போம், கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிற இந்த விலையேறப்பெற்ற நபருக்கு நம்மால் உதவி செய்ய முடியுமா என்று பார்ப்போம். இப்பொழுது. முதலாம் கொரிந்தியர், 7-ம் அதிகாரம், 15-ம் வசனம். இப்பொழுது அந்த நபர்

இங்கு இருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது இந்த விதமாக அது வாசிக்கப்படுகிறது:

> *ஆகிலும், விவாகமாகாதவன் பிரிந்துபோனால் பிரிந்துபோகட்டும், இப்படிப்பட்ட விஷயத்தில், சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்களல்ல. சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.*

169. இப்பொழுது. **முதலாம் கொரிந்தியர், 7-ம் அதிகாரம், 15-ம் வசனம்.** இப்பொழுது அவர்கள் கேட்ட கேள்வி: **சகோதரன் பிரான்ஹாம், ஒரு சகோதரி அல்லது ஒரு சகோதரன் மறுமணம் செய்து கொள்ள சுதந்திரம் உண்டு என்று இது பொருட்படுத்துகிறதா?** இல்லை.

29 பாருங்கள், நீங்கள் அங்கே அவருடைய கேள்வியையும், அவர் என்ன கூறுகிறார் என்பதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் விடுதலையாகவில்லை. பாருங்கள், அது வேதத்தில் ஒரு முரண்பாட்டை உண்டாக்கும், வேதவாக்கியங்கள் தங்களுக்குள் முரண்படுகிறதில்லை. புரிகிறதா? இப்பொழுது, நாம்...நீங்கள் பாருங்கள், அதாவது நீங்கள் அந்த வேதவசனத்தை எவ்விதம் எடுக்க முடியும் (சரியாக ஒரு வசனத்தை வாசிப்பதன் மூலம்) நீங்கள் கூற விரும்புகிற எந்தக் காரியத்தையும் உங்களுடைய சிந்தைக்கு பொருந்தும்படியாகக் கூற முடியும். ஆனால் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்ற சிந்தனையை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

30 உதாரணமாக, நான் சகோதரன் நெவிலிடம் பேசிக் கொண்டிருந்தபோது, "நிர்வாகம்" என்று நான் கூறினதை நீங்கள்—நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

31 அதன்பின்னர் நீங்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று, நீங்கள், "அவர் எதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறார் என்று உங்களுக்குத் தெரியுமா? நாங்கள் அவரை இன்றிரவு சலிப்படையச் செய்துவிட்டோம்" என்றனர். பார்த்தீர்களா? "இல்லை," மற்ற நபர், "அது தவறு, அது அவர்—அவர் ஒரு நிர்வாகச் சபை கட்டணத்தைச் செலுத்த வேண்டியவராயிருக்கிறார் என்பதையே பொருட்படுத்துகிறது" என்று கூறுவார். மற்றொருவரோ, "ஓ, இல்லை, அவர் அந்தவிதமான அர்த்தத்தில் கூறவில்லை, அவர் வீட்டின் பக்கத்தில் உள்ள பலகையைக் குறிக்கிறார்" என்கிறார். மற்ற நபரோ, "இல்லை, நான் என்னவென்று உங்களுக்குச் சொல்கிறேன், அவர் ஒரு துளையை உண்டாக்குவதை குறித்துப் பேச முயற்சித்துக் கொண்டிருந்தார் என்று நான் நினைக்கிறேன்" என்று கூறலாம். புரிகிறதா? பார்த்தீர்களா?

32 நீங்கள் அந்த உரையாடலைக் கண்டறிய வேண்டும், அப்பொழுது நீங்கள் எதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறீர்கள்

என்பதை நீங்கள் அறிந்துகொள்கிறீர்கள், ஏனென்றால் பவுல் இங்கே சில சமயங்களில் அவர்களுடைய கேள்விகளுக்குப் பதில் கூறிக்கொண்டிருக்கிறான்.

33 சில நேரங்களில் அவர்கள், "வேதம் தனக்குத்தானே முரண்படுகிறது" என்று கூறுகின்றனர். நான் அதைக் கண்டறிய வேண்டும். அது அவ்வாறு இல்லை. நான்—நான் முப்பத்திரண்டு ஆண்டுகளாகப் பிரசங்க பீடத்திற்கு பின்னால் இருக்கிறேன், நான் இன்னமும் ஒரு முரண்பாட்டைக் கண்டதேயில்லை. பார்த்தீர்களா? அது தாமே முரண்படுகிறதில்லையே! அது மிகவும்...அதை நீங்கள் புரிந்து கொள்ளாமல் முரண்படுகிறீர்கள், பாருங்கள். பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துகிறவராக, வார்த்தையை வெளிப்படுத்துகிறவராக இருக்கிறார். ஆகையால், இந்த முரண்பாடு...

34 பாருங்கள், பவுல் அந்த ஜனங்களுக்கு எழுதுகிறான், "நீங்கள் *இன்ன-மற்றும் இன்ன* ஒரு காரியத்தைக் கேட்டீர்கள்" என்று கூறுகிறான். அவன், மாத்திரம், நீங்கள் அதைக் கேட்டதாக அவன் கூறவில்லை, அவன் அதைக் *கூறிக்கொண்டிருக்கிறான்.* அதன்பின்னர் இங்கே அவன் திரும்பி அவர்களுக்குப் பதில் கூறுகிறான், அது அவர்கள் கேட்டதற்கு முரணாக உள்ளது.

35 அவர்கள், "நாங்கள் *அவ்வாறு* செய்கிறோம், *இன்னார், இன்னார்"* என்று கேட்டனர். பவுல் திரும்பி வேறு ஏதோ ஒன்றைக் கூறுகிறான், பாருங்கள், அது ஒரு முரண்பாடாயிருப்பது போன்று காணப்படுகிறது. அது அல்ல. நீங்கள் முழு வசனத்தையும், முழு அதிகாரத்தையும் வாசிப்பீர்களானால், அவர்கள் அவனுக்கு எழுதியுள்ளதை அவன்—அவன் விளக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறான் என்பதை நீங்கள் கண்டறிவீர்கள்.

36 இப்பொழுது, சரியாக இங்கே அது கொடுக்கிற மாதிரி இருக்கும்...அந்தவிதமாகவே நீங்கள் வேதாகமத்தில் முரண்பாடுகளைப் பெற்றுக் கொள்கிறீர்கள், ஆனால் அது அவ்வண்ணமாக இருப்பதில்லை. இப்போது, இங்கே அந்த நபர் தெரிந்துகொள்ள விரும்புகிறார் என்றோ, அல்லது அவர்கள் தெரிந்துகொள்ள விரும்பும் கேள்வி இதுதான் என்றோ தெரிகிறது:

> **கர்த்தருக்குள் ஒரு சகோதரனோ சகோதரியோ, தங்கள் துணையை விட்டுப் பிரிந்து மீண்டும் திருமணம் செய்துகொண்டால், அவர்களால் சுதந்திரமாக இருக்க முடியுமா?** இல்லை.

37 இப்பொழுது நாம் 10-ம் வசனத்திலிருந்து துவங்குவோம்:

> *விவாகம்பண்ணிக்கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது:* (புரிகிறதா?) *மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்துபோகக்கூடாது.*(புரிகிறதா?)

பிரிந்துபோனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள், அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள்; புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது. (அவை கர்த்தருடைய கற்பனைகள், பாருங்கள்.)

மற்றவர்களைக்குறித்துக் கர்த்தர் அல்ல, நானே சொல்லுகிறதாவது:(புரிகிறதா?) *சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும்...*

38 இப்போது அவனுடைய பொருளைக் கவனியுங்கள். மேலும் இதற்கு முன்பிருந்து இந்த அத்தியாயம் முழுவதும் தொடர்ந்து படியுங்கள், "நாம் ஒரு மனைவியைத் திருமணம் செய்து கொண்டால், அவள்...நாங்கள்...நான் திருமணம் செய்து கொண்டேன், நான் ஒரு விசுவாசி ஆனேன்" என்றும், என் மனைவி ஒரு விசுவாசியாயிருக்கவில்லை, நான் அவளைத் தள்ளிவிடட்டும்" என்று அவர்கள் நினைத்ததை நீங்கள் காண்கிறீர்கள். ஓ, இல்லை, அது அதுவல்ல, உங்களால் அதைச் செய்ய முடியாது, பாருங்கள். பார்த்தீர்களா?

...சகோதரனொருவனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும், அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால், அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக்கடவன். (அது, விவாகத்தின் காரணமாக அல்ல, அது அவிசுவாசத்தின் காரணமாகும். மறுபடியும் "மறுமணம் செய்து கொள்ளக் கூடாது." பாருங்கள், அவளோடு தரித்திருங்கள்!)

அப்படியே ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் அவிசுவாசியாயிருந்தும், அவளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால், அவள் அவனைத் தள்ளிவிடாதிருக்கக்கடவள். (அது உண்மை! பார்த்தீர்களா?)

என்னத்தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்; அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே; இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமாயிருக்கின்றன.

ஆகிலும், அவிசுவாசி பிரிந்துபோனால் பிரிந்துபோகட்டும்,

39 இப்பொழுது, அவிசுவாசி, "நான் இனிமேல் உன்னோடு வாழப் போவதில்லை, நீ ஒரு கிறிஸ்தவனாகிவிட்டாய்" என்று கூறினால். என்று...ஒரு மனிதன் தன் மனைவியிடம், "நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறபடியால், நாம் ஒரு காலத்தில் இருந்த உலகப் பிரகாரமான காரியங்களை விட்டு விட்டுப் போகப் போகிறபடியால், நான் உன்னை விட்டுச் செல்லப் போகிறேன்" என்று சொல்கிறான்.

இப்பொழுது, அதைக் குறித்து உங்களால் ஒன்றும் செய்ய முடியாது, அவன் புறப்பட்டுச் செல்லட்டும். பார்த்தீர்களா?

40 அல்லது அந்த ஸ்திரீ தன்னுடைய கணவனிடத்தில், "நான் அந்த பரிசுத்த-உருளாளர் கூட்டத்தோடு சேரப் போவதில்லை. நான் இதைச் செய்யப் போவதில்லை! நான் உன்னை விட்டுப் பிரிந்து செல்வேன்" என்று கூறுவதாக வைத்துக் கொள்வோம். நீங்கள் சபையை விட்டுச் செல்லாதீர்கள், நீங்கள் அவள் பிரிந்து செல்ல விட்டு விடுங்கள். புரிகிறதா?

41 அப்படிப்பட்ட ஒரு காரியத்தில் ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி அடிமைத்தனத்தின் கீழ் இல்லை, அதாவது, உங்களுடையத் துணை உங்களைத் தள்ளிவிட்டு, புறப்பட்டுச் செல்ல விரும்பினால். நீங்கள் அவர்களை அப்படியே பற்றிக் கொள்ள வேண்டியதில்லை. அவர்கள் உங்களை விட்டுப் பிரிய விரும்பினால், கிறிஸ்துவின் நிமித்தமாக உங்களை விட்டுப் பிரிந்தால், அவர்களைப் போகவிடுங்கள். ஆனால் நீங்கள் மறுமணம் செய்து கொள்ள முடியாது! "ஆனால் தேவன் நம்மைச் சமாதானத்திற்கு அழைத்திருக்கிறார்." பார்த்தீர்களா? இப்பொழுது, நீங்கள் மறுபடியும் மறுமணம் செய்து கொள்ளலாம் என்றல்ல, அதை அவன் ஏற்கனவே கூறிவிட்டான், ஆனால் அவர்கள் விருப்பமில்லாமல் இருந்தால், நீங்கள் ஒரு அவிசுவாசமான கணவனோடு அல்லது ஒரு அவிசுவாச மனைவியோடு வாழ வேண்டியதில்லை.

42 அவர்கள் விரும்பினால், "இப்பொழுது, நீங்கள் சபைக்குச் செல்லுங்கள், நீங்கள் அங்குச் செல்ல விரும்பினால், அது உங்களுடைய வேலை. நீங்கள் உங்களுடைய சபைக்குச் செல்ல விரும்பினால், நீங்கள் தொடர்ந்து செல்லுங்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் அதை விசுவாசிப்பதில்லை. நான்—நான் உங்களுக்காக எந்தக் காரியத்தையும் செய்வேன், நான் உங்களுடைய வழியில் நிற்கமாட்டேன், நீங்கள் முன்னேறிச் செல்லுங்கள்," என்று கூறினால், அப்பொழுது நீங்கள் அங்கேயே தரித்திருக்க வேண்டும், உங்களுடைய பரிசுத்தமாக்கப்பட்ட ஜீவியம் அந்த விசுவாசியைப் பரிசுத்தமாக்கி, அவர்களை விசுவாசிக்கச் செய்யும் என்பதை அறியாமலிருக்கிறீர்கள். பார்த்தீர்களா? இருபுறமும், புருஷனோ அல்லது ஸ்திரீயோ, பாருங்கள். நீங்கள்...

43 ஆனால் இப்பொழுது, "நான், சகோதரன் பிரான்ஹாம், நான் விவாகம் செய்து கொண்டேன், என் மனைவி ஒரு அவிசுவாசி, இங்கே ஒரு சகோதரியை நான் மணந்து கொள்ள முடியும். நான் இந்த ஒன்றை விட்டுவிட்டு, அந்த ஒன்றை மணந்து கொள்ளப் போகிறேன்" என்று கூறலாம். ஓ, வேண்டாம்! நிச்சயமாக வேண்டாம்! உங்களுடைய வாக்குறுதி மரணம் உங்களைப் பிரிக்கும் வரை உள்ளது, வேதாகமத்தின்படி, உங்களுடைய துணை மரிக்கும் வரையிலும் நீங்கள் விவாகம் செய்துகொள்ள இந்த உலகத்தில்

எந்தக் காரியமும் அனுமதிக்காது. அது உண்மை. ஒரே காரணம், ஒரு துணை மரித்தாலொழிய வேறு எந்த வகையிலும் மறுமணம் செய்து கொள்ள முடியாது. அவ்வளவுதான். பார்த்தீர்களா?

44 உங்களால் அதைத் தன்னையே முரண்படச் செய்ய முடியாது. எனவே அதற்கு முன்னும் பின்னும் உள்ள வசனங்களை அப்படியே வாசித்துப் பாருங்கள், அப்பொழுது அவன் எதைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறான் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். இப்பொழுது, இதன் பொருள் இங்கே, அல்ல...பாருங்கள்:

ஒரு சகோதரி அல்லது ஒரு சகோதரன் மறுமணம் செய்து கொள்ள சுதந்திரம் உண்டு என்று இது பொருட்படுத்துகிறதா?

45 இல்லை ஐயா. பாருங்கள், அவன் அதை முதலில் விளக்கினான். பாருங்கள்:

விவாகம்பண்ணிக்கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது: மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்துபோகக்கூடாது.

பிரிந்துபோனால் அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள், அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள்;... (புரிகிறதா?)

46 ஒரு விசுவாசி திரும்பவுமாக மறுவிவாகம் செய்யும்படிக்கு உயிரோடிருக்கின்ற வாழ்க்கை துணையுடன் ஒப்புரவாகுதல் என்பதைப் போன்ற காரியங்கள் கிடையவே கிடையாது.

இப்பொழுது, இங்கே மற்றொன்று உள்ளது. இரண்டாவது இந்த விதமாக உள்ளது:

170. மகத்தான வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில் கடைசி உயிர்த்தெழுதலில் துன்மார்க்கர் என்ன விதமான சரீரத்தை உடையவர்களாக இருப்பார்கள்?

47 அந்தப் பாவியானவன் உயிர்த்தெழுதலில் அவன் பாவம் செய்திருக்கிற சரீரத்திலே நியாயந்தீர்க்கப்படுவான். பார்த்தீர்களா? அவன் உயிர்த்தெழுதலில் நியாயத்தீர்ப்பில் நிற்க வேண்டும்.

48 *உயிர்த்தெழுதல்* மாற்றீடு அல்ல, அது "கீழே சென்றவர்களை மேலே கொண்டு வருகிறது." இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தபோது, அவர் கீழே சென்ற அதே சரீரமாகவே இருந்தார், அவர் அதேவிதமான ஒரு சரீரத்தில் உயிர்த்தெழுந்தார். நாம் கீழே செல்கிற அதே சரீரத்தில் எழும்புகிறோம்; அது ஒரு உயிர்த்தெழுதலாயுள்ளது, மாற்றீடு அல்ல.

49 இப்பொழுது, நாம் சரீரத்தில் செய்யப்படும் பாவங்களின்படி நியாயந்தீர்க்கப்படுவோம் என்று வேதம் கூறுகிறது. துன்மார்க்கன் எழும்பும்போது, அவன் பாவம் செய்த அதே சரீரத்தில், அதேக் காரியத்தில் நியாயந்தீர்க்கப்படுவான்.

171. "ஆதாம் தன் மனைவி ஏவாளை அறிந்திருந்தான்; மற்றும்" ["மற்றும்" என்ற வார்த்தை ஆங்கில வேதாகமத்தில் உள்ளது—மொழிபெயர்ப்பாளர்] இடையினைச் சொல் **"அவள் கர்ப்பவதியாகி காயீனைப் பெற்றாள்." நீங்கள் போதிக்கும் யாவற்றையும் நான் விசுவாசிக்கிறேன், ஆனால் நான்—நான் எப்படி ஒருவருக்கு பதிலளிப்பேன் ஆதாம் அவளை அறிந்த பிறகு, இணைச்சொல்லின் நிமித்தமாக *மற்றும்* அவள் கர்ப்பவதியாகவில்லை என்று யார்—யார் கூறுகிறார்? "ஆதாம் தன் மனைவியை அறிந்திருந்தான்; அவள் கர்ப்பவதியாகி காயீனைப் பெற்றாள்."**

50 இப்பொழுது, பெரியவர்களாகிய நாம் *அறிந்தான்* எதைக் குறிக்கிறது என்பதை அறிவோம். இப்பொழுது, கேள்வி இணைச்சொல்லைக் குறித்ததாயுள்ளது. இப்பொழுது, நண்பர்களே, நீங்கள் கவனிப்பீர்களேயானால், பாருங்கள், நீங்கள்—நீங்கள் வேதம் ஒரு இடத்தில் ஒரு காரியத்தையும் மற்றும் வேறு ஏதோ ஒன்றையும் கூற முடியாது. அது எல்லா நேரத்திலும் ஒரே காரியத்தைக் கூற வேண்டும். நீங்கள் அதை இங்கே ஒரு காரியத்தையும், இங்கே வேறு ஏதோ ஒன்றையும் கூறினால், அப்பொழுது உங்களுடைய வியாக்கியானம் தவறாகும். பார்த்தீர்களா? உங்களால் அதைச் செய்ய முடியாது. நீங்கள் ஏவாளை சர்ப்பத்தினால் ஏமாற்றி, அதன்பின்னர் அவளை மீண்டும் வேறு எங்காவது வஞ்சிக்கப்படுவதைக் கண்டறிய முடியாது. பார்த்தீர்களா? அவள் கர்ப்பந்தரித்தபோது முதன் முறையாக அவள் வஞ்சிக்கப்பட்டாள். நீங்கள் அவளை இரண்டாவது முறையாக வஞ்சிக்கப்பட முடியாது.

51 உங்களுடைய இணைப்புச் சொற்களை நான் உங்களுக்குக் காண்பிக்கட்டும். வேதத்தை வாசிக்கையில், உங்களுடைய இணைச் சொற்கள் எங்கே செல்கின்றன என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். *இணைச்சொல்* உங்களுடைய வாக்கியத்தை ஒன்றாக இணைத்துக் கொண்டிருக்கிறது. பார்த்தீர்களா? இப்பொழுது இதைக் கவனியுங்கள். இப்பொழுது, ஆதியாகமம் 1:26-ல், இந்த இணைச் சொல்லைக் கவனியுங்கள், அதன்பின்னர் நீங்கள் இதை விளக்குங்கள், அதன்பின்னர் எப்படி அவன்...ஆதாம் தன் மனைவியை அறிந்தான் என்பதை நான் உங்களுக்குக் கூறுவேன். ஆதியாகமம் 1-ம் அதிகாரம் 26-ம் வசனத்திலிருந்து துவங்குகிறது. இப்பொழுது, கூர்ந்து கவனியுங்கள். தேவன் தம்முடைய சிருஷ்டிப்பை இப்பொழுது சிருஷ்டித்திருக்கிறார், தேவன் பூமியானது ஊரும் சகல பிராணிகளைப் பிறப்பிக்கவும், பூமியானது எல்லா காரியங்களையும் பிறப்பிக்கவும் செய்தார். இப்பொழுது, 26-ம் அதிகாரத்தில்...ஆதியாகமம் 1-ம் அதிகாரம் 26-ம் வசனம்:

பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது

ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக;... அவர்கள் (மனிதன்)...(*அவன்* அல்ல; "அவர்கள்," பாருங்கள், பன்மை) *அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும்...*("மற்றும், மற்றும், மற்றும்" இணைப்பதைப் பார்த்தீர்களா?)...*பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.*

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். (புருஷனும் ஸ்திரீயும் இருவரையும்).

பின்பு தேவன் அவர்களை நோக்கி: (அவருடைய சிருஷ்டிப்பின் பின்னர்) *நீங்கள் பலுகிப்* (மற்றும்) *பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி...தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.*

52 இணைப்பின் பின் இணைப்பு என்ன...மனிதன் பூமியை நிரப்பி. *மற்றும்,* பலுகிப் பெருகி, அதன் பின் பூமியை கீழ்ப்படுத்துதல்; அது ஆயிரவருட அரசாட்சிக்கு உரியது. பார்த்தீர்களா? சரி, "பூமியை கீழ்ப்படுத்தி." சரி:

...மற்றும் சமுத்திரத்தின் மச்சங்களையும் மற்றும் ஆகாயத்துப் பறவைகளையும், மற்றும் பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள்.

53 இப்பொழுது, தேவன் தம்முடைய சொந்த சாயலில் மனிதனை சிருஷ்டித்து, அவர்கள், மனிதன், பூமி முழுவதின் மேலும் ஆதிக்கம் செலுத்தி, அதைக் கீழ்ப்படுத்தி மற்றுமுள்ள ஒவ்வொரு காரியத்தையும் செய்ய அனுமதித்து, அவர்கள் இதைச் செய்ய அனுமதித்து, அவர் செய்த ஒவ்வொரு காரியத்தையும்...மற்றும் மச்சங்கள் மேலும் ஆதிக்கம் செலுத்த விட்டார். அதன்பின்னர் நாம் ஆதியாகமம் 2:7-ல் கண்டறிகிறோம்...இதைக் கவனியுங்கள். தேவன் பூமியை உண்டாக்கி, மனிதனை சிருஷ்டித்து, அவனுக்குப் பூமியின் மேல் ஆதிக்கத்தைக் கொடுத்துவிட்ட பிறகு, அவன் பெற்றுள்ள எல்லாவற்றையும் அவனுக்கு அளித்து, தேவன் அவைகளை சிருஷ்டித்து, அவர்களைப் பெருக-...பெருகவும், பூமியை நிரப்பவும், இந்த எல்லாக் காரியங்களையும் சொன்னார், வானங்களையும், பூமியையும், மற்றுமுள்ள ஒவ்வொரு காரியங்களையும், மேலும் ஏழு வசனங்களுக்குப் பிறகு, "*மற்றும்* [ஆங்கிலத்தில் 'மற்றும்' என்று தொடங்குகிறது—மொழிபெயர்ப்பாளர்] தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கினார்." "மற்றும்!" இதோ அவர் (*மற்றும்,*

இணைப்புச் சொல்.) ஏற்கனவே சிருஷ்டிக்கப்பட்ட ஒரு மனிதனை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார். பார்த்தீர்களா? ஒரு மனிதனை உருவாக்குதல்:

> (அவருடைய வாக்கியத்தை ஒன்றாக இணைத்து) *தேவனாகிய...மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை* (சுவாசத்தை) *அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.*

54 இப்பொழுது, அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்! அவர் ஆதியாகமம் 1:26 முதல் 28 முடிய உள்ள வசனங்களில் மனிதனையும், ஸ்திரீகளையும், புருஷரையும் உண்டாக்கினப் பிறகு, அவர் தம்முடைய சொந்த சாயலில் மனிதனை உண்டாக்கி, அவனைச் சிருஷ்டித்து, அவனுக்கு அளித்து, இராஜ்ஜியங்களை கீழ்படுத்தினார், அவனுக்கு இந்த எல்லா வல்லமைகளையும், மற்ற எல்லாவற்றையும் அவனுக்குக் கொடுத்தார், அதே சமயத்தில் அவர் அந்த மனிதனை இன்னும் சிருஷ்டிக்கவில்லை.

55 பாருங்கள், சாத்தான் ஏற்கனவே ஏவாளை வஞ்சித்துவிட்டான். உண்மையாகவே, ஆதாம் அவளை அறிந்தான், ஆனால் அவள் ஏற்கனவே வஞ்சிக்கப்பட்டிருந்தாள். ஏனென்றால் இங்கே முன்னே அவன்...அவர்கள்...அவர்கள் வருவதற்கு முன்பு...அவர்கள் நியாயத்தீர்ப்புக்குள் வரும்போது, அவர் கூறினார்...தேவன் அவர்களை ஒன்று சேர்த்து, "இதைச் செய்தது யார்?" என்று கேட்டார். கேள்வியை அவர்களிடம் கேட்டார்.

ஆதாம், "நீர் எனக்கு அளித்த ஸ்திரீ" என்றான்.

அப்பொழுது அந்த ஸ்திரீ, "சர்ப்பம் என்னை வஞ்சித்தது" என்றாள்.

56 தேவன் அவர்கள்மேல் ஒரு சாபத்தையும், அதைப் போன்ற ஒவ்வொரு காரியத்தையும் வைத்தார். *பின்பு* ஆதாம் தன் மனைவியை அறிந்தான், பாருங்கள், அவள் ஏற்கெனவே வஞ்சிக்கப்பட்டு ஒரு தாயாக ஆன பிறகு. ஆதியாகமம் 1:26-ல் தேவன் மனிதனை உண்டாக்கினார், அதே சமயத்தில் அவன் இன்னும் உருவாக்கப்படாமல் இருந்தது போலவே. பார்த்தீர்களா? சரி.

57 இப்பொழுது கவனியுங்கள், நாம் இங்கே கீழே இறங்கி, இதையும் கூட வாசிப்போம்:

> *ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று...; ஏனெனில், அவள் ஜீவனுள்ள காரியங்களுக்குத் தாயானாள், எல்லா... அல்லது ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்.* அவனுடைய மனைவி...அந்த ஸ்திரீயை மனைவி என்று அழைத்தான். அவள்...அல்லது ஸ்திரீயாய் இருந்த காரணத்தால் அவள் ஜீவனுள்ள காரியங்களுக்கெல்லாம்...

*...**கர்த்தர்** ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்.*

58 இப்பொழுது, இப்பொழுது மீண்டும் ஆதியாகமம் 1:21-ல் கவனியுங்கள், தேவன் சமுத்திரத்தில் திமிங்கலங்களை சிருஷ்டித்தார். அவர் ஒவ்வொரு காரியத்தையும் செய்து, சிருஷ்டிப்பை உண்டாக்கி, தம்முடைய சொந்த சாயலில் மனிதனை உண்டாக்கினார். மனிதனை உண்டாக்கினார், "ஒரு" மனிதன் அல்ல, முழு மனிதனும், அவர்கள் எல்லோரையும் தம்முடைய சொந்த சாயலில் உண்டாக்கினார். பார்த்தீர்களா? தேவனுடைய சாயலின்படியே அவர் அவர்களைச் சிருஷ்டித்தார்; அந்தவிதமாக அவனை ஆணும் பெண்ணுமாக இரண்டையுமே சிருஷ்டித்தார்.

59 இப்பொழுது, அவர் தம்முடைய சொந்த சாயலில் மனிதனை உண்டாக்கினப் பிறகு, அவர் இங்கே அவனை ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்த பிறகு, இங்கே அவர் பூமியின் மண்ணிலிருந்து மனிதனை உண்டாக்கினார் என்பதை நாம் இங்கே கண்டறிகிறோம்.

60 அதன்பின்னர், அவர் அதைச் செய்தபிறகு, அவர் அவனை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினப் பிறகு, அதன்பின்னர் அவர் மீண்டும் இங்கு வந்து, அவர் ஏற்கனவே அவனை உண்டாக்கின பிறகு, அவனுக்கு ஒரு ஸ்திரீயை உண்டாக்குகிறார். பார்த்தீர்களா?

61 பாருங்கள், உங்களுடைய இணைச்சொல் அந்த வாக்கியத்தை ஒன்றாக இணைத்துக் கொண்டிருக்கிறது. அது கூறப்பட்டதைப் போலவே, இப்பொழுது, *இங்கே*, "தேவன் தம்முடைய சொந்த சாயலில் ஒரு மனிதனை சிருஷ்டித்தார், அவருடைய சாயலின்படியே," அது தேவன் தம்முடைய சிந்தையில், அவர் கொண்டிருந்ததை தம்முடைய சிந்தையில் பேசுவதாகும். *இங்குதான்* அவர் உண்மையாகவே அந்தக் கிரியை செய்தார்.

62 இயேசு உலகத் தோற்றத்திற்கு முன்னரே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாயிருந்தார்; அதற்குப் பிறகு நான்காயிரம் ஆண்டுகள் கழித்துதான் அவர் அடிக்கப்பட்டார். பார்த்தீர்களா?

63 எனவே சர்ப்பமானது ஏவாளை வஞ்சித்தது. அது உண்மைதான். அதன்பின்னர் நியாயத்தீர்ப்பு விதிக்கப்பட்ட பிறகு, அப்பொழுது ஆதாம் தன்னுடைய மனைவியை அறிந்தான். அதன்பின்னர் அவள் கர்ப்பவதியாகி, காயீன் என்னும் ஒரு குமாரனைப் பெற்றெடுத்தாள். உங்களுக்கு அது புரிகிறதா? பாருங்கள், இணைச்சொல் ஆதாம் செய்ததையே தொடர்ந்து கூறுகிறதேயன்றி, ஆதாமுக்கு முன்பு என்ன செய்யப்பட்டது என்பதல்ல.

64 இங்கே பாருங்கள், நீங்கள் அதைச் செயல்படுத்த விரும்பினால், இங்கே அந்த மகத்தான அறிக்கையில், நாம் அதை இங்கே...இங்கு 4-ம் அதிகாரத்தில் கண்டறிகிறோம் என்று நான் நினைக்கிறேன், அது உள்ளது என்று நான் நினைக்கிறேன்.

ஆதாம் தன்...ஏவாளை அறிந்தான்; அவள் கர்ப்பவதியாகி, காயீனைப் பெற்று, (ஒரு இணைச்சொல்) ***கர்த்தரால்*** *ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள்.*

65 அப்பொழுது அது உண்மையாகவே ஆதாம் அல்ல, அது அதன் மூலம் தேவனுடைய குமாரனாயிருந்தது. பார்த்தீர்களா? பார்த்தீர்களா? உங்கள் இணைப்பை எங்கே வைக்க விரும்புகிறீர்கள் என்றால், பாருங்கள் ("மீண்டும் மற்றும்"), "நான் தேவனிடத்திலிருந்து ஒரு மனிதனைப் பெற்றுள்ளேன்." அதன்பின்னர் தேவன் அவளுக்குக் காயீன் என்று அழைக்கப்பட்ட வேறுபடுத்துகிற காரியத்தை அளித்தார் என்று கூறுகிறது. காயீனுக்கு இருந்த எல்லா இழிவான, அசுத்தமான காரியங்கள் தேவனிடத்திலிருந்தா, எங்கிருந்து வந்தது? இருக்க முடியாது! பார்த்தீர்களா? அவள் சர்ப்பத்தால் வஞ்சிக்கப்பட்டாள், சர்ப்பமானது...அவள் ஏற்கனவே தாயானாள். அப்பொழுது ஆதாம் அவளை அறிந்தான், நிச்சயமாக அவன் அறிந்தான், ஒரு மனைவியாக அவன் சென்று அவளோடு வாழ்ந்தான், ஆனால் அவள் ஏற்கனவே இந்தக் குழந்தைக்குத் தாயாக இருந்தாள்.

66 அதன்பின்னர் ஆதாமின் குமாரன் முடிவிலே பிறந்தபோது, அவன் ஆதாமைப் போன்ற ஒரு கனிவான, இனிமையான, தாழ்மையான, சாந்தமான நபராயிருந்தான்.

67 ஆனால், இந்த நபருக்கு அந்த அப்பட்டமான பொய் எங்கிருந்து வந்தது, அந்தப் பாவம் எங்கிருந்து வந்தது? இந்த நபர், காயீன், அந்தக் கொலைகாரன் எங்கே சென்றான்? வேதம், "பிசாசு ஒரு கொலைகாரனாயிருக்கிறான்" என்று கூறியுள்ளது. அந்தப் பொய் எங்கிருந்து வந்தது? (பிசாசு ஒரு பொய்யின் பிதாவாயிருக்கிறான்; அவன் ஒரு பொய்யனாயிருக்கிறான், ஒரு பொய்யின் பிதாவாயிருக்கிறான்.) அது தேவனுக்குப் புறம்பேயுள்ள ஏதோ ஒரு மூல ஆதாரத்திலிருந்து வர வேண்டியதாயிருந்தது. ஆகையால் காயீன் பொல்லாதவன், அவனுடைய தகப்பன் சாத்தான்; அவன் இந்தப் பொல்லாங்கான ஒன்றைப் பிறப்பித்தான்.

அப்பொழுது நிச்சயமாகவே ஆதாம் தன்னுடைய மனைவியை அறிந்தான்.

68 மேலும், ஆம், நீங்கள் இந்தவிதமாகக் கூறினால். நான் சொல்லலாம், என்னை எடுத்துக்கொண்டால், சரி, இப்போது, ரெபேக்காள் பிறந்தாள், மற்றும் சிறிது காலத்திற்குப் பிறகு வந்தாள்...

69 நான் ஒரு நாள் யோசேப்பின் சரிதையை வாசித்துக் கொண்டிருந்தேன், அப்பொழுது நான் யோசேப்பின் கதையில் மிகவும் சிலிர்ப்படைந்தேன். நான் மினியாபோலிஸில் உள்ள ஒரு சிறிய தனி அறைக்குச் சென்று முழங்காற்படியிட்டு, நான், "தேவனாகிய கர்த்தாவே, யோசேப்பைப் போன்ற ஒரு மனிதனுக்காக நான் எவ்வளவாய் உமக்கு நன்றி செலுத்துகிறேன்!" என்றேன்.

மேலும் நான், “நான்...அந்த மகத்தான உன்னத குணாதிசயத்தின்படி பில்லி பாலுக்கு, ‘யோசேப்பு’ என்று நான் பெயரிட்டிருந்தால் நலமாக இருந்திருக்கும்” என்று எண்ணினேன். வேதாகமத்தில் எந்த இடத்திலும் அவனுக்கு எதிராக எந்த ஒரு அடையாளமும் இல்லை, ஒவ்வொரு வழியிலும் கிறிஸ்துவின் பரிபூரண மாதிரி. “நான் எப்படி விரும்புவேன்...” என்று எண்ணினேன். மேலும் நான், “ஓ, நான் ஒரு பையனைப் பெற்றிருந்தால், நான் அவனுக்கு ‘யோசேப்பு’ என்று பெயரிடுவேன்” என்றேன்.

70 அப்பொழுது அந்த ஒளி அந்தக் கட்டிடத்திற்குள் வந்து, “நீ ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்கு ‘யோசேப்பு’ என்று பேரிடுவாய்” என்றது.

71 நான் என் மனைவியை அறிந்தேன், நிச்சயமாக, அவள் சாராளைப் பெற்றெடுத்தாள். பிறகு நான் என்னுடைய மனைவியை அறிந்தேன் *மற்றும்* அவள் ஜோசப்பைப் பெற்றெடுத்தாள். நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா? பாருங்கள், அதற்கும் முதலாவதோடு எந்தச் சம்பந்தமும் இல்லை. தேவனுடைய வாக்குத்தத்தம் “யோசேப்பு” என்பதாகும், சாராள் அதற்கு இடையில் வந்தாள். அந்தவிதமான ஒரு இக்கட்டான சூழ்நிலையில் சாராளை வைக்கவில்லை, ஆனால் நான்—நான் என்ன பொருட்படுத்திக் கூறுகிறேன் என்பதை உங்களுக்குக் காண்பிக்கவே. பாருங்கள், அது...சாராளும் கூடத் தேவனால் அனுப்பப்பட்டவள். ஆகையால் நாம் அதை அறிவோம்.

72 இப்பொழுது, ஆனால், பாருங்கள். தேவன், அவர் ஆதாம், ஏவாளின் மேல் நியாயத்தீர்ப்பை நிறைவேற்றினபோது, அவர் நியாயத்தீர்ப்பு செய்வதற்கு முன்பே அவள் பாவத்தை செய்துவிட்டாள். மேலும், கவனியுங்கள், உலகில் பிறந்த முதல் குழந்தை “பாவத்தில் பிறந்து, அக்கிரமத்தில் உருவாகி, பொய்களைப் பேசுகிறதாய் உலகத்திற்கு வந்தது என்பது எப்போதாவது உங்களுக்குத் தெரியுமா”? முதலில் பிறந்தது அந்தவிதமாகவே பிறந்தது, ஏனென்றால்...

73 நீங்களோ, “ஆதாமையும் ஏவாளையும் குறித்து என்ன?” என்று கேட்கலாம். அவர்கள் பிறக்கவில்லை. அவர்கள் சிருஷ்டிக்கப்பட்டனர். பார்த்தீர்களா?

74 ஆனால் முதல் குழந்தை பாவத்தில் பிறந்தது, எனவே அது அந்த வரிசையாக இருக்க வேண்டும். “ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்.” அவன் பாவத்தில் பிறந்திருக்கிறான். அந்தக் காரணத்தினால்தான் அவன் மறுபடியும் பிறக்க வேண்டும், பாருங்கள், ஆவியின் மூலம்; ஆவிக்குரிய *சிந்தனையினால்* அல்ல; ஆவிக்குரிய பிறப்பினால், பாருங்கள், அது அவனைத் திரும்பவும் உருவாக்குகிறது, அவனை ஒரு புதிய சிருஷ்டியாக்குகிறது. முதல் மனிதன் பாவத்தில் பிறந்தான்.

75 அதன்பின்னர் பாலுறவு இல்லாத ஒருவர் வர வேண்டியதாயிருந்தது. இப்பொழுது, பாலுறவு முதன்மையான காரியமாயிருக்கவில்லையென்றால், அப்பொழுது அவர்கள் ஏன் முழு மானிட வர்க்கத்தையும் மீட்க பாலுறவில் ஈடுபட வேண்டியவர்களாயிருக்க வேண்டும்? அவர் ஏன் தாழ்வாரங்களுக்கு கீழே கொண்டு வந்து, "இதோ அந்தச் சரியாகச் *சிந்திக்கும்* அந்த நீதியுள்ளவர்" என்று கூறியிருக்கலாமே? அது இனச்சேர்க்கையினூடாக வர வேண்டியதாயிருந்தது, பெண்ணினூடாக வரவேண்டியதாயிருந்தது, ஏனென்றால் அங்குதான் அது முதலாவதாக வந்தது. பாலுறவினால் அநீதியைக் கொண்டு வந்தார்கள்; பாலுறவின் மூலமாக நீதியைக் கொண்டு வந்தார். பார்த்தீர்களா? தேவன் விபச்சாரமில்லாமல், பாலுணர்வு இச்சையில்லாமல், இயேசு கிறிஸ்துவை மாசற்ற கருத்தரிப்பின் மூலம் பிறப்பித்தார், மரியாளை நிழலிட்டு, அவளுக்குள் இந்தக் குழந்தையைச் சிருஷ்டிப்பதன் மூலம்; ஆனால் அதுவோ பாலுறவின் மூலம் வந்தது. அதன் மூலம், அவருடைய பரிசுத்த இரத்தம் விழுந்துபோன முழு இனத்தையும் மீட்டது. பார்த்தீர்களா? எனவே அது அப்படித்தான் இருக்க வேண்டும், அதற்கு வேறு வழியே இல்லை.

76 ஒரு ஸ்திரீயினிடத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் மரண கட்டுண்டவனாயிருக்கிறான், அவன் பிறக்கும்போதே மரித்தவனாயிருக்கிறான். அது உண்மை.

77 அந்தக் காரணத்தினால்தான் நாம் இப்பொழுது எப்படி அந்த ஆசீர்வதிக்கப்பட்ட உறுதியைப் பெற்றிருக்கிறோம் என்பதை அன்றொரு நாள் நான் பேசிக்கொண்டிருந்தேன்.

78 இஸ்ரேல்...இல்லையா...ஒன்றுமேயில்லாத அநேக காரியங்களை நான் பேசும்போது, ஆனால் சில நேரங்களில் கர்த்தர் எனக்கு ஏதோ ஒரு காரியத்தை அளிக்கிறார், அது என்னைச் சிலிர்ப்பூட்டுகிறது. எனவே அவர் அதை எனக்கு அளித்தபோது, அநேக ஆண்டுகளாக நான் பெற்றிருந்த எந்தக் காரியத்தையும் காட்டிலும் அது என்னைச் சிலிர்ப்பூட்டியது. சமீபத்தில் அவர் எனக்கு அதைக் கொடுத்தபோது, தேவனுடைய பிள்ளைகளான, அடிமையான இஸ்ரவேலுக்கு வீடில்லை என்பதை நான் கண்டேன். பூசனமான அப்பத்தை, அவர்கள் விரும்புகிற எந்தக் காரியத்தையும் எறிவார்களே! ஓ, அவர்கள் சமாதானமாக வாழக்கூடிய ஒரு வீடு மாத்திரம் அவர்களுக்கு இருக்குமானால் நலமாயிருக்கும், அவர்களுடைய நெற்றியின் வியர்வையைக் கொண்டு அவர்கள் ஜீவனம் சம்பாதிக்க முடியும்!

79 மேலும், ஒரு நாள், வனாந்திரத்திலிருந்து ஒரு தீர்க்கதரிசி வந்தபோது, ஒரு அக்கினி ஸ்தம்பத்தினால் வழிநடத்தப்பட்டு, அவர்களுக்கு ஒரு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைக் குறித்து கூறினான். எவருமே அங்குச் சென்றிருக்கவில்லை, அவர்கள்

அதைக் குறித்து ஒன்றுமே அறிந்திருக்கவில்லை. ஆனால் அது ஒரு வாக்குத்தத்தமாயிருந்தது. அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அடையுமளவிற்கு இந்தத் தீர்க்கதரிசியை விசுவாசித்து பின்பற்றினர்.

30 அப்பொழுது *யோசுவா* என்றழைக்கப்பட்ட ஒரு சாட்சி, "யெகோவா-இரட்சகர்" என்று பொருள்படுகிறது, யோர்தானைக் கடந்து அந்தத் தேசத்திற்குள்ளாகச் சென்று, தேவனுடைய வார்த்தையோடு அந்தத் தீர்க்கதரிசி கூறினவிதமாகவே அந்தத் தேசம் இருந்தது என்பதற்கான அத்தாட்சியோடு திரும்பி வந்தான். அவர்கள் இரண்டு பேர் சுமக்கத் தேவைப்பட்ட ஒரு திராட்சைக் குலையை வைத்திருந்தனர், அவர்கள் தேசத்திலிருந்து வந்த மூல கனியை ருசி பார்க்க முடிந்தது. அந்தத் தேசம் அங்கிருந்தது என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை, அவர்கள் அதை அப்படியே நம்பினர். அவர்கள் விசுவாசத்தினால் வெளியே நடந்து சென்று அதை விசுவாசித்தனர்.

31 இப்பொழுது அவர்கள் தங்களுடைய தேசத்தைச் சுதந்தரித்துக் கொண்டபோது, அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியாயிருந்தனர்! ஒவ்வொருவரும் சமாதானமாக வாழலாம், தங்களுடைய சிறு தோட்டம், தன்னுடைய பிள்ளைகள் மற்றுமுள்ள ஒவ்வொரு காரியத்தையும் வைத்துக் கொள்ள முடியும். ஆனால், அதேசமயத்தில், முதுமை அவனை முடிவிலே பிடித்துக்கொண்டது, மரணம் அவனைச் சூழ்ந்துகொண்டு எடுத்துக்கொண்டது.

32 அதன்பின்னர் பரலோகத்தின் தாழ்வாரங்களிலிருந்து ஒரு ஸ்திரீயினூடாக மற்றொரு மகத்தான போர்வீரன் வந்தார், தேவன் தாமே மாம்சத்தில் வெளிப்பட்ட இயேசு கிறிஸ்து அவர்களைக் காட்டிலும் மகத்தானவர். அவர் இஸ்ரவேலரிடம் அவர்கள் என்ன ஒரு மகத்தான ஜனமாயிருந்தனர் என்பதை அவர்களுக்குக் கூறினார், ஆனால் அவர்களை மரணம் எதிர்கொண்டது, அவர், "ஆனால் நான் உங்களுக்கு வேறொரு தேசத்தைக் குறித்து கூறிக்கொண்டிருக்கிறேன். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அது அவ்வாறு இல்லையென்றால் நான் உங்களிடம் கூறியிருப்பேன். நீங்கள் உங்களுடைய தேசத்தில் மகிழ்ச்சியாயிருக்கிறீர்கள், நீங்கள் உங்களுடைய வீடுகளை உடையவர்களாயிருக்கிறீர்கள், நீங்கள் உங்களுடைய பிள்ளைகளை உடையவர்களாயிருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் ஒவ்வொருவரையும் அங்கே தூரத்தில் புதைத்துக்கொண்டிருக்கிறீர்கள், அது முடிவாக இருப்பது போன்று தென்படுகிறது" என்றார்.

33 யோபு அதைக் கண்டு, "ஒரு மரம் மரித்துப் போனாலும், அது மீண்டும் ஜீவிக்கிறது. மனுஷனோ படுத்துக் கிடக்கிறான், மனுபுத்திரன் ஜீவித்துப்போனபின், அவன் எங்கே? அவனுடைய குமாரர்கள் அவனைக் கனப்படுத்த வருகிறார்கள், ஆனால் அவன் அதை உணரவில்லை. ஓ, நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து,

உமது கோபம் தீருமட்டும் இரகசிய இடத்தில் என்னை மறைத்து, காத்துக்கொள்ளும்!" அவன், "ஒரு மனிதன் மரித்தாலும், அவன் மீண்டும் பிழைப்பானா?" என்றான்.

84 அதற்கு நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், அவர்கள் அந்தக் கல்லறைக்கு அப்பால் ஏதோ ஒன்றை எதிர்நோக்கியிருந்தனர். தேவன் அவர்களுக்கு எல்லா மகத்தான காரியங்களையும், ஒரு வீட்டையும், ஒரு குடும்பத்தையும், பிள்ளைகளையும், ஒரு சபையையும், மற்றுமுள்ள ஒவ்வொரு காரியத்தையும், தீர்க்கதரிசிகள், இந்தக் காலம் வரையிலும் மகத்தான மனிதர்களையும் அளித்தார், ஆனால் அதே சமயத்தில் ஒவ்வொருவரும் மரித்து, தங்கள் கல்லறைகளுக்குச் சென்றனர். ஆனால் இங்கே ஒருவர் வந்து, "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு, நான் போய் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் செய்வேன்" என்று கூறுகிறார். யோசுவாவைப் போல, அவர் தம்முடைய காதேஸ்பர்னியாவை சந்தித்தார்.

85 இஸ்ரவேலர் காதேஸ்பர்னியாவுக்கு வந்தபோது...அந்த நேரத்தில் காதேஸ் உலகத்தின் நியாயாசனமாக இருந்தது, ஒரு பெரிய மகத்தான ஊற்றிலிருந்து ஏழு ஊற்றுகள் வருகின்றன, அதாவது நியாயத்தீர்ப்பு, தேவனுடைய வீடு மற்றும் அதிலிருந்து புறப்பட்டுச் செல்லும் சபைகள் போன்றவை. யோசுவா காதேஸ்பர்னியாவிலிருந்து அத்தாட்சியைக் கொண்டுவர வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் கடந்து சென்றான்.

86 இப்பொழுது, இயேசு தம்முடைய *காதேஸை* சந்தித்தார். அது என்னவாயிருந்தது? நியாயஸ்தலம்! அது எங்கே இருந்தது? கல்வாரியில், தேவன் உலகத்தின் பாவங்களுக்காக அவரை நியாயந்தீர்த்தார். அவர்கள் என்ன செய்தனர்? அவர் தேவனுடைய பிரதிபலனாக, மரணத்தைச் சந்தித்தார். பாவிகளைத் தேவனோடு ஒப்புரவாக்கும்படியாக, அவர் மரணத்திற்கேதுவாக மரித்து, யோர்தான் நதியை (மரணமாகிய) கடந்து சென்றார். அவர்கள் அவரை அடக்கம் செய்தனர்.

87 சந்திரனும் நட்சத்திரங்களும் தங்களைக் குறித்து வெட்கப்படுமளவிற்கு அவர் மரித்தார். பூமியானது ஒரு நரம்பு தளர்ச்சியை அடையுமளவிற்கு அவர் மரித்துப் போனார். மலைகளிலிருந்து கற்பாறைகள் ஓடிப்போகுமளவிற்கு அது அசைந்தது. நட்சத்திரங்கள் பிரகாசிக்காத அளவுக்கு, சந்திரன் பிரகாசிக்காத அளவுக்கு அது அதிர்ந்தது, நடுப்பகலில் சூரியன் அஸ்தமித்தது. அவர் மரித்தார்! ஒரு ரோமன் ஒரு பத்து பவுண்டு எடையுள்ள ஈட்டியை எடுத்து, அதை அவருடைய இருதயத்தினூடாக முழுவதுமாக ஊடுருமளவிற்கு அவ்வளவாய் மரித்தார்; தண்ணீர் மற்றும் இரத்தம். அவர் மரித்துப் போயிருந்தார்! அவர் யோர்தானைக் கடந்தார். அவர்கள் அவரைக் கல்லறையில் வைத்து, அதற்கு எதிராக ஒரு—ஒரு பாறையை உருட்டி வைத்தனர்,

அதைச் செய்ய நூறு புருஷர்கள் தேவைப்பட்டனர். அவர் மரித்துப் போயிருந்தார்! அவர்கள் அதன் மேல் ஒரு ரோம முத்திரையைப் போட்டனர்.

88 ஆனால் ஈஸ்டர் காலையில் அவர் யோர்தானுக்கு அக்கரையிலிருந்து திரும்பி வந்து, "மரித்தேன், ஆனாலும், சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்!" என்றார்.

அவர்களில் சிலர், "நாங்கள் ஒரு ஆவியைக் காண்கிறோம்" என்றனர்.

89 "என்னைத் தொட்டுப் பாருங்கள். எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு உண்டா?" என்று கேட்டார். மேலும், "உங்களுக்குச் சாப்பிட ஏதாவதுண்டா? எனக்கு ஏதோ ஒன்றைக் கொண்டு வாருங்கள்" என்றார். அவர்கள் அவருக்கு மீனையும், அப்பத்தையும் கொடுத்தனர். அவர் அதைப் புசித்தார். அவர் ஒரு மனிதனாயிருந்தார்!

90 அவர் என்னவாயிருந்தார்? நாம் செல்லப் போகிற ஒரு தேசம் உண்டு என்பதற்கான அத்தாட்சியை திரும்பக் கொண்டு வந்தார். அவர் என்ன செய்தார்? அவர், யோசுவாவைப் போல, அவர் அதனுடைய அத்தாட்சியைக் கொண்டு வந்தார். அவர், "இப்பொழுது, உங்களுக்கு அதைக் குறித்த அத்தாட்சி வேண்டுமானால், 'நீங்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியைப் பெறுவீர்கள்.' அதுவே என்னை எழுப்பின அத்தாட்சியாகும். நான் உன்னுடைய சுதந்திரத்தின் அச்சாரத்தை உனக்குத் தருவேன்" என்றார். அதன்பின்னர் என்ன நடந்தது? பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் விசுவாசியின் மேல் வந்தார்.

91 இப்பொழுது நாம் என்ன செய்கிறோம்? நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு, நம்மை நாமே மரித்தவர்களாக, ஞானஸ்நானத்தில் அவரோடு அடக்கம்பண்ணப்பட்டு, அவருடைய உயிர்த்தெழுதலில் அவரோடு எழுப்பப்பட்டவர்களாக எண்ணுகிறோம். எதற்கு? "உன்னதங்களிலே அவரோடுகூட உட்காரத்தக்கதாக." இன்றிரவு நாம் அங்குதான் இருக்கிறோம், (சரீரப்பிரகாரமாக அல்ல) ஆவிக்குரியப்பிரகாரமாக உட்கார்ந்திருக்கிறோம், நம்முடைய சிந்தைகளும், நம்முடைய நினைவுகளும், நம்முடைய ஆத்துமாக்களும் இப்பொழுது உலகத்தின் கவலைகளுக்கு அப்பாற்பட்டவை. நாம் என்னவாயிருக்கிறோம்? "கிறிஸ்து *இயேசுவுக்குள்* உன்னதங்களில்." நாம் எப்படி அதற்குள் பிரவேசிக்கிறோம்? "ஒரே ஆவியினாலே," முதலாம் கொரிந்தியர், 12-ம் அதிகாரம், "ஒரே ஆவியினாலே நாம் யாவரும் பரிசுத்த ஆவியினால் ஒரே விசுவாசிகளின்

சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்." காணப்படாத தேவனுடைய இராஜ்ஜியம்!

92 அங்கே நாம் திரும்பிப் பார்க்கும்போது, நாம் எங்கே பொய் சொல்லி, திருடி, ஏமாற்றி, புகைபிடித்து, தவறான காரியங்களைச் செய்தோம் என்பதைக் கண்டோம். நாம் அதிலிருந்து எழும்பி வந்துள்ளோம். நாம் பரலோக ஸ்தலங்களில் இருக்கிறோம். அது என்ன? என்றோ ஒரு நாள் நாம் அவருடைய சொந்த மகிமையான சரீரத்தைப் போன்ற ஒரு சரீரத்தை உடையவர்களாயிருப்போம் என்பதற்கு அத்தாட்சி. அது உயிர்த்தெழுதலின் சரியான அத்தாட்சியாயுள்ளது, ஏனென்றால், மறைமுகமாக, நாம் ஏற்கனவே அவரோடு எழுப்பப்பட்டிருக்கிறோம், மறைமுகமாக நாம் ஏற்கனவே மரித்திருக்கிறோம்.

93 முன்பு வாழ்ந்த வில்லியம் பிரான்ஹாம் இப்பொழுது உயிரோடிருக்கவில்லை, அது மரித்து முப்பதுக்கும் மேற்பட்ட வருடங்களாகின்றன, இப்பொழுது அது ஒரு புதிய சிருஷ்டியாக உள்ளது. வழக்கமாக வாழ்ந்து வந்த ஆர்மன் நெவில் இப்பொழுது உயிரோடிருக்கவில்லை, அவர் அதற்கு அநேக ஆண்டுகளுக்கு முன்பே மரித்துவிட்டார், இது ஒரு புதிய சிருஷ்டியாகும். ஆர்மன் நெவில் மரித்துவிட்டார், குதிரைப் பந்தய வீரன், சூதாட்டக்காரன், அல்லது அவர் யாராயிருந்தாலும், ஒரு காலத்தில் வாழ்ந்த அந்த மனிதன் மரித்துப் போய்விட்டார். எனக்குத் தெரியாது, சகோதரன் நெவில் அப்படிப்பட்டவர் அல்ல; ஆனால் அது என்னவாயிருந்தாலும், அவன் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருக்கிறான், "ஒன்றில் தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாய் இருப்பான்." நீங்கள் என்னவாயிருந்தீர்களோ, நீங்கள் ஒரு பாவியாயிருக்கிறீர்கள், அப்படித்தான் நீங்கள் இருக்கிறீர்கள்.

94 நீங்கள் உலகத்தின் காரியங்களை நேசிப்பதால் நீங்கள் மரித்திருக்கிறீர்கள். நீங்கள் இன்னமும் உலகத்தை நேசித்துக்கொண்டிருக்கும் வரை, நீங்கள் *இங்கே* இருக்க வேண்டும் என்று எவ்வளவுதான் அறிக்கை செய்தாலும் அது ஒரு பொருட்டல்ல, நீங்கள் இங்கே மேலே இல்லை, நீங்கள் இன்னும் *அங்கே* கீழே இருக்கிறீர்கள். "உலகத்திலும் உலகத்தின் காரியங்களிலும் அன்பு கூருகிறவனுக்கு தேவனுடைய அன்பு இன்னும் அவனுக்குள் பிரவேசிக்கவில்லை."

95 ஆனால் நீங்கள் அதையும் கடந்து பரலோக காரியங்களுக்கு உயரும்போது, மேலான காரியங்கள்மீது உங்கள் அன்பைச் செலுத்துவீர்கள், ஏனென்றால் நீங்கள் கிறிஸ்துவோடு உயிரோடெழுந்து, இப்பொழுது உன்னதங்களில் ஒன்றாக அமர்ந்திருக்கிறீர்கள். அப்படியே உறுதியாக இருங்கள், ஒரு காரியமும் உங்களுக்குத் தீங்கு செய்ய முடியாது, ஒரு காரியமும் முடியாது. மரணம் கூட...உங்களுக்கு எந்த ஒரு

காரியத்தையும் செய்ய முடியாது. நீங்கள் ஏற்கனவே கிறிஸ்துவுக்குள் நங்கூரமிடப்பட்டிருக்கிறீர்கள். உறுதி, அச்சாரம், ஏற்கனவே கிரயம் செலுத்தப்பட்டுவிட்டது, நீங்கள் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் என்ன செய்தீர்கள்? உயிர்த்தெழுதலில் அவரோடு எழுந்து விட்டீர்கள்.

96 நான் ஒரு காலத்தில் இருந்த இடத்திற்கு திரும்பிப் பார்க்கிறேன். இப்பொழுது நான் அதற்கும் மேலாக இருக்கிறேன். ஏன்? அவருடைய கிருபையினால் அவர் என்னை உயர்த்தினார், இங்கே நான் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். ஓ, என்னே! அங்குதான் உங்கள் காரியமே உள்ளது. அப்பொழுது வேதாகமம் ஒரு புதிய புத்தகமாகிறது. அப்படியானால் நீங்கள் அதை ஆவிக்குரிய கண்களினூடாகவும், ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதலின் மூலமாகவும் வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்பொழுது நீங்கள் பெயர்ச்சொற்களையும் பிரதிபெயர்களையும் காண்கிறீர்கள், அதன்பின்னர் நீங்கள் வேதத்தில் உள்ள சந்திப்புகளையும்...அதாவது இணைப்புச் சொற்களையும், அதுபோன்றவற்றையும் நீங்கள் காண்கிறீர்கள்.

97 ஓ, அது எங்கே கூறுகிறது...அவர்கள், "அது தனக்குத்தானே முரண்படுகிறது" என்று கூறுகிறார்கள்; நீங்கள் *இங்கே* கீழே படித்துக் கொண்டிருக்கிறீர்கள். *இங்கே* எழுந்து நின்று அதைப் படியுங்கள், அப்பொழுது அது முற்றிலும் வித்தியாசமாக இருக்கிறது. நீங்கள் பார்த்தீர்களா? அது உண்மை. நிச்சயமாக. நிச்சயமாக, நீங்கள் அதை ஆவியில் வாசிக்கும்போது, அது ஒரு முழு புதிய காரியத்தையே பொருட்படுத்துகிறது. ஆம்.

இந்த மற்ற கேள்வி உண்மையில் ஒரு கேள்வி அல்ல, அது கூறுகிறது:

172. நான் கர்த்தரைக் கண்டறியும் வரையில் நான் அநேக ஆண்டுகள் பாவத்தில் வாழ்ந்தேன். தயவு செய்து, சகோதரன் பிரான்ஹாம், நான் மீண்டும் பாவம் செய்திருக்கிறேன், இந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் உங்களுக்கு முன்பாக வருவதற்கு நான் பாத்திரன் அல்ல. நான் முழுவதுமாக மீட்கப்பட முடியுமா என்று தயவு கூர்ந்து எனக்குச் சொல்லுங்கள். சகோதரன் பிரான்ஹாம், தயவு செய்து எனக்கு உதவி செய்யுங்கள், எனக்குள்ளாக ஒரு பிசாசு உள்ளது. எனக்கு உதவி செய்யும்! நீங்கள் உங்களுடைய கரங்களை என்மீது வைத்து, எனக்கு மீண்டும் திரும்ப அளிப்பீரா?

98 இப்பொழுது, ஒரு கேள்வி உண்டு, நான் அதைச் சற்று முன்பு வாசித்தபோது, நான் அதை ஒருபோதும் கவனிக்கவில்லை. ஒரு கேள்வி உண்டு. இப்பொழுது, அந்த நபர் இங்கே இருப்பாரானால்... நான் அதை உங்களுக்கு வாசித்துக் காட்டட்டும்:

நான் கர்த்தரைக் கண்டறியும் வரையில் நான் அநேக ஆண்டுகள் பாவத்தில் வாழ்ந்திருக்கிறேன்— வாழ்ந்திருக்கிறேன். தயவு செய்து சகோதரன் பிரான்ஹாம்... (புரிகிறதா?)**...நான் மறுபடியும் பாவம் செய்திருக்கிறேன். இந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் உங்களுக்கு முன்பாக வர நான் பாத்திரன் அல்ல. நான் மீண்டும் முழுவதுமாகத் திரும்பளிக்கப்பட முடியுமா என்று தயவு செய்து எனக்குச் சொல்லுங்கள்.**

99 ஆம்! என் நண்பரே, தேவனுக்குள் நீங்கள் இதுவரை பாவம் செய்திருந்தாலும், நீங்கள் திரும்பளிக்கப்படக்கூடியவராகவே இருக்கிறீர்கள். நீங்கள் திரும்ப அளிக்கப்பட முடியாத அளவிற்கு நீங்கள் பாவம் செய்திருந்தால், நீங்கள் ஒருபோதும் திரும்ப அளிக்கப்பட *விரும்பமாட்டீர்கள்.* பார்த்தீர்களா? பார்த்தீர்களா? ஆனால் உங்களுடைய இருதயத்தோடு ஏதோ ஒன்று தொடர்பு கொண்டிருக்கும் வரை, நீங்கள் இன்னமும் திரும்பளிக்கப்படுதலின் வரிசையில் இருக்கிறீர்கள்.

100 "மிகச் சிறியதில் குற்றவாளியாயிருந்தால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்." நான் அநேக முறை பாவம் செய்திருக்கிறேன், நாம் ஒவ்வொருவரும் செய்ய விரும்பாத காரியங்களை ஒவ்வொரு நாளும் செய்கிறோம்.

101 அது எங்களுடைய இருதயத்தில்...நீங்கள் அந்தவிதமாக இருக்க விரும்பவில்லை அல்லது நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்கமாட்டீர்கள். பார்த்தீர்களா? தேவன் இன்னமும் உங்களோடு இடைபடுகிறார் என்பதற்கு அதுவே ஒரு நிரூபணமாய் உள்ளது. நீங்கள் அநேகமாக நரம்புத்தளர்ச்சியடைந்திருக்கலாம், அநேகமாக நீங்கள் மீட்கப்பட முடியாது என்று சாத்தான் உங்களிடம் கூறியிருக்கலாம். அவன் பொய் சொல்லிக்கொண்டிருக்கிறான், நிச்சயமாகவே அவன் பொய்யுரைத்துக்கொண்டிருக்கிறான். ஏனென்றால், பாருங்கள், ஒரு ஆழமான, அழைப்பு இருக்குமானால், அழைப்பிற்கு பதிலளிக்க ஒரு ஆழம் இருக்க வேண்டும். ஏதோ ஒன்றிற்கான பசி இருக்குமானால், அந்த ஏதோ ஒன்று எங்காவது இருக்க வேண்டும் அல்லது அதற்காக உங்களுக்குப் பசியே இருக்காது. பார்த்தீர்களா?

102 நான் அநேக முறை கூறியுள்ளது போல. ஒரு மீனுக்குத் தன்னுடைய முதுகில் ஒரு துடுப்பு இருப்பதற்கு முன்பு, அது நீந்துவதற்கு முதலில் தண்ணீர் இருக்க வேண்டும் அல்லது அதற்கு எந்தத் துடுப்பும் இருக்காது. பூமியில் ஒரு மரம் வளருவதற்கு முன்பு, ஒரு மரம் இருப்பதற்கு முன்பு முதலில் பூமி இருக்க வேண்டியதாயிருந்தது, ஏனென்றால் மரம் வளர முதலில் பூமி இருக்க வேண்டியதாயிருந்தது.

103 இப்பொழுது, ஒரு சிருஷ்டிப்பு உண்டாவதற்கு முன்பு, சிருஷ்டிப்பை சிருஷ்டிக்க ஒரு சிருஷ்டிகர் இருக்க வேண்டும்.

நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா? இப்பொழுது, நீங்கள் தேவனண்டை திரும்பிச் செல்ல விரும்பி, பசியாயிருக்கும் வரை, எங்கோ ஒரு தேவன் உங்களை அழைக்கிறார், பாருங்கள், இல்லையென்றால் நீங்கள் பசியாயிருக்கமாட்டீர்கள். சிருஷ்டிகர் ஒருவர் உண்டு!

104 இப்பொழுது, நீங்கள்...நீங்கள் கடந்து செல்லக்கூடிய ஒரு இடம் உண்டு, அங்கே நீங்கள் திரும்பி வர முடியாது, ஆனால் அப்பொழுது நீங்கள் இருந்த அதே வடிவில் நீங்கள் மீண்டும் அங்கே இருப்பீர்கள். நீங்கள் கிருபையிலிருந்து *விழுந்துவிட்டீர்கள்* என்பதையே அது காண்பிக்கிறது. பின்மாற்றம் *இழக்கப்படுகிறதில்லை*. பின்வாங்குதல் எங்கே *இழக்கப்படுகிறது* என்பதாய் உள்ளது என்று யாராவது எனக்குக் கூறி, அதை வேதத்தில் நிரூபிக்க நான் விரும்புகிறேன். பின்வாங்கிப்போனவன் இழக்கப்படவில்லை, அவன் ஐக்கியத்திலிருந்து விலகிவிட்டான்.

105 இஸ்ரவேலர் பின்வாங்கிப் போனார்கள், ஆனால் அவர்கள் தங்களுடைய உடன்படிக்கையை ஒருபோதும் இழந்ததில்லை, அவர்கள் தங்களுடைய—தங்களுடைய துதிகளையும், சந்தோஷத்தையும் இழந்துவிட்டனர்.

106 தாவீது உரியாவின் மனைவியாகிய பத்சேபாளை மணந்து கொண்டபோது, தன்னுடைய இரட்சிப்பின் சந்தோஷத்தை இழந்துவிட்டான், ஆனால் அவன் ஒருபோதும் தன்னுடைய இரட்சிப்பை இழந்துவிடவில்லை. அவன் ஒருபோதும், "என்னுடைய இரட்சிப்பை எனக்குத் திரும்பத் தாரும்" என்று கூறவேயில்லை. "என்னுடைய இரட்சிப்பின் *சந்தோஷத்தை* எனக்குத் திரும்பத் தாரும்" என்றான்.

107 ஓ, "தொடாதே, ருசிபாராதே" என்ற இந்தப் பிரமாணக் கொள்கை இன்றைக்கு அதிகமாக உள்ளது. நீங்கள் பிரமாணத்தின்படி காரியங்களைச் செய்கிறதில்லை.

108 நான் இன்றிரவு இந்தச் சபைக்குப் பிரமாணத்தின்படி வரவில்லை. நான் சோர்வடைகிறேன், நான்—நான்—நான் நரம்புத்தளர்ச்சியடைந்துள்ளேன், நான் நிலைகுலைந்துள்ளேன், எனக்கு முன்பாக உள்ள ஏதோ ஒரு காரியத்தைக் குறித்து நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன், என் இதயம் படபடக்கும் அளவுக்கு, என் இருதயம் எரிகிறது. சரியாக இந்த நிமிடத்தில், எனக்கு *இங்கே* தசைப்பிடிப்பு, வலி, மேலும் கீழும் மாறி மாறிப் பரவிக்கொண்டிருக்கிறது. பலவீனம், நரம்புத்தளர்ச்சி, நடுக்கம்; *இங்கே* ஒரு இறுகப் பற்றிப் பிடித்தல்; என் கால்விரல்களை என் காலணிகளில் இறுக்கி பிடித்துக்கொண்டேன். எனக்கு இங்கு வர வேண்டும் என்று தோன்றவில்லை. அப்படியானால் நான் ஏன் வந்தேன்? ஏனென்றால் நான் தேவனை நேசிக்கிறேன். ஜீவித்தாலும் அல்லது மரித்தாலும், நான் அவருக்காக இங்கே நிற்க வேண்டும்.

நான் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இல்லை. நான் செய்தாலும் செய்யாவிட்டாலும் அவருக்குக் கவலை இல்லை. நான்...நான் மரித்தாலும், எப்படியும் நான் பரலோகத்திற்கு செல்வேன். ஆனால் நான் அவரை நேசிப்பதால் நான் வருகிறேன். நீங்கள் அவரை நேசிப்பதால் அவரைச் சேவிக்கிறீர்கள், நீங்கள் அதைச் செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் அல்ல. ஏனென்றால் நீங்கள் அவரைப் போதுமான அளவு நேசிக்கிறீர்கள்!

109 என்னுடைய மனைவி என்னை விவாகரத்து செய்துவிடுவாள் என்று நான் பயப்படுகிற காரணத்தால் நான் அவளுக்கு உண்மையாயிருக்கவில்லை. நான் அவளை நேசிக்கிற காரணத்தால் நான் அவளுக்கு உண்மையாய் இருக்கிறேன். அவளைத் தவிர உலகில் வேறெந்த ஸ்திரீயும் எனக்கில்லை. அந்தக் காரணத்தினால்தான் நான் அவளுக்கு உண்மையாய் இருக்கிறேன். காரணம் அல்ல...நான் ஒரு தவறு செய்துவிட்டதாகவும், நான் ஏதோ தவறு செய்துவிட்டேன் என்று அவர்கள் நினைத்தால், அவளிடம் வந்து, "மேடா, தேனே, நான் அதைச் செய்ய வேண்டுமென்று நினைக்கவில்லை" என்று கூறலாம். அவள் அதற்காக என்னை மன்னிப்பாள், அவள் மன்னிப்பாள் என்று எனக்குத் தெரியும். நான் அவளை மன்னிப்பேன்; நான் அவளை நேசிக்கிறேன். ஆனால் நான்—நான் அவளை மன்னிப்பேன்; அவள் என்னை மன்னிப்பாள். ஆனால், சும்மாக அதைச் செய்ய நான் விரும்பமாட்டேன், அவளை மிகவும் நேசிப்பதால், அப்படிச் செய்யமாட்டேன். அவள் என்னை மன்னிப்பாள் என்று நான் நினைக்காத காரணத்தினால் அல்ல, நான் முதலில் அதைச் செய்ய முடியாத அளவுக்கு அவளை நேசிக்கிறேன் என்ற எண்ணம் தான் அது. நான் அந்தவிதமாக அவளை நேசிக்கும் வரை, நான் அதை ஒருபோதும் செய்யமாட்டேன்; அவள் விரும்புகிற விதமாக அவள் என்னை நேசித்தால், அவளும் செய்யமாட்டாள்.

110 நீங்கள் உங்களுடைய முழு இருதயத்தோடு கர்த்தரை நேசிப்பீர்களானால், நீங்கள் இந்தக் காரியங்களைக் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை. நீங்கள் ஒரு தவறு செய்தால், நீங்கள் மனப்பூர்வமாய் பாவம் செய்யவில்லை, நீங்கள் ஏதோ ஒரு தவறு செய்திருக்கிறீர்கள். பாருங்கள், நீங்கள் பின்வாங்கிவிட்டீர்கள். உண்மையாகவே, நீங்கள் இங்கே ஐக்கியத்தில் இருந்தீர்கள், நீங்கள் மீண்டும் இந்தச் சச்சரவில் இங்கே கீழே விழுந்துவிட்டீர்கள்.

111 ஆனால் அது என்ன? அது ஒரு—ஒரு கழுகைப் போன்றது. ஒரு சமயம் இங்கே சின்சினாட்டி மிருகக்காட்சி சாலையில் நான் பார்த்தபோது, நான் சாராளைக் கூட்டிக்கொண்டு அங்கே சென்று கொண்டிருந்தேன்...நான் கண்ட எந்தக் காரியமும் என்னைப் புண்படுத்துமானால், அது ஏதோ ஒன்று எழுதப்பட்டிருந்ததைக் காண்பதேயாகும்.

112 ஒரு கூண்டில் உள்ள எந்தக் காரியத்தையும், சிறு பறவைகளைக்

கூட என்னால் காண சகிக்கவில்லை. ஸ்திரீகளாகிய நீங்கள் சிறு பறவைகளை வைத்திருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன், நீங்கள் அவைகளை வெளியேற்றிவிடுகிறீர்கள்.

113 நான் ஒரு சிறு பையனாக இருந்தபோது, "எனக்கு எப்போதாவது ஒரு தருணம் கிடைத்தால், நான் ஒரு மனிதனாயிருக்கும்போது, நான் ஒவ்வொரு வீட்டிலும் நழுவிச் சென்று, அந்தப் பாவப்பட்ட சின்னஞ்சிறு உயிர்களை விடுதலை செய்துவிடுவேன்" என்று நான் சொல்வதுண்டு. ஆம் ஐயா. நான் சொன்னது...அங்கே சுட்டெரிக்கும் வெயிலில் உட்கார்ந்திருக்க, அவை "ஹா, ஹா, ஹா" என்று சிரிக்கின்றன, அந்த ஸ்திரீ எங்கோ பின்புற தாழ்வாரத்தில் ஒரு சிகரெட்டை புகைத்துக் கொண்டிருக்க, அந்தப் பரிதாபமான சிறு பறவை அங்கே அமர்ந்து வெயிலில் கருகிக் கொண்டிருக்கிறது. அவனால் அதைக் குறித்து ஒன்றுமே செய்ய முடியாது, அவன் அங்கேயே அமர்ந்திருக்க வேண்டும். அவன் அதற்காகப் பிறக்கவில்லையே! நான், "பையனே, நான் நழுவிச் சென்று அவனை வெளியே அனுப்பிவிட்டால், அவன் அங்கே நீண்ட நேரம் இருக்கமாட்டான்" என்று எண்ணினேன். பார்த்தீர்களா?

114 எதையும் அடைத்து வைக்கப்பட்டிருப்பதைக் காண நான் வெறுக்கிறேன். ஒரு மனிதன் தன்னை *கிறிஸ்தவன்* என்று கூறிக்கொண்டு, பின்னர் ஏதோ ஒரு சபைக் கோட்பாட்டை எழுதுவதைப் பார்க்க எனக்கு வெறுப்பாக இருக்கிறது. "என்னால் 'ஆமென்' என்று சொல்ல முடியாது. என்னால்—என்னால் *அதில்* நம்பிக்கைக் கொள்ள முடியவில்லை. போதகர், 'அதை விசுவாசிக்காதீர்கள்' என்று கூறுகிறார்." ஓ, என்னே, நன்மை! நீங்கள் சுதந்திரமாகப் பிறந்திருக்கிறீர்கள்.

115 அப்படியானால் ஒரு பெரிய கழுகைக் குறித்து என்ன? அது ஒரு பரலோக பறவை. அது மேகங்களுக்கு மேலாக ஜீவிக்கிறது. அங்குதான் அவன் ஒரு காலைச் செல்கிறான். மிக உயரிய நிலையில், வேறு எதுவுமே அவனைப் பின் தொடர முடியாது! வேறொரு பறவையல்ல...அது அதைப் பின்தொடர முயன்றால் ஆகாயத்தில் அது சிதைந்து போகும். அது ஒரு விசேஷமாக-சிருஷ்டிக்கப்பட்ட பறவை.

116 அதன்பின்னர் யாரோ ஒருவர் அதை மனிதனால் உண்டாக்கப்பட்ட கண்ணியில் சிக்க வைத்திருந்தார், அவர் இந்தப் பெரிய கழுகைப் பிடித்து இந்தக் கூண்டில் வைத்திருந்தார். அந்தப் பரிதாபமான நபர்...நான் அவனைப் பார்த்தபோது, என் இருதயம் எரிந்தது. அவன் *அந்த* விதமாக அந்தப் பக்கத்தைப் பார்த்தான், அவனுக்கு அந்தக் கூண்டிலிருந்து எப்படி வெளியே வருவது என்று தெரியவில்லை. அது எப்படி மேலே பறந்து செல்லும் என்பதை அது—அது அறிந்திருந்தது, மேலும் அது தன்னுடைய சிறகுகளை அசைக்கத் துவங்கும். இப்படியே போய், அவன் தன் தலையைக் கம்பிகளில் முட்டி, தன் செட்டையில் உள்ள இறகுகளையும்,

இங்கே உள்ள செட்டை இறகுகளையும், தலை முழுவதும் இரத்தம் வரும் வரை அடித்து உதிர்ப்பான். அவன் அந்தக் கம்பியை மிகவும் பலமாக மோதியதால், அது பின்னோக்கி சென்று விழும். அவன் அங்கே படுத்துக்கொண்டு, அவைகளின் களைப்புற்றிருந்த கண்களை உருட்டி, அந்த வானத்தை நோக்கியவாறு பார்த்து, "அங்கேதான் எனக்குச் சொந்தமான இடம். அங்குதான் என்னுடைய வீடு உள்ளது. அங்கே தான் நான் பிறந்தேன். ஆனால், பாருங்கள், எனக்கும், அங்கே ஒரு கூண்டு உள்ளது. சரி, எனக்குத் தெரிந்த ஒரே விஷயம், நான் இதில் என் மனதைச் செலுத்திவிட்டேன், இதோ வந்துவிட்டேன்," என்று சொல்லிவிட்டு, "பங்," என மறுபடியும் செய்யத் தொடங்குவான்.

117 நான், "ஓ, என்னே, அது பயங்கரமாயிருக்கவில்லையா! அவர்கள் அதை எனக்கு விற்றுவிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் என்னுடைய ஃபோர்ட் காரை அடகு வைத்து அவனை வாங்குவேன், பாருங்கள், அவனை விடுவிப்பதற்காகவே" என்று நினைத்தேன். பார்த்தீர்களா? ஓ, அது என்னை மிகவும் மோசமாக உணரச் செய்தது, அங்கே அந்தப் பரிதாபமான பெரிய பறவை, சிறகுகளை அடித்து...நான், "நான் எப்போதும் கண்டதிலேயே மிகவும் பயங்கரமான காட்சி அது" என்று எண்ணினேன்.

118 இல்லை, நான் சொன்னதை மாற்றிக்கொள்கிறேன், நான் இதுவரை கண்டதிலேயே மிகவும் கொடூரமான காட்சி, ஒரு தேவனுடைய குமாரனாயிருக்கும்படியான ஒரு மனிதன் பிறந்து, அதன்பின்னர் ஏதோ ஒரு கோட்பாட்டில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறான். அவன் அங்கே மேலே நோக்கிப் பார்க்கையில், அவன் உண்மையாகவே தேவனை சேவிக்க விரும்புவதைக் காண்கிறான், ஆனால் அவனால் அதைச் செய்ய முடியவில்லை. அவர்கள் அவனை அதைச் செய்ய அனுமதிக்கமாட்டார்கள், பாருங்கள், அடைத்து வைத்திருக்கிறார்கள். அது ஒரு பயங்கரமான காரியம்.

119 ஆம், ஆம், சகோதரியே, சகோதரனே, இதை எழுதினவரே, நீங்கள் *இங்கே* கீழே விழுந்திருந்தால், நீங்கள் இழக்கப்பட்டுவிட்டீர்கள் என்று அர்த்தமல்ல. நீங்கள் ஒரு பட்டியில் சிக்கிய ஒரு கழுகாக இருக்கிறீர்கள், அவ்வளவுதான். நீங்கள் மீண்டும் பாவத்தில் இங்கே கூண்டில் அடைக்கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் அங்கே இருக்க விரும்புகிறதில்லை, அந்தக் காரணத்தினால்தான் நீங்கள் மேல்நோக்கிப் பார்க்கிறீர்கள். அங்குதான் காரியமே உள்ளது, "ஓ, சகோதரன் பிரான்ஹாம், நான் ஒரு காலத்தில் அங்கே வசித்து வந்தேன், இங்கே ஏதாவது வழி உண்டா?" ஆம்.

120 ஒரு நாள் எனக்கு நினைவிற்கு வருகிறது, ஓ, ஒரு சிறு பையன், நான் பண்ணைக்குப் பின்னால் சுற்றி நடந்து கொண்டிருந்தேன், மேலும் அங்கே, யாரோ ஒருவர் ஒரு பழைய

காகத்தைச் சோள வயலுக்குள் வராமல் தடுப்பதற்காகக் கட்டி வைத்திருந்தார். அந்தப் பரிதாபமான நபரோ பட்டினியால் சாகும் நிலைக்குச் சென்றிருந்தான். அப்படிச் செய்யும் அளவுக்கு நான் கொடூரமானவனாக இருக்க முடியாது. அவன் வயதான காகத்தைக் காலில் கட்டினான், அந்த வயதான நபர் சுற்றிலுமுள்ள எல்லாவற்றையும் தின்றுவிட்டான், அதற்கு வேறு எதுவும் கிடைக்கவில்லை, அந்த விவசாயி அவனை விட்டுச் சென்றான். அவன்—அவன் எழும்பி நிற்கக் கூட முடியாதபடி மிகவும் பரிதாபமாக இருந்தான். அவன்...காகங்கள் பறந்து வந்து, "காவ், காவ், காவ்" என்று கூறும். வேறு வார்த்தைகளில் கூறினால், "ஜானி காகம் வா! குளிர்காலம் வந்து கொண்டிருக்கிறது, நாம் தெற்கே செல்வோமாக!" என்று கூறும். ஆனால் அவனால் அதைச் செய்ய முடியவில்லை, அவன் கட்டப்பட்டிருந்தான்.

121 எனவே ஒரு நாள் ஒரு குறிப்பிட்ட நபர் வந்து அந்தப் பரிதாபமான வயோதிக காகத்தைக் கண்டான், எனவே அவன் அங்குச் சென்று, அவனைப் பிடித்து, அவனுடைய கட்டுகளை அவிழ்த்துவிட்டு, "பையனே, நீ விடுதலையாகிவிட்டாய்" என்றான். பார்த்தீர்களா? ஆகையால் அதன்பின்னர், நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய முதல் காரியம், அவன் தொடர்ந்து சுற்றி நடந்து கொண்டிருந்தான்.

122 இதோ காகங்கள் வருகின்றன, "வா, ஜானி காகமே! கா, கா, கா! தெற்கு நோக்கிப் போகலாம், குளிர்காலம் வருகிறது. நீ உறைந்து போய் மரிக்கப் போகிறாய்" என்று கூச்சலிட்டன.

123 அவனால் திரும்பிப் பார்க்க முடிந்திருந்தால், "என்னால் அதைச் செய்ய முடியாது" என்று சொல்லியிருப்பான். பாருங்கள், அவன் கட்டப்பட்டிருக்க மிகவும் பழக்கப்பட்டிருந்தான், பாருங்கள், அவன் இன்னமும் கட்டப்பட்டிருக்கிறான் என்று அவன் நினைத்தான்.

124 இந்தக் கேள்வியை எழுதிய சகோதரனே, சகோதரியே, நீங்களும் கூடக் கட்டப்பட்டிருக்கிறீர்கள் என்று நீங்கள் நினைக்கலாம். பிசாசு உங்களை அங்கே கட்டி வைத்திருக்கிறான் என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் அவன் பொய்யுரைத்துக் கொண்டிருக்கிறான். ஒரு சமயம் ஒரு மனிதன் பூமிக்கு வந்தார், தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து, அவர் உங்களைக் கட்டவிழ்த்தார். நீங்கள் அதை நம்ப வேண்டாம்; நீங்கள் அங்கே தரித்திருக்க வேண்டியதில்லை, இல்லை ஐயா, நீங்கள் விடுதலையாகிவிட்டீர்கள். அது உண்மை. உங்களுடையப் பாவங்களைப் போக்க அவர் உங்களுக்குப் பதிலாக மரித்தார். நீங்கள் அவர்பேரில் விசுவாசங்கொண்டு, உங்களுடைய செட்டைகளை அடித்துவிட்டு, மற்றவைகளோடு பறந்து செல்லுங்கள். அந்தப் பிசாசின் குழியில் தரித்திருக்க வேண்டாம். இல்லை ஐயா.

இப்பொழுது. **நீங்கள் என் மீது கரங்களை வைத்து அதிலிருந்து விடுவிப்பீர்களா?**

125 அருமையான சகோதரியே, அல்லது அருமையான சகோதரனே, நிச்சயமாகவே, நான் உங்கள்மீது கரங்களை வைப்பேன், ஆனால் அது உங்களை விடுதலையாக்காது. நீங்கள்...நீங்கள் ஏற்கனவே விடுதலையாகிவிட்டீர்கள் என்பதை அறிந்துகொள்வதே உங்களை விடுவிப்பதாகும். நீங்கள் ஏற்கனவே கட்டவிழ்க்கப்பட்டுவிட்டீர்கள். நீங்கள் விடுதலையைக் குறித்து கவலைப்பட வேண்டியதில்லை, நீங்கள் ஏற்கனவே விடுதலையாகிவிட்டீர்கள்! இயேசு உங்களை விடுதலையாக்கினார். அடிமைத்தனத்தின் நுகத்தடியில் மீண்டும் சிக்கிக் கொள்ளாதிருங்கள். நீங்கள் முழுமையாகச் சுதந்திரமாக இருக்கிறீர்கள். நீங்கள் சிக்கிக் கொள்ள வேண்டியதில்லை. உங்கள்மேல் என்னுடைய கரங்களை வைப்பது ஒரு பாரம்பரியமாயுள்ளது. நாம் அதைச் செய்யலாம். எனவே, என்னால் அதைச் செய்ய முடியும், ஆனால் அவர் உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொள்ளும் வரையில், அது உங்களை இன்னமும் விடுதலையாக்காது; அதாவது நான், "கர்த்தாவே, நான் அதை விசுவாசிக்கிறேன்" என்று கூறுவதேயாகும்.

126 சரி, நீங்கள் விசுவாசத்தினால் உங்களுடைய கரங்களை அவர்மீது வைத்து, "கர்த்தாவே, நான் அதை விசுவாசிக்கிறேன்" என்று கூறுங்கள், நீங்கள் எழுந்துவிடுவீர்கள். அது உண்மை, உங்களுடைய பாவங்களை அறிக்கை செய்யுங்கள். பாருங்கள், "தன் பாவங்களை மறைக்கிறவன், தன் பாவங்களை மூடுகிறவன் வாழ்வடையமாட்டான். ஆனால் தன் பாவங்களை அறிக்கையிடுகிறவன்..." நீங்கள், "நான் பாவம் செய்திருக்கிறேன், நான் தவறாயிருக்கிறேன்" என்று கூற மனப்பூர்வமாய் இருந்தால், அங்குதான் நீங்கள் விடுதலையையும், நீதிமானாக்குதலையும் பெற்றுக் கொள்கிறீர்கள். அதைத்தான் நீங்கள் இங்கே கூறினீர்கள்:

நான் விழுந்துவிட்டேன், நான் பாவம் செய்திருக்கிறேன். நான் முற்றிலும் தவறாயிருக்கிறேன்! நான் மீண்டும் பூரண குணமடைய ஒரு வாய்ப்பு உண்டா?

127 முற்றிலுமாக! நீங்கள் அதை வாஞ்சிக்கிற அந்த நிமிடமே, உங்களைத் தூக்கி எடுக்கத் தேவன் ஜீவக்கயிற்றை கீழே விட்டார் என்பதையே அது காண்பிக்கிறது. அவருடைய ஜீவக்கயிறான விசுவாசம் மற்றும் ஜெபத்தின் மேல் எழுந்து, அப்படியே மற்ற கழுகுகளுக்குள் மேலே ஏறிச் சென்று, செட்டைகளை அடித்துக் கொண்டே செல். அது உண்மை.

128 ஆம், கைகளை வைக்குதல், அது—அது ஒரு மகத்தான காரியம், நான் அதில் விசுவாசங்கொண்டிருக்கிறேன். நான் கரங்களை வைப்பதை விசுவாசிக்கிறேன், நான் நிச்சயமாக விசுவாசிக்கிறேன். ஆனால் அது அதைச் செய்கிறதில்லை. நான் ஒவ்வொரு வாரமும் ஜனங்கள்மீது கரங்களை வைக்க முடியும், *கிறிஸ்து* உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொள்ளும் வரை அது எந்த நன்மையையும் செய்யாது. அது மாத்திரமே என்னுடைய

அனுமதி, கரங்களை வைக்க வேண்டும். அவர்கள் மூப்பர்கள் மேல் கைகளை வைத்தனர். அவர்கள் அந்தக் காரியங்களைச் செய்தனர், அவர்கள் அதற்குத் தங்களுடைய விசுவாசத்தை அளித்து, அதற்கு அவர்கள் தங்களுடைய நம்பிக்கையை அளித்தது தேவனுக்கு முன்பாக அவர்களுடைய அங்கீகாரமாயிருந்தது. பார்த்தீர்களா? சில நேரங்களில், அது போன்ற காரியங்கள்...

129 நான் அநேக முறை தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறேன். நான்—நான்...நேற்றிரவு. நான் கருத்துக்களுக்கு இடையே நிறுத்திக் கொண்டிருக்கிறேன், எந்த வழியில் திரும்புவது என்று எனக்குத்—எனக்குத் தெரியவில்லை. நான்—நான், நானே, நான் கருத்திற்கு இடையே இருக்கிறேன், என்ன செய்ய வேண்டும் என்று எனக்குத்—எனக்குத் தெரியவில்லை. இது மாம்சப்பிரகாரமான சபை இல்லை சரியாகக் கூறினால் இங்கே அமர்ந்துள்ள ஆவிக்குரிய சபை என்று நான் நம்புகிறேன், அவர்கள் இதை ஒலிப்பதிவு செய்து கொண்டிருக்கவில்லை என்று நான் நினைக்கிறேன், எனவே நான் என்ன கூற விரும்புகிறேன் என்பதை நான் கூறுவேன். அவர்கள்...

130 நான் உங்களோடு சற்று மனதாரப் பேச விரும்பினேன், எப்படியாயினும், நான் அதை ஏற்றுக் கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன். நான் இங்கே ஒரு வேதவாக்கியத்தோடு ஒரு குறிப்பை எழுதி வைத்திருந்தேன்...நான் அவ்வாறு கூறவில்லையென்றால், நான் *கடைசி-கால சுவிசேஷம்* என்பதன் பேரில் பேசப் போவதாக இருந்தேன், கடைசி கால சுவிசேஷம் என்னவாயிருக்கிறது. நான் அதை மற்றொரு நாளுக்காக எடுத்து வைப்பேன். நான் என்னுடைய இருதயத்திலிருந்து, என்னுடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து உங்களிடம் பேச விரும்புகிறேன்.

131 நான் கருத்துக்களுக்கு மத்தியில் இருக்கிறேன், எந்த வழியில் திரும்புவது என்று எனக்குத் தெரியவில்லை. உங்களுடைய ஜெபம் எனக்கு வேண்டும். இங்கே இந்த—இங்கே இந்த விஷயங்களைப் பற்றி நான் பேசிய இந்தச் சிறு முயற்சி, உங்களுடன் சில நிமிடங்கள் பேசுவதற்கான ஒரு வாய்ப்பைப் பெறுவதற்காகத்தான். நான் உங்களுக்கு வேறொன்றையும் கூற விரும்புகிறேன், பாருங்கள். நாம் உண்மையாகவே ஏதோ ஒரு காரியத்திற்கு நெருக்கமாக இருக்கிறோம் என்பதை நான் உணருகிறேன். இப்பொழுது, என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள், அதைச் செய்யாதீர்கள். பார்த்தீர்களா?

132 அன்றொரு நாள் ஒரு மனிதன் என்னிடம் வந்து என்னை மிகவும் மோசமாக உணரச் செய்தான். நான், "உண்மையாகவே நான் போதனை செய்வதில் அவ்வளவு தளர்வாக இருந்திருக்கவில்லையே" என்று எண்ணினேன். பார்த்தீர்களா? அவர், "சகோதரன் பிரான்ஹாம், இன்னும் அநேக நாட்களில், அடுத்த பதினைந்து அல்லது இருபது நாட்களில் எனக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டும்" என்றார். மேலும், "இயேசு

இங்கே இருப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா, எனக்கு அந்த அறுவை சிகிச்சை கூட இருக்க வேண்டியதில்லை?" என்று கேட்டார். பார்த்தீர்களா? நீங்கள் பாருங்கள், நீங்கள் அதைத் தவறாகப் புரிந்து கொள்கிறீர்கள். அதைச் செய்யாதீர்கள்! பாருங்கள், அதைச் செய்யாதீர்கள். இயேசு இன்னும் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு வராமலிருக்கலாம். எனக்குத் தெரியாது. அவர் இன்றிரவு இங்கிருக்கலாம். அவர் நாளை வரலாம். அவர் எப்பொழுது வருவார் என்று எனக்குத் தெரியாது, வேறு எவருக்கும் தெரியாது. வெளிப்படையாகக் கூறினால், அவருக்குக் கூடத் தெரியவில்லை. அதைத்தான் அவர் கூறினார். யாருக்குமே தெரியாது.

133 ஆனால் பவுல் அவர் வருவதை ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் என்பதை நீங்கள் அறிவீர்களா? பத்மு தீவில் இருந்த யோவான் அதைக் காண உயிரோடிருப்பான் என்று எண்ணினான். ஐரினேயஸ் அவருடைய நாட்களில் அவர் நிச்சயமாக இருப்பார் என்று நினைத்தான். பாலிகார்ப், பரிசுத்த மார்டின் போன்ற மற்ற யாவரும் காலங்கள் தோறும் அவ்வாறே இருந்தனர். லூத்தர், "நிச்சயமாக அதுதான் இது!" என்று எண்ணினார். வெஸ்லி, "இதுவே அதற்கான சமயம்" என்றார். சார்லஸ் ஃபின்னி, ஜான் நாக்ஸ், கால்வின், ஸ்பர்ஜன் போன்ற ஒவ்வொருவரும், "இதுதான் அந்த நேரம்!" என்றனர். பில்லி சண்டே, இந்த நாள்வரை இங்குள்ள ஒவ்வொருவரும், "இதுதான் அந்த நேரம்!" என்றனர்.

134 நாம் அதை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். எப்பொழுது நேரம் வரும் என்று நமக்குத் தெரியாது. இது இந்த நேரமாயுள்ளது என்று நான் விசுவாசித்துக் கொண்டிருக்கிறேன், எனவே நான் தீவட்டி வெளிச்சத்தை உயர்த்த விரும்புகிறேன். கவனியுங்கள், நான்...இதைச் சரியாகப் புரிந்து கொள்ளுங்கள்! நான் என்னுடைய ஜீவியத்தின் ஒவ்வொரு நொடியும் ஜீவிக்க விரும்புகிறேன், அடுத்த நொடி அவரை நான் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன், ஆனால் இப்பொழுதிலிருந்து பத்தாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு அது இருக்கும் விதமாகவே நான் தொடர்ந்து செல்ல விரும்புகிறேன். நான் இன்னமும் விதைகளை விதைத்து, அறுவடையை அறுக்க விரும்புகிறேன். நான் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, நான் எப்பொழுதும் செய்தது போலவே தொடர்ந்து பிரசங்கிக்க விரும்புகிறேன். அப்படியே, என் கண்களை மேலே உயர்த்தியபடி, பார்த்துக் கொண்டிருக்கிறேன்; அந்தத் தொட்டிலை இழுத்து...கதிர்க்கற்றைகளையும், தானியத்தையும் எடுத்துக் கொண்டிருக்கிறேன். அதன்பின்னர் அடுத்த ஆண்டு நான் என்னுடைய பயிரை மீண்டும் விதைப்பேன், "கர்த்தாவே, கடந்த ஆண்டு நீர் இங்கே இருப்பீர் என்று நான் நினைத்தேன், ஆனால் நீர் வரவில்லையென்றால், நீர் இந்த வருடம் வரலாம். எனவே நான் என்னுடைய பயிரை வைத்து என்னுடைய பிள்ளைகளை வளர்ப்பேன். நீர் தாமதித்தால், அவர்கள் புசிக்க ஏதாவதொன்றைப்

பெற்றுக்கொள்வார்கள்; நீர் அவ்வாறு செய்யவில்லையென்றால், நான் உம்மை எதிர்நோக்கி கொண்டிருப்பேன்." அங்குதான் காரியமே உள்ளது, பாருங்கள், அப்படியே வழக்கம்போல் தொடர்ந்து செல்லுங்கள்.

135 அவர் காலையில் வருகிறார் என்று நான் நினைத்திருந்தால், இப்பொழுது நான் பிரசங்கித்துக் கொண்டிருக்கிற அதே செய்தியை இன்றிரவும் நான் பிரசங்கிப்பேன். அவர் காலையில் வருகிறார் என்று நான் நினைத்திருந்தால், நான் வெளியே சென்று என்னுடைய காரை விற்கமாட்டேன், *இதை, அதை* அல்லது *மற்றதை* செய்யமாட்டேன். நான் வழக்கம்போல் அப்படியே தொடர்ந்து செல்வேன், ஏனென்றால் ஒவ்வொரு நிமிடமும் அவர் வருவதற்காக நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் அவர் உங்களுக்காக மாத்திரமே வரக்கூடும், இன்றிரவு இது உங்களுடைய வேளையாக இருக்கலாம். இன்றிரவு இது என்னுடைய நேரமாக இருக்கலாம். எனக்குத் தெரியாது. ஆனால் அவைகளில் ஒன்று நம்முடைய நேரமாக இருக்கப் போகிறது.

136 நான் இங்கு வாழ்ந்து கொண்டிருந்தாலும் அல்லது நான் அப்பால் அடக்கம் பண்ணப்பட்டாலும் அது என்ன வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறது? ஏனென்றால் எனக்கு ஏற்கனவே மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், உயிரோடிருக்கிற எந்த மனிதனுக்கு முன்பாகவும் நான் அங்கே இருப்பேன். அது உண்மை. "நான் இதைக் கூறுகிறேன்," இரண்டாம் தெசலோனிக்கேயர், 5-ம் அதிகாரம், "நான் இதைக் கர்த்தருடைய கற்பனைகளைக் கொண்டு உங்களுக்குச் சொல்லுகிறேன். கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை. ஏனென்றால் தேவ எக்காளம் தொனிக்கும், அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்," மரித்தோரின் சிலாக்கியம் முதலில் வெளியே வருவார்கள். அந்த விதமாகத்தான் அது சமீபமாய் இருக்கிறது என்பதை நாம் அறிவோம், பாருங்கள். "அப்பொழுது உயிரோடிருக்கும் நாம் ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாக்கப்பட்டு, கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம்."

137 ஆகையால் நான் நோவாவின் காலத்தில் மரித்திருந்தாலும், நான் ஆபிரகாமின் காலத்தில் மரித்திருந்தாலும், அது என்ன வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறது, நான் அப்போஸ்தலர்களின் காலத்தில் இறந்திருந்தால், இரண்டு வாரங்களுக்கு முன்பு இறந்திருந்தால், அல்லது இப்போதே இறந்திருந்தால்? அதனால் என்ன வித்தியாசம் ஏற்பட்டுவிடும்? நான் இன்னும் ஒரு நொடிப்பொழுதில், ஒரு இமைப்பொழுதில் அங்கு இருப்பேன், அந்த நேரம் வரையில் மாத்திரமே நான் இளைப்பாறிக் கொண்டிருப்பேன்.

138 இப்பொழுது, கர்த்தரோடு அது ஒன்று கூடுதல் இருக்கும். யாக்கோபு 49-ம் அதிகாரத்தில், அவன், "சமாதான கர்த்தர் வரும்போது, ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள். சமாதான கர்த்தர் வருமளவும்...நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை," என்று யூதாவை குறித்து அவன் கூறினான், "ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்."

139 இப்பொழுது, அநேக ஜனங்கள் ஒரு சபையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள், ஒரு பெரிய கூட்ட ஜனங்கள் ஒன்று சேர்ந்து எடுத்துக்கொள்ளப்படுவதற்காக, ஒரு சபை, ஒரு ஸ்தாபனம், ஏதோ ஒரு பிரமாணத்தை எடுத்துக்கொள்ளப்படுவதற்காக. அதுவல்ல அது. அதுவே அதுவல்ல.

140 ஜனக்கூட்டம், தேவன் தம்முடைய மந்தையை ஒன்று சேர்க்கும்போது, அவர் ஜெபர்ஸன்வில்லிலிருந்து இரண்டு பேரை, இந்தியானாவிலிருந்து இரண்டு பேரை, கென்டக்கியிலிருந்து இரண்டு பேரை, மிசிசிப்பியிலிருந்து இரண்டு பேரை எடுக்கலாம். சரியாக அதைத்தான் அவர் கூறினார்; அந்த வார்த்தைகள் அல்ல, ஆனால் அவர், "ஒரு வயல்வெளியில் இருவர் இருப்பார்கள்" என்று கூறினார், அங்குதான் பகல் வெளிச்சம் உள்ளது, "நான் ஒருவரை எடுத்துக்கொண்டு, மற்றொருவரை விட்டுவிடுவேன். படுக்கையில் இருவர் இருப்பார்கள்" என்று கூறினார், பூமியின் மறுபக்கம் இரவாயுள்ளது, "நான் ஒருவரை எடுத்துக்கொண்டு, மற்றொருவரை விட்டுவிடுவேன்." பார்த்தீர்களா?

141 ஜனக்கூட்டம் *இங்குள்ள* ஒரு குழுவிற்கு, கோத்திரப்பிரகாரமானதாக இருக்காது. அது ஒரு உலகளாவிய உயிர்த்தெழுதலின் ஒன்று கூடுதலாய் இருக்கும், எடுத்துக்கொள்ளப்படுதலும் அதேவிதமாகவே வரும். ஏனென்றால் அவர், "*இந்த* ஜாமத்தில் ஒருவன் நித்திரையடைந்தபோது, *அந்த* ஜாமத்தில், ஒருவன்...ஏழாம் ஜாமம் வரைக்கும். அதன்பின்னர் மணவாளன் வரும்போது, ஆதியாகமத்தின் காலம் தொடங்கி வெளிப்படுத்தின விசேஷத்தின் முடிவு வரையிலும் உள்ள அவர்கள் யாவரும், ஒவ்வொருவரும் விழித்தெழுவர். உள்ளே செல்ல ஆயத்தமாக, அவர்கள் ஒவ்வொருவரும் விழித்தெழுந்தனர், அது உண்மை," என்றார்.

142 இப்பொழுது, நீங்கள் பாருங்கள், அவருடைய வருகையில், மரித்தோர் யாவரும் கல்லறையிலிருந்து எழும்பி, நீதிமான்கள், மணவாட்டி, கல்லறையில் நித்திரை செய்பவர்கள் உயிர்த்தெழுதலில் எழும்புவார்கள் என்பதை அவர் காண்பிக்கிறார். அதன்பின்னர் பூமியில் ஜீவித்துக் கொண்டிருக்கிற ஜனங்களுக்கு, அது *இங்கே* ஒருவராகவும், *அங்கே* ஒருவராகவும் இருக்கும், அது ஒரு கூட்ட ஜனங்கள் ஒரு சிறு குழுவாக ஒன்று கூடி இருக்காது என்று காண்பிக்கிறார். "ஏனென்றால் வயலில் ஒருவன் இருப்பான், அல்லது வயலில் இரண்டு பேர் இருப்பார்கள், நான் ஒருவனை

எடுத்துக்கொண்டு மற்றவனை விட்டுவிடுவேன்," சபைகளில் ஒன்று பகலில் வெளியே வருகிறது. பூமியின் மறுபக்கத்தில், "படுக்கையில் இரண்டு பேர் இருப்பார்கள், நான் ஒருவனை எடுத்துக்கொண்டு மற்றவனை விட்டுவிடுவேன்." அது சரியா?

143 ஆகவே நான் ஜெபர்சன்வில்லில் இருந்தாலும், ஸ்வீடனில் இருந்தாலும், அல்லது வேறு எங்கு இருந்தாலும், அந்தக் கூட்டம் கிறிஸ்துவுக்கெனவே இருக்கும், நான்...அது எங்கே இருந்தாலும், அந்தக் கூடுகை மேய்ப்பரிடமே ஒன்றுகூடும். பார்த்தீர்களா? அதன்பின்னர் நாம் ஒன்று சேர்ந்து ஆகாயத்தில் கர்த்தரை சந்திக்க உயிர்த்தெழுதலோடு எடுத்துக் கொள்ளப்படுவோம். பூமியின் எல்லா பாகங்களிலிருந்தும் உயிரோடிருக்கின்ற ஜனங்கள் வருவார்கள். மரித்துப்போன ஜனங்கள், மற்றும் பலர் உயிரோடெழுவார்கள். சபையானது ஒன்று சேர்ந்து ஆகாயத்தில் கர்த்தரை சந்திக்கும்படி ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படும். பார்த்தீர்களா?

144 அவருடைய வருகை உலகளாவியதாயிருக்கும். அது லூயிவில்லில் வருவதாய் இருக்காது. அது பாப்டிஸ்டு, பிரஸ்பிடேரியனிடம் வருவதாய் இருக்காது. அது, "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைக் காண்பார்கள்" என்பதும், உயிர்த்தெழுதலும், எல்லாவிடங்களிலிருந்தும் ஒன்றுகூடுவதும் ஆகும்.

145 இப்பொழுது, அது எப்பொழுது வரும்? ஒருகால் இன்றிரவு, ஒரு வேளை நாளை, ஒருக்கால் இந்த ஆண்டு, ஒருக்கால் ஐம்பது ஆண்டுகள், ஒருகால் நூறு ஆண்டுகள், ஒருக்கால் மற்றொரு ஆயிரமாண்டுகள் இருக்கலாம். எனக்குத் தெரியாது. வேறு எவருக்கும் தெரியாது. ஆனால் நாமும், நீங்களும் இன்றிரவு இருக்கப்போவது போன்றே ஜீவிப்போமாக.

146 ஆனால், இப்பொழுது, நீங்கள் கூறினது போன்று, "எனக்கு—எனக்கு ஒரு அறுவை சிகிச்சை உள்ளது." சரி, உங்களுக்கு ஒரு அறுவை சிகிச்சை செய்ய வேண்டியதாயிருந்தால், உங்களுக்கு விடுதலைக்கான விசுவாசம் இல்லையென்றால், போய் உங்களுடைய அறுவை சிகிச்சை செய்து கொள்ளுங்கள்.

147 நான் ஒரு—ஒரு...அன்றொரு நாள் யாரோ ஒருவர் வந்து எனக்கு ஒரு குறிப்பு எழுதி, ஒரு—ஒரு பெரிய கடிதம் வாங்கப் போவதாயிருந்தால் என்று கூறி, "சகோதரன் பிரான்ஹாம், எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை" என்றார். மேலும், "நானும் என் மனைவியும் எங்களால் முடிந்தளவு தேவனுக்கு உண்மையுள்ளவர்களாயிருந்து வருகிறோம். நாங்கள் எங்களுடைய பிள்ளைகளை வளர்த்துள்ளோம்" என்றனர். மேலும், "இப்பொழுது, நான் என்னவென்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்," என்று கூறி, "நாங்கள்...நாங்கள் ஒரு பண்ணைக்காகச் சேமித்து, ஒரு பண்ணையை வாங்கினோம்" என்றார். மேலும், "நாங்கள் அதை

எவ்வளவாய் நேசிக்கிறோம்! அங்கே ஒரு ஊற்று உண்டு; அந்த இடத்தினூடாக ஒரு—ஒரு ஓடை ஓடுகிறது" என்றார். அது ஓரிகானில் இருந்தது. மேலும், "நீர் ஒரேகானுக்கு வரப்போவதாக நாங்கள் கேள்விப்படுகிறோம். நாங்கள் என்ன செய்யத் தீர்மானித்துள்ளோம் என்பதை நான் உங்களுக்குக் கூறுவேன். நாங்கள் அதை அறிவோம்...நாங்கள் அதைப் பிள்ளைகளுக்காகச் சேமித்து வைப்போம் என்று நாங்கள் நினைத்தோம், ஏனென்றால் அவர்கள் ஒருவரும் கிறிஸ்தவர்களாயிருக்கவில்லை," என்றார். "அவர்கள் உபத்திரவங்களைச் சகித்துக்கொள்ள இங்கே தங்கியிருக்க வேண்டியிருப்பதால், அவர்களுக்காக அதைச் சேமித்து வைத்து, அவர்களுக்கு ஏதேனும் கிடைக்கச் செய்ய நினைத்தோம், ஏனெனில், நாம் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவோம் என்று நம்புகிறோம்," என்றார். ஆகையால் அதைக் குறித்து என்ன செய்ய வேண்டும் என்பதை நாங்கள் அறியோம், எனவே ஒருவேளை நீங்கள் வரும்போது, நாங்கள் அந்தப் பண்ணையை உங்களுக்கு அளிப்போம், பாருங்கள், அப்பொழுது நீங்கள் விரும்புகிற எதை வேண்டுமானாலும் செய்யலாம்" என்றார்.

148 நான் பதிலுக்கு எழுதினேன், நான், "உங்கள் பிள்ளைகளைப் பற்றி நீங்கள் நினைத்துப் பார்ப்பது எவ்வளவு அன்பான விஷயம்" என்றேன்.

149 மேலும், "நானும் தாயாரும் அங்கே சாயங்கால நேரம் செல்கிறோம்" என்றார். மேலும், "நான் ஓய்வு பெற ஆயத்தமாயிருக்கிறேன், மேலும்," என்றும், "எங்களுக்கு உண்டாயிருக்கிற இன்பமான நேரங்களினால் பண்ணையைக் கடக்கும்போது, நீரூற்றை நோக்கிப் பார்த்து, அங்கே நின்று தேவனைத் துதித்துக் கொண்டிருக்கிறோம்" என்று கூறினார்.

150 நான், "அதைத் தொடர்ந்து செய்து, அந்தவிதமாகவே சரீரப்பிரகாரமாகவும், பொருள் ரீதியாகவும் வாழுங்கள். அவர் வரும் வரையில் தொடர்ந்து காத்துக்கொண்டிருங்கள். பாருங்கள், இங்கேயே தரித்திருங்கள், அவர் வரும் வரையில் தொடர்ந்து நிலைத்திருங்கள்" என்றேன்.

151 திட்டமிடுங்கள், தொடருங்கள், அதைச் செய்யுங்கள், "கர்த்தருக்கு சித்தமானால்! கர்த்தருக்கு சித்தமானால்! கர்த்தருக்குச் சித்தமானால், நான் *இதைச்* செய்வேன்." அவர் அந்த நேரத்திற்கு முன்பே வரலாம். [ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.] ஆனால் நீங்கள் இருக்கிறவண்ணமாகவே தொடர்ந்து முன்னேறிச் செல்லுங்கள்...ஆனால் உங்களுடைய ஆத்துமாவை ஒழுங்குபடுத்திக் கொள்ளுங்கள், அதாவது, அவர் எந்த நிமிடத்திலும் வரலாம். பாருங்கள், ஆயத்தமாயிருங்கள். ஏனென்றால், நீங்கள் பாருங்கள், அவர் எந்த நிமிடமும், எந்த வினாடியும் *உங்களுக்காக* வரக்கூடும், அடுத்த இருதயத் துடிப்பு, அடுத்த சுவாசம், அவர் உங்களுக்காக வரலாம். ஆனால்

நீங்கள் விரும்புகிற எதையுமே தொடர்ந்து செய்யுங்கள், அது உண்மையாயும், ஒழுக்கமாயும், நேர்மையாயும் இருக்கும் வரைக்கும், தொடர்ந்து அதைச் செய்யுங்கள்.

152 இப்பொழுது, நாம் ஏதோ ஒன்றை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் அறிவோம். நான் அதை அறிவேன்; நீங்கள் அதை அறிவீர்கள். எனக்கு—எனக்கு—எனக்கு எந்த வழியாகத் திரும்புவது என்று எனக்குத் தெரியவில்லை. ஏறக்குறைய நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு நாள் சிக்காகோவில் கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் வந்தபோது, நான், "இதுதான் அது! எழுப்புதல் முடிந்துவிட்டது, அமெரிக்கா தனக்கான தருணத்தை நிராகரித்துவிட்டது" என்றேன். அது ஒலிநாடாவில் உள்ளது. "அது இனிமேல் இருக்காது. அவளுடைய கடைசி வாய்ப்பை அவள் புறக்கணித்துவிட்டாள்" என்றேன்.

153 நீங்கள் கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அந்த ஒலிநாடாவில் அது எந்த நாளில் இருந்தது என்று யாருக்காவது தெரியுமா? நாம் அதைப் பெற்றுள்ளோம். லியோவும் ஜீனும் அதைப் வைத்துள்ளனர். அண்மையில் நான் அதை இங்கே கேட்டேன். போஸ் அதைத் தன்னுடைய செய்தித்தாளில் வெளியிட்டார். ஆகையால் அது முதற்கொண்டு என்ன சம்பவிக்கிறது என்பதை கவனியுங்கள், பாருங்கள், எழுப்புதல் நின்று விட்டது.

154 நான் அதை அன்றொரு இரவு ப்ளூ லேக்கில் கூறினேன், அடுத்த நாள் காலையில் ஒரு சிறு நபர் எழுந்து, "சகோதரன் பிரான்ஹாம் பெந்தேகோஸ்தேக்காரர்களின் காலம் முடிந்துவிட்டது என்று கூறலாம், ஆனால் நான் அல்ல! தேவனுக்கு மகிமை! அல்லேலூயா," என்று தொடர்ந்து கூறிக் கொண்டிருந்தார். பாருங்கள், ஆனால் அந்தக் குட்டி நபருக்குத் தான் எக்காளத்தின் எந்த முனையிலிருந்து ஊதுக்கொண்டிருந்தான் என்று தெரியவில்லை. பாருங்கள், அவன் புரிந்து கொள்ளவில்லை. பாருங்கள், அவனுக்குத் தெரியாது. அது பரவாயில்லை, உற்சாகமூட்டுதல், அது முற்றிலும் சரியே.

155 ஆனால் சுற்றும் முற்றும் பாருங்கள்! அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? ஜனங்களோடுள்ள காரியம் என்ன? எழுப்புதலுக்கு என்ன நேர்ந்தது? பில்லி கிரஹாம், ஓரல் ராபர்ட்ஸ் மற்றும் ஏனையோருக்கு என்ன நேர்ந்தது? எழுப்புதல் எங்கே நடந்துகொண்டிருக்கிறது? அது முடிந்துவிட்டது! புகை அடங்கிவிட்டது. விதைகள் விதைக்கப்பட்டுவிட்டன. கூட்டம் முடிந்துவிட்டது. அக்கினிகள் அணைக்கப்பட்டுவிட்டன. வெஸ்டாவில் உள்ள பழைய ரோமாபுரி கோவிலில் உள்ள பீடத்தண்டையிலே, நெருப்பு அணைந்தபோது, வியாபாரிகள் வீடுகளுக்குச் சென்றனர். இப்பொழுது, எழுப்புதல் நடைபெறவில்லை என்பதை நாம் காண்கிறோம். அது உற்சாகம் அல்ல.

156 அதன்பின்னர் நான் 1936-ல் நதியைக் குறித்து சிந்தித்துப் பார்க்கிறேன், அவர் என்ன கூறினார் என்று நான் நினைக்கிறேன். அங்கே என்ன நடந்தது? உங்களில் அநேகருக்குத் தெரியும். நான் ஒரு பையனாய் இருந்தேன், கர்த்தருடைய தூதன் இறங்கி வந்தபோது, என்னுடைய முதல் ஞானஸ்நானத்தைக் கொடுத்தேன், நான் இருந்த இடத்தில் நின்றேன். சிலர், "நீங்கள் அதைக் காணவில்லையே" என்றனர். அப்பொழுது விஞ்ஞானம் அது அவ்வண்ணமே என்பதை நிரூபித்தது. பார்த்தீர்களா? பார்த்தீர்களா?

157 இப்பொழுது, அவர் அங்கே என்ன கூறினார்? "கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல, உன்னுடைய செய்தி இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கும்."

158 அது பூமி முழுவதிலும், உலகம் முழுவதும் சென்றதை நான் கவனித்திருக்கிறேன். கிட்டத்தட்ட ஒரே இரவில், எல்லாவிடங்களிலும் எழுப்புதல்கள் உண்டாயின. எங்கும் எழுப்புதல் அக்கினி எரிந்து கொண்டிருந்தது, நாம் இதுவரை அறிந்திருந்ததிலேயே மிகப் பெரிய எழுப்புதல் இருந்து வருகிறது. ஆனால் அதற்கு முன்னர் ஏதாவது இருந்ததா? ஒரு காரியமும் இல்லை! அதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், நியூ ஆல்பனியில் ஒரு மனிதன் ஒரு உரை நிகழ்த்துவதை நான் கேட்டேன், "பில்லி சண்டே மற்றும் அவர்களைப் போன்றவர்கள், அந்த எழுப்புதலின் ஆரவார விளம்பரத்தை வழக்கமாக நம்பினர்" என்று கூறினார். "அவர்கள் இனி ஒருபோதும் இருக்க முடியாது என்பதை நாங்கள் அறிவோம். ஜனங்கள் உறுதியான ஆதாரங்களை விரும்புகின்றனர்; அப்படிப்பட்ட ஒரு காரியமே இல்லை!" என்று கூறினார். அவர்கள் அந்தப் பெரிய ஆரவார விளம்பரத்தைச் செய்துகொண்டிருந்த அதே நேரத்தில், அவர்களுடைய ஆரம்ப நூற்றாண்டுகளுக்குப் பிறகு நாம் கண்டிராத மாபெரும் எழுப்புதலைக் தேவன் அருளினார்: அதன் விளைவாக, லட்சக்கணக்கானோர் இரட்சிக்கப்பட்டனர்.

159 புள்ளிவிவரங்களின்படி, ஒரு மனிதனின் செய்தி மூன்று ஆண்டுகள்வரை நீடிக்கும், அதன்பின்னர் தேவன் அவனை அழைக்கும் வரையில் அவன் தன்னுடைய நற்பெயரின் பேரில் வாழ்கிறான். இப்பொழுது, அது கிறிஸ்துவின் மூன்றரை வருடம் முதற்கொண்டே இருந்து வருகிறது, பாருங்கள். ஸ்பர்ஜன், நாக்ஸ், கால்வின், என, தொடக்கம் முதல் இறுதி வரை அனைவரும் அவ்வாறே இருந்தனர் என்பதைக் காட்டுகிறது, ஒரு மனிதனுடைய ஊழியத்திற்கான வரம்பு மூன்று முதல் மூன்றரை ஆண்டுகள் என்பதை அது காண்பிக்கிறது. அதில் எஞ்சியுள்ள...அவனுடைய மெழுகுவர்த்தி எரிந்துவிட்டது, அவன் தன்னுடைய கடந்தகால நன்மதிப்பைக் கொண்டு ஜீவிக்கிறான். அவன் பொல்லாதவனாயிருந்தால், அவனுடைய— அவனுடைய கிரியைகள் அவனைப் பின் தொடரும்; அவன்

சரியானவனாயிருந்தால், அவனுடைய கிரியைகள் அவனைப் பின் தொடரும். அவ்வளவுதான்.

160 இப்பொழுது, அது எதைப் பொருட்படுத்தினது? நான் இங்குள்ள இந்தச் சபைக்குப் பிரசங்கித்து, "ஒரு மகத்தான ஒன்று வருமென்று நான் விசுவாசித்தேன்" என்று உங்களிடம் கூறி வருகிறேன். நான், "கடைசி சபைக் காலத்திற்குரிய ஒரு செய்தியாளன் இருப்பார் என்று வேதவாக்கியங்கள் ஆதரிக்கின்றன" என்று உங்களிடம் சொல்லியிருக்கிறேன் என்று நான் விசுவாசிக்கிறேன். நான் அதை விசுவாசிக்கிறேன். அந்த நபர் தோன்றும்படி நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன், நான் தொடர்ந்து கவனித்து வந்திருக்கிறேன்.

161 ஒரு மனிதன் எழுவதை நான் காண்கிறேன், அவனைப் பற்றிக் கேள்விப்படுகிறேன், ஒரு பெரிய மனிதன் பெருக்கத் தொடங்குகிறான், அவருடைய செய்தி வேதாகமத்திலிருந்து வெகுதூரத்தில் இருப்பதை நான் கவனிக்கிறேன். அவன் ஒரு மூலையில் பறப்பதை நான் காண்கிறேன். பார்த்தீர்களா? நான் மற்றொன்று மேலே எழும்பி, பறந்து வருவதை நான் காண்கிறேன், ஆனால் அது கழுகுகளுக்கு மத்தியில் செல்லவில்லை, அவன் ஸ்தாபன காகங்கள் மத்தியில் தங்கியிருக்கிறான். *இங்கேயே* தங்கியிருக்கிறான், அவனுடைய ஸ்தாபனம், மற்றொன்று அதிகமான அங்கத்தினர்களைக் கொண்டு வருதல் போன்றவை. நான் அதைக் கவனிக்கிறேன், அது மரித்துப் போகிறதை நான் காண்கிறேன்.

162 நான், "தேவனே, பிதாக்களின் விசுவாசத்தை பிள்ளைகளுக்குத் திரும்ப அளிக்கப்போகிறவர் எங்கே? அந்த விதைகள் எங்கே நடப்படப்போகிறது? அது எங்கே உள்ளது? என்ன சம்பவிக்கப்போகிறது?" என்று யோசிக்கிறேன்.

163 இப்பொழுது இது இதற்கு வருகிறது. அந்த நாளிலே ஆற்றண்டையிலே அந்தச் செய்தி இருந்திருந்தால், கர்த்தருடைய வருகை சமீபமாயிருந்தால், அது கிட்டத்தட்ட இங்கே உள்ளது. அப்படியில்லையென்றால், புயலுக்கு முன்பு ஒரு அமைதி உண்டாயிருக்கும். எனக்குத் தெரியாது. அவர் அதை எனக்கு வெளிப்படுத்தவில்லை. நான், "அதுதான் அவருடைய அதிகாரப்பூர்வமான செய்தியா? நான் சொல்ல வேண்டும் என்று அவர் விரும்பியது அது மட்டும்தானா? என்று யோசிக்க முயற்சிக்கிறேன். அப்போதுதான் அவர் ஆணையிட்டாரா? அவ்வளவுதானா?" அப்படியென்றால், நாம் மிக, மிக அருகில் இருக்கிறோம். நீங்கள் நினைப்பதை விட நேரம் கடந்துவிட்டது. அது இல்லையென்றால், ஒரு புயலுக்கு முன்பு ஒரு அமைதி உண்டாயிருக்கும்.

164 இப்பொழுது, அண்மையில் யாரோ ஒருவர் இங்கே எனக்கு எழுதிக் கேட்டார், "சபையானது உபத்திரவ காலத்தினூடாகச் செல்கிறது என்று நீங்கள் விசுவாசிக்கவில்லையென்றால்,

வெளிப்படுத்தின விசேஷம் 13-ம் அதிகாரத்தைக் குறித்து எப்படியிருக்கும், எப்படியாய் அவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலும், தங்களுடைய சாட்சியினாலும் ஜெயங்கொள்ள முடியும்?" என்று கேட்டார். அந்த நபர் அந்தக் கேள்வியைக் கேட்டார். நான் வியப்புறுகிறேன். வெளிப்படுத்தின விசேஷத்தின் முதல் மூன்று அதிகாரங்களும் சபையின் காலத்தில் இருந்த சபையைக் குறித்துப் பேசுகின்றன என்பதை நீங்கள் உணருகிறீர்களா? அது உபத்திரவ காலம், சபைக்காலம் அல்ல; வெளிப்படுத்தின விசேஷம் 4-ம் அதிகாரத்தில் உள்ள சபை எடுத்துக்கொள்ளப்பட்டு மேலே செல்கிறது, அதன் பிறகு 19-ஆம் அதிகாரத்தில் இயேசுவுடன் அது வரும் வரை மீண்டும் ஒருபோதும் வருவதில்லை. அது உண்மை. அது உபத்திரவ காலத்தில், சபையோடு அதற்கு எந்தச் சம்பந்தமும் இல்லை.

165 இந்த மகத்தான வாக்குத்தத்தங்கள் யாவும், என்ன சம்பவிக்கப் போகிறது என்பதைப் போன்ற மகத்தான காரியங்களை நீங்கள் வேதத்தில் கண்டிருக்கிறீர்கள், அது யூத இராஜ்ஜியத்திற்குள்ளாக, புறஜாதிகளுக்கு மத்தியில் அல்ல. வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற ஜனங்களுடைய விசுவாசத்தை திரும்ப அளிக்க வரவேண்டிய இந்த ஒன்றின் மூலம் அவர்கள் ஒரு ஆரவாரத்தை ஏற்ப்படுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன். நான் அதைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே வழி, ஏனென்றால் அவர், "இந்தச் செய்திக்குப் பிறகு, உடனடியாக, பூமி வெப்பத்தாலும், அக்கினியாலும் சுட்டெரிக்கப்படும்" என்றார். நாம் இங்கே இருக்கையில் நான் அதை உங்களுக்கு வாசிக்கட்டும், அது என்ன கூறுகிறது என்பதைக் கவனியுங்கள்.

166 இப்பொழுது இராஜ்ஜியத்தைப் பற்றிய இந்தச் சிறிய செய்தியை, ஒருக்கால் அடுத்த ஞாயிறு காலை நான் பிரசங்கிக்கக்கூடும், கர்த்தருக்குச் சித்தமானால், பாருங்கள், கர்த்தருக்குச் சித்தமானால்.

167 இப்பொழுது இங்கே கவனியுங்கள், இங்கே யோவானின் வருகை, மல்கியா 3:

> *இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்; இதோ, வருகிறார் என்று சேனைகளின் **கர்த்தர்** சொல்லுகிறார்.*

168 நீங்கள் அதைக் காண்கிறீர்களா? மல்கியா 3. மத்தேயு இப்பொழுது, மத்தேயு 11-ம் அதிகாரத்தைக் கவனியுங்கள், இதையும், 6-வது வசனத்தையும் கவனியுங்கள். இப்பொழுது நாம் மல்கி-... மத்தேயு 11-ம் அதிகாரத்தை வாசிப்போம். இயேசு பேசுகிறார். இப்பொழுது நாம் 11-ம் அதிகாரத்திலிருந்து துவங்குவோம்:

இயேசு தம்முடைய பன்னிரண்டு சீஷர்களுக்கும் கட்டளைகொடுத்து முடித்தபின்பு, அவர்களுடைய பட்டணங்களில் உபதேசிக்கவும் பிரசங்கிக்கவும் அவ்விடம் விட்டுப் போனார்.

அத்தருணத்தில் காவலிலிருந்த யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக்குறித்துக் கேள்விப்பட்டு, தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து:

வருகிறவர் நீர்தானா? அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமா? என்று அவரிடத்தில் கேட்கும்படி அனுப்பினான்.

169 அந்தத் தீர்க்கதரிசியின் இருளைப் பார்த்தீர்களா? ஏதோ ஒன்று சம்பவிக்கப் போவதை அவன் அறிந்திருந்தான், ஆனால் அது எங்கே நிகழ்ந்தது, பாருங்கள், பாருங்கள், என்ன சம்பவித்துக் கொண்டிருந்தது என்று அவனுக்குத் தெரியவில்லை. "நீர் அவர்தானா?" அவர் அவரை அறிவித்தபிறகு.

இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் கேட்கிறதையும் காண்கிறதையும் யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்;

குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.

என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்.

அவர்கள் போனபின்பு, இயேசு யோவானைக்குறித்து ஜனங்களுக்குச் சொன்னது என்னவென்றால்: (இப்பொழுது கவனியுங்கள்!)*...எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ?* (இல்லை, அது யோவானல்ல, யோவானுடன் எந்தச் சமரசமும் இல்லை.)

...எதைப் பார்க்கப்போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? (வேறு வார்த்தைகளில் கூறினால், கழுத்துப்பட்டை அணிந்துகொள்வது, நீங்கள் அறிவீர்கள், கல்விமான், மகத்தான மனிதன்) *மெல்லிய வஸ்திரந்தரித்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள்.* (அந்தக் குழந்தையை முத்தமிட்டு, பிள்ளைகளை விவாகம் செய்கிறவர், மரித்தோரை அடக்கம் செய்பவர், மற்றும் ராஜாக்களைச் சுற்றித் திரிகிறவர், உங்களுக்குத் தெரியும். அவிதமானவர், அவர் இருபுறமும் கருகுள்ள பட்டயத்தைக் கையாளுபவர் அல்ல. புரிகின்றதா?)

...இப்பொழுது, *எதைப் பார்க்க வனாந்திரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் ஒரு மனிதனையும்* அவனுடைய ஆடைகளையுமா?

மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? மெல்லிய வஸ்திரந்தரித்திருக்கிறவர்கள் அரசர் அரண்மனைகளில் இருக்கிறார்கள்.

அல்லவென்றால், எதைப் பார்க்கப்போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியைப்பார்க்கிலும் மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

170 கவனியுங்கள்! "இதற்காக..." இப்பொழுது கவனியுங்கள், இது இயேசுவின் சொந்த வார்த்தைகள்:

அதெப்படியெனில், இதோ, நான் என் தூதனை என் விசுவாசத்திற்கு *முன்பாக,* அவன்...முன்பே, *அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே போய், உமது வழியை ஆயத்தம் பண்ணுவான் என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்பட்டவன் இவன்தான்.*

171 இப்பொழுது மல்கியா 3-ஐ கவனியுங்கள்:

இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்;...(மல்கியா 3, மல்கியா 4 அல்ல.)

172 இப்பொழுது மல்கியா 4-ஐ கவனியுங்கள்:

இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்புகளாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் ***கர்த்தர்*** *சொல்லுகிறார்.* (அது உபத்திரவத்தையும் அழிவையும் பற்றியது, பாருங்கள், இதோ, அது வரப்போகிறது).

ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; (கர்த்தருடைய வருகை) *நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்.* (அது மேய்ச்சல் நிலத்திற்கு செல்வது, வெளியே நடப்பது போன்றது.)

*துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; நான் இதைச் செய்யும்நாளிலே அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின்கீழ் சாம்பலாயிருப்பார்கள் என்று சேனைகளின் **கர்த்தர்** சொல்லுகிறார்.*

173 மற்றபடி, நீதிமான்கள் கிறிஸ்துவோடு பூமிக்கு வரும்போது, அந்தச் சாம்பலை மிதிப்பார்கள். இந்த ஜனங்களை நீங்கள் காணும்போது, அகந்தையுள்ளவர்களாயும், இறுமாப்புக்காரராயும், வெறுக்கத்தவர்களாயும், சூழ்ச்சியாயும், அதே சமயத்தில் தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொண்டாலும், அவர்கள் சாம்பலைத் தவிர வேறொன்றுமில்லை. அவ்வளவுதான். அதைத்தான் வேதம் கூறுகிறது. பார்த்தீர்களா? இப்பொழுது கவனியுங்கள்.

ஓரேபிலே இஸ்ரவேலரெல்லாருக்காகவும் என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும் நியாயங்களையும் நினையுங்கள்.

*இதோ, அந்தக் **கர்த்தருடைய** பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்குமுன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்.*

கர்த்தருடைய வருகைக்குச் சற்று முன்பு, எலியா முதலில் வருவான்.

174 சரி, நினைவிருக்கட்டும், அதே சமயத்தில் எதிர்காலம். இப்பொழுது, அது யோவானின் வருகையாக இருந்திருக்க முடியாது. அவன் எலியாவாக இருந்தான், ஆனால் அவன் இப்பொழுது ஐந்து முறை வருகிறான். இ-யே-சு, வி-சு-வா-ச-ம், கி-ரு-பை. பாருங்கள், *ஐந்து* என்பது "கிருபையின்" எண்ணாகும். எலியா ஐந்து முறை தோன்றுகிறான்: ஒரு முறை எலியாவாகும்; எலிசாவைப் போல; யோவானைப் போல; புறஜாதியாரின் முடிவில்; மோசேயோடு யூதர்களுக்கும் அனுப்பப்பட வேண்டும். பரிபூரண எண், பரிபூரண தீர்க்கதரிசி, பரிபூரண செய்தியாளர், கண்டிப்பானவர், தைரியமானவர். பார்த்தீர்களா? கவனியுங்கள்:

*...**கர்த்தருடைய** பெரிதும் பயங்கரமுமான நாள், நாள் வருகிறதற்குமுன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்.*

நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்.

175 பாருங்கள், அறிமுகத்தின் முதல் வருகை அல்ல; அது யோவான், ஏனெனில் பூமியானது ஒருபோதும் துரும்பைப் போலப் எரிக்கப்படவில்லை, நீதிமான்கள் துன்மார்க்கரின் சாம்பலின் மேல் ஒருபோதும் நடக்கவில்லை. ஆனால் இது சம்பவிப்பதற்கு சற்று முன்னர் எலிசா வருவானா. அவன் என்ன செய்வான்? பிள்ளைகளின் விசுவாசத்தை மீண்டும் பிதாக்களிடத்திற்கு, வேதாகம மூல விசுவாசத்திற்கு திரும்பளித்தல்.

176 ஒரு மனிதன் வருவதை நான் காணும்போது, நான், “அது அவனாகத்தான் இருக்க வேண்டும். ஒரு மனிதன் கீர்த்தியில் எழும்பிக்கொண்டிருக்கிறான், அவனை நோக்கிப் பாருங்கள், சபைகள் நடந்துகொண்டிருக்கின்றன” என்று நினைக்கிறேன். அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்? வேதாகமத்திலிருந்து ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளது. அவன் என்ன செய்கிறான்? அலைந்து திரிந்து, காற்று தீர்ந்து கீழே விழுந்துவிடுவான். பாருங்கள், “தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலித்தல்.” விசுவாசத்தை மறுதலித்து, வேதத்தில் விசுவாசமில்லாமல் இருந்து, கோட்பாடுகளைப் பற்றிக்கொண்டு, ஸ்தாபனங்கள், ஸ்தாபன பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளுதல். அது விழ வேண்டும். அங்கே அவன் திரும்பிச் செல்கிறான்.

177 அந்தக் கடைசி கால சபைக்காக அந்த விதையை விதைக்கப்போகும் அந்த ஒருவர் எங்கே? எலியாவுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட, முதிர்ச்சியடையும் வித்து எங்கே? அவனுடைய நாட்களுக்குப் பிறகு, பெரிய உபத்திரவம் ஏற்பட்டு பூமியை சுட்டெரிக்கும்.

178 அதன்பின்னர் சபையும் மணவாட்டியும் திரும்பும்போது, ஆயிர வருட அரசாட்சியில் பூமியானது அக்கினியால் சுத்திகரிக்கப்படும்போது, மணவாட்டியும் கிறிஸ்துவும் தங்களுடைய சாம்பலின் மீது நடப்பார்கள். அவர்கள் அங்கே அரசாளுவார்கள். சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டிராத அஞ்ஞானிகள் அந்த நேரத்தில் உயிரோடு எழுப்பப்படுவார்கள், தேவனுடைய புத்திரர் வெளிப்படுவார்கள். அவன் ஆளுகை செய்ய வேண்டுமானால், அவன் ஆளுகை செய்ய ஏதோ ஒரு காரியம் இருக்க வேண்டும். அவன் ஒரு ஆதிக்கத்தைப் பெற்றுள்ளான். “அவர்கள் கிறிஸ்துவோடு அரசாண்டு ஆளுகை செய்தனர்,” கிறிஸ்து தேசங்களை ஒரு இரும்புக்கோலால் ஆளுகை செய்தார். அதன்பின்னர் சுவிசேஷம்... பின்னர், தேவன் இங்கு இருந்தபோது இருந்ததைப் போன்றே அதிகாரத்துடன், வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய குமாரர்கள், பாருங்கள், அந்த அரசாட்சியில், பாருங்கள், சாம்பலின் மேல் ஆயிர வருட அரசாட்சி வரும்.

179 எனவே நான் ஒரு காரியத்தைக் கவனித்து வந்திருக்கிறேன். தாழ்மையில் அது நழுவிவிட்டதா, நாம் அதைத் தவறவிட்டிருக்கிறோமா? அது போய்விட்டதா, சபையானது தன்னுடைய பாவங்களில் விடப்பட்டிருக்கிறதா? அப்படியானால், அப்பொழுது நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் காலதாமதமாகிவிடும். அப்படி இல்லையென்றால், வேதாகமத்தின்படியே நேரடியான செய்தியுடன் ஒருவர் வரப்போகிறார், அந்த அதிசீக்கிர கிரியை பூமியை சுற்றி வரும். ஒவ்வொரு முன்குறிக்கப்பட்ட தேவனுடைய வித்தும் அதைக் கேட்கும் வரை, விதைகள் செய்தித்தாள்களில், படிக்கும்

பொருட்களிலும் செல்லும். பிதாவானவர் அவர்களை இழுத்துக் கொள்ளாவிட்டால், அவர்களில் எவருமே வரமாட்டார்கள், பிதாவானவர் இழுத்திருக்கிற யாவரும் அதைக் கேட்க வருவார்கள். அதாவது முன்குறிக்கப்பட்ட வித்து வார்த்தையைக் கேட்கும்.

180 அதன்பின்னர் அது நிகழும்போது, அது ஒன்று கூடும் ஒன்றாக இருக்கும். இயேசு பிரசன்னமாகி, உயிர்த்தெழுதலோடு, பூமி முழுவதிலுமிருந்து சபையானது புறப்பட்டுச் செல்லும்.

181 யோவான் வந்ததுபோல, தெரிந்து கொள்ளப்பட்ட சீஷர்களும் கூட அதை அறியாதது போன்று இது இருக்குமா? அவர்கள், "எலியா முதலில் வர வேண்டும் என்று வேதபாரகர் ஏன் சொல்லுகிறார்கள்?" என்று கேட்டனர்.

182 அதற்கு அவர், "அவர் ஏற்கனவே வந்துவிட்டார், நீங்கள் அதை அறியவில்லை" என்றார். ஆனால், "அவர்கள் அவருக்குச் செய்வதாகக் கூறினதையே அவர்கள் செய்தனர்" என்றார். அவனுடைய செய்தி மிகவும் துரிதமாக, பாருங்கள், எல்லா இஸ்ரவேலருக்கும், அது ஒரு சிறு...இரண்டு—இரண்டு சிறு இடங்களில் மாத்திரமே சம்பவித்தது: எருசலேமில் சற்று கீழே அங்கே, அயினோனிலே யோவான் ஞானஸ்நானம் கொடுக்கச் சென்ற இடத்தில், அவன் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்த நதியிலே, நதியானது வறண்டுவிட்டது. ஆறு மாதங்களில், மேசியாவின் முழு அறிமுகமும் சரியாக உள்ளே வந்தது. புரிகிறதா?

183 நாம் எதையாவது கவனிக்கத் தவறிவிட்டோமா? நாம் நினைப்பதை விட நேரம் கடந்துவிட்டதா? இது இப்போது ஒரு மனம் விட்டுப் பேசும் உரையாடல். இது, இன்றிரவு, அப்படியே...ஆம், நாம் மட்டும்தான்—மட்டும்தான் இங்குப் பேசிக்கொண்டிருக்கிறோம். நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் காலதாமதமாகிவிட்டதா? உண்மையாகவே அந்த நாளில் ஆற்றண்டையில் அந்தச் செய்தி இருந்ததா? அது நழுவிவிட்டதா, ஜனங்கள் அதைத் தவறவிட்டுவிட்டார்களா? அது தானே? அப்படியானால் அது உண்மையாகவே நாம் நினைப்பதைக் காட்டிலும் தாமதமாகிவிட்டது. அது எப்பொழுது இருக்கும்? எனக்குத் தெரியாது. அது இன்றிரவாக இருக்கலாம். அது மற்றொரு ஐம்பது வருடங்களாய் இருக்கலாம். அது எப்பொழுது இருக்கும் என்று எனக்குத் தெரியாது, இப்பொழுது நான் இருக்கிற வண்ணமாகவே தொடர்ந்து சென்று கொண்டேயிருப்பேன். சரி, அது என்ன? நான் ஏதோ ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேனா?

184 நேற்றிரவு நான் ஒரு விநோதமான சொப்பனம் கண்டேன். அது நாள் முழுவதும் என்னைத் தொல்லைப்படுத்திக் கொண்டிருக்கிறது. வழக்கமாக நான் அதிகமாகக் கனவு காண்பதில்லை. ஆனால் நான் ஒரு சொப்பனம் கண்டேன்...

185 நான் எல்லா இடங்களுக்கும் செல்வேன், முன்பெல்லாம்

அந்தச் செய்தியை முழக்கமிடுவேன், அப்போது அங்கு ஒருவர் இங்கு ஒருவர் அதைப் பிடித்துக் கொள்வதை நான் பார்ப்பேன். நான் மீண்டும் திரும்பிச் சென்று செய்தியை முழங்க, அவர்கள் தங்களுடைய முகத்தைச் சுளித்துக்கொண்டு நடந்து சென்றுவிடுவார்கள். என்ன விஷயம்? அவர்களுடைய கிருபையின் நாளில் அவர்கள் பாவம் செய்துவிட்டார்களா? கடைசியான ஒருவர் வந்துவிட்டாரா? அது முடிந்துவிட்டதா? நாம் அழிவுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோமா? இந்தவிதமாக எழும்பிக்கொண்டிருக்கும் இந்தச் சிறு யுத்தங்களெல்லாம் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறதா?

186 ஏதோ ஒன்று சம்பவிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. அது சம்பவிப்பதற்கு முன்பு, சபையானது போய்விட்டது. சபையானது உபத்திரவ காலத்தில் இருக்கும் என்பதில் நான் எப்படி முரண்படுகிறேன்! நீங்கள் எப்படியொரு மாதிரியை ஒரு முன் மாதிரியிலிருந்து எடுத்துப் போட முடியும்? பார்த்தீர்களா? ஒரு துளி தண்ணீர் விழுவதற்கு முன்பே நோவா பேழைக்குள் இருந்தான். அக்கினி விழுவதற்கு முன்பே லோத்து சோதோமிற்கு வெளியே இருந்தான். பார்த்தீர்களா? இயேசு, "அந்நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரன் வரும் நாட்களிலும் நடக்கும்" என்றார். சபையானது நியாயத்தீர்ப்பில் நிற்க வேண்டியதில்லை. அது ஏற்கனவே கிறிஸ்துவுக்குள் உள்ளது.

187 நமக்குத் தேவை என்னவெனில் பரிசுத்தவான்களின் ஒரு பரிபூரணமே. பரிசுத்தவான்கள் புரிந்து கொள்ளவில்லை, பாருங்கள், அவர்கள்...என்ன நினைக்க வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியவில்லை, பாருங்கள். இப்பொழுது நாம்...

188 அது சரியென்றால்...அது சரியில்லையென்றால், ஏதோ ஒன்று உடனடியாக வரப்போகிறது, அங்கே ஒரு முழக்கம் இருக்கும். நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன், எந்தப் பக்கம் திரும்புவது என்று எனக்குத் தெரியவில்லை.

189 நேற்றிரவு நான் ஒரு சொப்பனம் கண்டேன். (அதன் பிறகு நான் முடிக்கப் போகிறேன்.) நான் ஒரு சொப்பனத்தைக் கண்டேன், விசித்திரமான காரியம்...

190 நான் அங்கே படுத்துக்கொண்டு என் மனைவியினிடத்தில் வரவிருக்-...குறித்து பேசிக்கொண்டிருந்தேன்...நாங்கள் அப்போதுதான் ஜெபித்திருந்தோம், நான்...சிறிய பண்டைய டல்லாஸில் யாரோ ஒருவர், தன் காதில் ஏதோ சிக்கிக்கொண்டதாக அழைத்திருந்தார், நான் உள்ளே சென்றேன்...இரத்தம் கசிவதால், அவர் மருத்துவரிடம் ஓட வேண்டியதாயிருந்தது. நான் ஜெபிக்க உள்ளே சென்றேன், அப்பொழுது பரிசுத்த ஆவியானவர், "பரவாயில்லை" என்றார். பார்த்தீர்களா?

191 இதோ அவர் வருகிறார், எல்லாம் சரியாகிவிடும். மருத்துவர், "ஏன், உங்களுக்கு இது நடக்கும் என்று நினைத்தேன்..." என்றார். "நீ

செவிப்பறையைக் காயப்படுத்திவிட்டாய், அது வெடித்துவிட்டது, அதிலிருந்து இரத்தம் வழிந்துகொண்டிருக்கிறது, அவ்வளவுதான்" என்றார். எல்லாம்...அடுத்த முறை நாங்கள் சென்றபோது—திரும்பிச் சென்றபோது, அவர் அதைக் குறித்து ஒன்றுமே கூறவில்லை. என்னவென்று எனக்குத் தெரியாது, பாருங்கள், தொற்று நோய் இல்லை, ஒன்றுமேயில்லை. பார்த்தீர்களா?

192 எனவே அப்பொழுது யாரோ ஒருவர் அழைத்திருந்தார், நான் அறைக்குள் சென்று ஜெபிப்பேன். இன்னொரு நாள் அவர்கள் அழைத்து, "எல்லாம் முடிந்துவிட்டது. அருமையாகவும் சிறப்பாகவும் உள்ளதே! நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறதே!" என்பார்கள்.

193 நான் மனைவியினிடத்தில் பேசிக்கொண்டிருந்தேன். நான், "தேனே, ஏறக்குறைய ஒரு வருடம் நான்கு மாதங்கள் எந்த வழியாய் செல்ல வேண்டும் என்பதை நான் அறிந்திருக்கவில்லை" என்றேன். அதற்கு நான், "என்னவென்று எனக்குத் தெரியவில்லை" என்றேன். அவள் கூறினாள்...நாங்கள் அந்த அசைவைக் குறித்து பேசிக்கொண்டிருந்தோம், அப்பொழுது நான், "என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை, நான் நின்றுகொண்டிருக்கிறேன், நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன், 'நாம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோமா...? அந்த ஒரு மகத்தான தேவனுடைய தீர்க்கதரிசி இந்தக் காரியத்தை முழங்கக் காட்சியில் வரும்போது, அது பகிரங்கமாகத் தெரியப்படுத்தப்படுமா?'" என்று கேட்டேன்.

194 நான், "அது வேதவாக்கியத்திற்கு முரணானது. இல்லை, அது: 'நீங்கள் நினைக்காத நேரத்தில் அவர் வருகிறார்'" என்று நினைத்தேன். பார்த்தீர்களா? அப்பொழுது நான், "என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. நாம் அதைக் கவனிக்காமல் விட்டுவிட்டோமா?" என்று நினைத்தேன். நான், "நான் இங்கே வீட்டிலேயே வெறுமனே கிடக்க விரும்பவில்லை" என்று எண்ணினேன். நான் நினைத்தேன்...மேலும் இது ஒலிநாடாவில் பதிவு செய்யப்படவில்லை என்று நான் நம்புகிறேன்; அப்படிப் பதிவு செய்யப்பட்டால், அந்த ஒலிநாடாவை கிழித்துவிடுங்கள் அல்லது ஓரமாக வைத்துவிடுங்கள். பார்த்தீர்களா? இப்பொழுது அவர் கூறினார்...நான், "இதுவே இதுவாக இருக்குமானால், நாம் நினைப்பதைக் காட்டிலும் நாம் நெருக்கமாக இருக்கிறோம்" என்றேன்.

195 ஒரு காரியம் உண்டு...அது நடக்கப் போகிறது. ஒன்று இப்பொழுது எனக்கு ஏதோ ஒன்று சம்பவிக்க வேண்டும். அன்றொரு நாள் நான் அந்த இருக்கையில் இருந்தபோது, அவர் ஏன் என்னைப் போகவிடவில்லை என்று எனக்குத் தெரியவில்லை, அப்பொழுது, பாருங்கள், வேறு ஏதாவது செய்ய வேண்டியதாயிருக்கவில்லையென்றால். ஏன்? நான் ஏன் செல்லவில்லை? என்ன நடந்தது? வேறு ஏதாவது செய்ய

வேண்டுமா? நான், “சரி, இது என்னுடைய செய்தியாக இருக்குமானால், ஜனங்கள் அதற்குத் தங்களுடைய முகத்தைச் சுளிப்பார்கள்” என்று எண்ணினேன்.

196 அதன்பின்னர், ஏதோ ஒன்று என்னை அயல்நாட்டு ஊழியத்திற்கு அழைக்கிறது. சமுத்திரத்தினூடாக எல்லாவிடங்களிலிருந்தும் வரும் அழைப்பை நான் கேட்கிறேன்.

197 சமீபத்தில் ஒரு கடிதம் வந்தது, சகோதரன் லிக்கர் டர்பன் கூட்டத்தைப் பற்றி ஒரு—ஒரு புத்தகம் எழுதுகிறார். அவர், “அது ஒருபோதும் ஒப்பிடப்படவில்லை. ஆப்பிரிக்காவில் அதைப் போன்ற ஒரு அசைவு ஒருபோதும் இருந்ததில்லை. ஒரே இரவில், இந்த இருண்ட தேசமான ஆப்பிரிக்காவில் அவர்கள் தங்களுடைய ஜீவியத்தில் இதற்கு முன்பு ஒருபோதும் இல்லாத ஒரு அசைவு உண்டானது” என்றார். அது உண்மை, அஞ்ஞானிகள் மத்தியில்.

198 நான் அங்கே கீழே பார்த்தேன், அந்தப் பாவப்பட்ட கறுப்பர்களை, அருமையான மக்களைப் பார்த்தேன், அந்த மக்கள் அவர்களை அடிமைகளைவிட மோசமாக...நடத்திய விதத்தைப் பார்த்தேன். அங்கே ஒரு சிறு பையனைக் கண்டேன்...நான்... அங்கே பணிபுரிந்தான், நான் கூறினேன்...அந்தப் பையன், நீ... ஸ்திரீகளாகிய உங்களால் இரண்டு நாட்களில் அவ்வளவு செய்ய முடியாது [ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.] அல்லது மூன்று நாட்கள், அந்தப் பையன் ஒரே நாளில் செய்ய வேண்டியிருந்ததைப் போல, நீங்கள் முடிந்தவரை கடினமாக உழைக்க வேண்டும். அவன் ஒரு சிறிய பழைய குளியலறையில், சுமார் நான்கு அடி நீளமும் நான்கு அடி அகலமும் கொண்ட ஒரு மரப்பலகையில் சுருண்டு படுத்துக் கொள்வான். அவன் ஒரு மாதத்திற்கு ஒரு பவுண்டு பெற்றான், அது இரண்டு டாலர்கள் எண்பது சென்டுகள். மேலும் மேசையிலிருந்து சிதறிய மீதங்களை, அதாவது ஒரு வாளி மாவுக்கலவையை, அவனால் சாப்பிட முடியவில்லை; அதில் மூன்றில் ஒரு பங்குக் காலை உணவிலும்; மூன்றில் ஒரு பங்கு மதிய உணவிலும்; மீதி மூன்றில் ஒரு பங்கு அன்றிரவு இரவு உணவிற்கும் கிடைத்தது. பத்து, அல்லது பதினொரு மணி, பன்னிரெண்டு மணி வரைக்கும் பணிபுரிந்தான். அடுத்த நாள் காலையில் எழுந்து குழந்தையை மற்றெல்லாவற்றையும் கவனித்துக் கொள்ள வேண்டும், படிக்கட்டுகளை மெருகேற்றுவது, முதலாளியின் காரைத் துடைப்பது போன்றவை. அந்தப் பெரிய, வயதான, குண்டான தாய் அங்கே சும்மா உட்கார்ந்து, நகங்களைக் கடித்துக்கொண்டு, தேநீர் குடித்துக்கொண்டு, சோம்பேறியாக, ஒரு வேலையும் இல்லாதவளாக இருந்தாள்.

199 அந்தப் பரிதாபமான பையன் ஒவ்வொரு காரியத்திற்கும் வேலை செய்ய வேண்டியதாயிருந்தது. அவனுக்கு இருமல் இருந்தது. அவனுக்குக் கிட்டத்தட்ட ஜலதோஷம் பிடித்தது போன்று காணப்பட்டான். “*ஹம்ப், ஹம்ப், ஹம்ப்!*” ஒரு நாள் நான் அங்கே

திரும்பிப் பார்த்து, “அந்தப் பையன் உங்களிடம் ஒருபோதும் இருப்பதில்லையா...? ஏன் அவனைக் கூட்டத்திற்கு அழைத்து வரக் கூடாது?” என்று கேட்டேன்.

200 “அவன் ஒரு காஃபிர்” என்றார். [ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.] அதன் அர்த்தம் ஒரு “கயவன்.” அந்தப் பெயரைக் கேட்டாலே அவர்கள் கோபப்படுவதில் ஆச்சரியமில்லை. நானும், அப்படித்தான் கோபப்படுவேன். அந்த மனிதர் என் சகோதரர். அதோ அவன் இருக்கிறான். அவன் ஒரு அடிமை அல்ல. அவனுடைய நிறத்திற்கும் அதனோடு சம்மந்தமில்லை. அவன் என்னுடைய சகோதரன். அங்கே அவன் அந்தவிதமாக இருந்தான்.

201 நான் வெளியே நடந்து சென்றேன், நான் அவனை “தாமஸ்” என்று அழைத்தேன். அந்தப் பையனால் மூன்று மொழிகள் பேச முடிந்தது. நான், “தாமஸா?” என்று கேட்டேன்.

202 அவன் திரும்பி, முழங்காலில் விழுந்து, கைகளைக் கூப்பி, “என்ன, எஜமானே” என்றான்.

203 நான், “எழுந்திரு. நான் உன்னுடைய எஜமான் அல்ல, நான் உன்னுடைய சகோதரன்” என்றேன். நான் என் கரத்தை அவனைச் சுற்றிப் போட்டேன். அவன் அந்த விதமாக என்னை நோக்கிப் பார்த்தான், அவனுடைய கன்னங்களில் மகத்தான பெரிய கண்ணீர் வழிந்தோடியது. நான், “தாமஸ்” என்றேன்.

204 அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் வந்தார், அப்பொழுது ஒரு தரிசனம் உண்டானது. நான் அவனிடம் ஒரு காரியத்தைக் கூறினேன். அவன், “ஆம், எஜமானே. அது உண்மை. அது அப்படித்தான் இருந்தது” என்றான்.

205 நான், “தாமஸ், இருமல் உன்னை விட்டுப் போய்விட்டது, உனக்கு இனிமேல் அது இருக்காது” என்றேன். அவனுக்கும் வரவில்லை.

206 ஜனங்கள் என்னுடைய சட்டைப் பையில் பணத்தை திணித்தார்கள், என்னிடம் சுமார் நூற்றி எண்பது *பவுண்டு* நோட்டுகள் இருந்தன. (இரண்டு டாலர்கள் எண்பது சென்டுகள் என்று பொருள்). நான் அதை அவனுக்குக் கொடுக்கப் பயந்தேன்; எஜமானன் அதைக் கொண்டு அவனைக் கண்டுபிடித்துவிடுவானோ என்று பயந்து, அவன் அதைத் திருடிவிட்டதாக அவர்கள் நினைத்து, அதன்பின்னர் அவர்கள் அவனை அடித்துக் கொன்றுவிடுவார்கள். அதன்பின்னர் நான்—நான் முதலாளியிடம், “நான்—நான் அந்தப் பையனை நேசிக்கிறேன். நான் அவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுக்கட்டும்” என்றேன்.

“ஓ, இல்லை! இல்லை! நீர் அவனைக் கெடுத்துவிடுவீர்” என்றான்.

207 அப்பொழுது நான், “நீங்கள் நன்றாகக் கெட்டுப்போய்விட்டீர்கள்” என்றேன். பார்த்தீர்களா? “இங்கே

நீ என்ன சும்மா கிடக்கிறாய்? நீ ஒன்றுமே செய்கிறதில்லை. அந்தப் பையன் எல்லா வேலைகளையும் செய்கிறான், நீ அவனை அரைகுறை பட்டினியால் மரிக்க விடுகிறாய். அவனுக்கு விதவையான ஒரு—ஒரு தாயும், பாதிக்கப்பட்ட சகோதரியும் உள்ளனர். அதன்பின்னர் நீங்கள் அவனுக்கு ஒரு டாலர்...ஒரு மாதத்திற்கு இரண்டு டாலர்கள் எண்பது சென்டுகள் கொடுக்க அனுமதிக்கிறீர்கள்" என்றேன். நான், "அதற்காக நீ என்றோ ஒரு நாள் அறுப்பாய்! இருபது இலட்சம் வெள்ளையர்களும், ஏறக்குறைய நூறு கோடி கருப்பர் இனத்தவரும் உள்ளனர். உனக்கு எழுச்சி உண்டாகும்" என்றேன்.

"அமெரிக்காவில் நீங்கள் அதைக் கூற வேண்டாம், இங்கே என்ன நடக்கிறது" என்றார்.

208 நான், "என்னை அமைதியாயிருக்கும்படி யார் சொல்லப் போகிறார்கள்? தேவன் மாத்திரமே" என்றேன். மேலும், "இப்படி நடத்தப்படும்போது மக்களுக்கு மன உளைச்சல் ஏற்படுவது ஆச்சரியமல்ல." என்றேன். [ஒலிநாடாவில் காலியிடம்—ஆசி.] அங்குதான் காரியம். நான் அவர்களுக்காகப் பேசினேன்.

209 ஒரு நாள் இரண்டு ஊழியக்காரர்கள், கழுத்துப்பட்டை அணிந்து, சிறிய மீசையுடன், அவர்கள் ரொடீஷியாவிற்கு வந்தனர்.

210 ஒரு வயதான அனுபவமில்லாத விமானி என்னை ஒரு வெப்பமண்டலப் புயலுக்குள் கொண்டு சென்றார், அதன்பின்னர் இரண்டு மைல் தூரம் பறந்தது போலத் தோன்றியது, காற்றில் உயரமாக, சுழன்று கொண்டிருந்தது. அது தலைகீழாக இருந்ததா என்று எங்களுக்குத் தெரியாது; விமானம் மீண்டும் மீண்டும் சுழன்றது. முடிவிலே அது...அது கீழே போய்க் கொண்டிருந்ததா அல்லது மேலே போய்க் கொண்டிருந்ததா என்று எங்களுக்குத் தெரியவில்லை. முடிவிலே அது எங்களைப் புயலின் மேலே தூக்கி எறிந்தது. நாங்கள் இறங்கியபோது எனக்கு வயிறு மிகவும் சுகவீனமாயிருந்தது!

211 அந்த இரண்டு ஊழியர்கள், பெந்தேகோஸ்தே ஊழியர்கள், ஒரு காரில் ஏறி என்னைப் பிரிட்டோரியாவுக்குச் அழைத்துச் சென்றுகொண்டிருந்தனர். நான் தெற்கு ரொடீசியாவிலிருந்து வருகிறேன்; நான் அங்குச் சென்றபோது, எப்படியிருந்தாலும் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. அங்கே சகோதரர் பாக்ஸ்டர் உடல்நிலை சரியில்லாமல் அமர்ந்திருந்தார், பில்லி பாலும் உடல்நிலை சரியில்லாமல் இருந்தான். இங்கே நாங்கள் அந்த வளாகத்தின் வழியாக நேராகக் காரில் சென்று கொண்டிருந்தோம்; அங்குதான் ஏதேனும் ஒரு குற்றத்தைச் செய்யும் கருப்பின மக்கள் தங்கள் பழங்குடியை விட்டு வெளியேற வேண்டியிருக்கிறது, அது ஏதோ ஒரு பழங்குடிப் பாவம், அதனால் அவர்கள் அங்கு வருகிறார்கள். அவர்களை நகரத்திற்குள் வர அவர்கள் அனுமதிக்க

மாட்டார்கள், அதனால் அவர்கள் தகரக் கூரை அல்லது தங்களுக்குக் கிடைக்கும் வேறு எதன் கீழோ வசித்து வருகிறார்கள், மிகவும் அசுத்தமாக இருப்பது உண்மைதான். அப்பொழுது அவர்கள் அங்குச் சென்றபோது, "மணிக்கு இருபது மைல் வேகத்தில்" என்று எழுதப்பட்டிருந்த ஒரு பலகையை நான் கண்டேன். அந்த மனிதன் மணிக்கு அறுபத்தைந்து மைல் வேகத்தில் சென்று கொண்டிருந்தார். அந்த ஏழை வயோதிக தாய்மார்கள் நிர்வாணமாகத் தெருவில் உள்ள சிறு குழந்தைகளையும், சிறு பிள்ளைகளையும் பிடித்துக் கொண்டார்கள், இரண்டு வயது முதல் ஐந்து அல்லது ஆறு வயது வரை; அவர்களைப் பற்றிப் பிடித்துக்கொண்டு கூச்சலிட்டனர். அவர் ஒரே நேரத்தில் அவர்களில் நான்கு பேரையும் கொன்றுவிடும் அளவுக்கு மிக அருகில் வந்துவிட்டார்.

212 நான் அவருடைய தோளைத் தட்டினேன், நான், "ஏய்! உனக்கு என்ன ஆயிற்று?" என்று கேட்டேன்.

அவர் திரும்பி, "நீர் என்ன கூறினீர்?" என்று கேட்டார்.

213 நான், "'உனக்கு என்ன நேர்ந்தது?' என்று நான் கேட்டேன். வேகத்தைக் குறை!" என்றேன்.

மேலும், "உங்களைச் சரியான நேரத்தில் அங்குக் கொண்டு செல்ல நாங்கள் உத்தரவு பெற்றுள்ளோம்" என்றார்.

214 நான், "அதை நிறுத்தும்படி நான் உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்" என்றேன். மேலும் அவர் கூறினார்...நான், "உனக்கு அந்த ஜனங்களைக் குறித்து எந்த உணர்வும் இல்லையா?" என்று கேட்டேன்.

"எந்த ஜனங்கள்?" என்றான்.

நான், "அங்கே இருக்கும் அந்தச் சின்னக் குழந்தைகளை நீ கிட்டத்தட்ட மோதிவிட்டாய்" என்றேன்.

மேலும், "அது காஃபிர்கள்!" என்றான்.

215 அப்பொழுது நான், "உனக்கு அவமானம்! நீ உன்னை ஒரு கிறிஸ்தவன் என்று அழைத்துக் கொள்கிறாயா?" என்று கேட்டேன். அப்பொழுது நான், "அந்தத் தாய் தன்னுடைய குழந்தையைக் குறித்து அவ்வளவு அதிகமாக நினைத்தாள் என்பது உனக்குத் தெரியாதா, உன்னுடைய தாய் உன்னைக் குறித்து நினைத்திருப்பது போல, நீ அதைக் கொன்று போட்டிருந்திருப்பாயானால் என்னவாயிருக்கும்?" என்று கேட்டேன். நான், "அவள் படிப்பறியாதவளாகவும், பேதமையுள்ளவளாகவும் இருக்கலாம், ஆனால் ஒரு தாயினுடைய அன்பு தன்னுடைய குழந்தைக்காகக் கதறுகிறது. அப்படிப்பட்ட ஒரு காரியத்தைச் செய்வதற்காக உனக்கு எந்த வேலையும் கிடையாது. நீ உன்னை அழைத்துக் கொள்கிறாய்..." என்றேன். மேலும் நான், "மற்றொரு காரியம், அந்தப் பலகையில் 'இருபது மைல் வேகம்' என்று எழுதப்பட்டுள்ளது. என்னுடைய வேதாகமம், 'இராயானுடையதை இராயனுக்குக் கொடு' என்று உரைத்துள்ளது"

என்றேன். அவன் தன் தலையைக் குனிந்து கொண்டான். மேலும் நான், “நீ வேகத்தைக் குறைத்து மணிக்கு இருபது மைல் வேகத்தில் செல், அந்த ஜனங்களை உம்முடைய சகோதரரைப் போல நடத்து” என்றேன். நான், “அதைப் போன்ற எந்தக் காரியமும், உனக்கு அவமானம்” என்றேன். ஓ என்னே, அவர்கள் அளவுக்கு அதிகமாகக் கோபப்பட்டனர்! ஆனால் அது எந்த வித்தியாசத்தையும் உண்டாக்கவில்லை, நான் சொல்ல வந்ததைச் சொல்லி, உணர்த்திக் காண்பித்து விட்டேன்.

216 நாங்கள் அங்கே சுற்றி வந்தபோது, நான் அவர்களுக்காக, சுவிசேஷத்தின் செய்தியைக் கொண்டு வந்திருக்கிறேன் என்பதை மக்கள் அறிந்துகொண்டார்கள். தேவன்...

217 அவர்கள் அங்கே உள்ளே வந்து, அவர்களைக் கலந்து, ஒரு பக்கத்தில் வெள்ளையர்களையும், கருப்பர் இனத்தவர்களையும் உட்கார வைத்தார்கள், அங்கே கறுப்பு நிறத்தவர் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை, ஒன்றுமே பேச முடியவில்லை. பரிசுத்த ஆவியானவர் அங்கே நடுவே சென்று, வியாதியஸ்தர்களையும், பாதிக்கப்பட்டவர்களையும், முடமானவர்களையும் வெளியே கொண்டு வந்து, அவர்களைச் சுகப்படுத்தி, *அவர்கள்* அங்கே கட்டியெழுப்பியிருக்கும் தங்களுடைய அந்தப் பெரிய தாழ்வு மனப்பான்மையில் இங்கே உட்காரவைத்தார். தாழ்மையான இருதயமுள்ளவர்களிடம் தேவன் எப்படி இடைபடுகிறார் என்பதை இது காண்பிக்கிறது!

218 இப்பொழுது, அந்தச் செய்தியை இன்னும் பெற்றிறாத ஒரு நபர், அவர் அந்தப் புத்தகத்தை எழுதிக் கொண்டிருக்கிறார்.

219 இப்பொழுது, நான் என்ன செய்ய வேண்டும்? காரியம், நான் என்ன செய்ய...நான் அங்குத் திரும்பி வர வேண்டுமா? இப்பொழுது, தேவன் என்னைச் சுவிசேஷ ஊழியத்திற்கு அழைக்கிறார் என்றால், அப்பொழுது என்னால் ஒரே நேரத்தில் அவருடைய ஞானதிருஷ்டிக்காரனாகவும், சுவிசேஷகனாகவும் இருக்க முடியாது. நீங்கள் வெறுமனே...அது...அலுவல்களைக் கலக்காது, நான்—நான்...நான் என்னவென்று அறியாத ஒரு போராட்டத்தை மேற்கொண்டிருக்கிறேன். நான் ஒரு சுவிசேஷகனாக இருக்க வேண்டுமென்றால், நான் ஒரு சுவிசேஷகனாக இருக்க வேண்டும். நான் அவருடைய ஞானதிருஷ்டிக்காரனாயிருக்கப் போகிறேனானால், நான் இங்கிருந்து விலகிச் சென்று எங்காவது மலைகளில் தங்கியிருப்பேன்; நான் கர்த்தரிடத்திலிருந்து கேட்கும் வரைக்கும், சபை இல்லாமல், ஜனங்களும் இல்லாமல்; வெளியே சென்று அதைக் கொடுத்துவிட்டு, மீண்டும் திரும்பிப் போக வேண்டும். புரிகிறதா? அந்தக் காரியங்களில் ஒன்று, அது ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அல்லது எல்லாம் முடிந்துவிட்டது. என்னைப் பொறுத்தவரை, அது அந்த மூன்று காரியங்களில் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். செய்தியானது முடிவுற்றுவிட்டது,

இல்லையென்றால் இந்த இரண்டு காரியங்களில் ஒன்றை நான் செய்ய வேண்டும். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

220 நேற்றிரவு நான் ஒரு சொப்பனம் கண்டேன், நான் ஒரு கூட்டத்திற்கு செல்வதாகச் சொப்பனம் கண்டேன், அப்படிப்பட்ட ஒரு கூட்ட ஜனங்களை நான் ஒருபோதும் கண்டதேயில்லை! நான் பார்க்க முடிந்த அளவிற்கு அவர்கள் ஒரு பெரிய அரங்கத்தைப் போன்று கூடியிருந்தனர். யாரோ ஒருவர் என்னைப் பின்தொடர்ந்து வந்தார், அது பில்லி அல்ல, அவர் என்னைக் கீழே அழைத்துச் சென்றார். நான் அறையிலிருந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன், நான் அபிஷேகத்தின் கீழிருந்து...வந்து கொண்டிருந்தேன்; அவர்கள் சொல்வது போல, அது உங்களைப் புரிய வைப்பது போன்ற ஒரு தன்மையில் இருந்தது, அது ஒரு பகுத்தறியும் செயல் என்பதை என்னால் உணரக்கூடிய ஒரு படிநிலையாக அது இருந்தது. வழியில் ஒரு நபர் என்னிடத்தில் பேசத் துவங்கினார், அவர் பேசினபோது, பகுத்தறிதல் சென்றுவிட்டது. என்னால் அதை உணர முடியவில்லை. அதன்பின்னர் நான் என்னை மீண்டும் அதற்குள் இழுத்துக் கொள்ள முயற்சித்தேன்; என்னால் அதைச் செய்ய முடியவில்லை. என்னால் அதைச் செய்ய முடியவில்லை. நான் சோர்ந்து போனேன்.

221 அதற்கு அருகில் வந்தபோது நான் கூட்டத்தை நோக்கிப் பார்க்கத் துவங்கினேன். நான் அதைச் செய்தபோது, நான், "சரி, அந்த ஸ்தாபனங்களை நான் அறிவேன் என்ற ஒரு பொருளை நான் என் சிந்தையில் வைத்துள்ளேன், அவர்கள் அந்த ஜனங்களை நடத்தும் விதமும், அப்பொழுது நான் அந்தவிதமாகவே என்னால் முடிந்தளவு கடினமாக அந்தச் சுவிசேஷத்தை அவர்களுக்குப் பிரசங்கிக்கப் போகிறேன்" என்றேன். நான் மேடைக்கு நடந்து சென்றபோது, அது என்னை விட்டுச் சென்றது.

222 பகுத்தறிதல் இல்லை, அந்தச் செய்திகளில் ஒன்று கூட இல்லை; நான் அங்கே நின்று, அதே சமயத்தில் ஜனங்கள் காத்துக் கொண்டிருந்தனர். நான், "நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டேன்.

223 அப்பொழுது ஏதோ ஒன்று, "போ. தொடர்ந்து செல், பார்" என்று கூறியது, நான் அங்குச் செல்லும்போது, அது அளிக்கப்படும். "தொடர்ந்து செல்." பார்த்தீர்களா? அப்பொழுது நான் அங்கே மேடை-...இருந்தேன். நான் விழித்தெழுந்தேன்.

224 நான் அதைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்ததின் காரணமாக இருக்கலாம், நான் அப்படிப்பட்ட ஒரு சொப்பனம் கண்டேன். அது அவ்வாறு இருக்கலாம். அது ஒருக்கால் சொப்பனம் ஆவிக்குரியதாய் இருக்கலாம். எனக்குத் தெரியாது. அதைக் குறித்து எந்த வியாக்கியானமும் என்னிடம் இல்லை, அது என்ன பொருட்படுத்துகிறது என்று எனக்குத்—எனக்குத் தெரியவில்லை. என்னால் அதை உங்களுக்குக் கூற முடியாது,

அது என்னவென்று எனக்குத்—எனக்குத் தெரியாது. ஆனால், அது என்னவாயிருந்தாலும், நான் ஏதோ ஒரு முடிவு எடுக்கும் நிலையில் இருக்கிறேன். பார்த்தீர்களா? ஏதோ ஒன்று, எங்கோ ஏதோ ஒன்று உள்ளது.

225 நான்—என்னால் ஒரு காரியத்தைக் கூற முடியும், நான் மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறேன். அல்லது *இந்த* விதமாகக் கூறினால், நான்...அது *இந்த* வழியில் அல்லது *அந்த* வழியாக, *இந்தப்* பக்கத்தில் உள்ள ஒருவர் அதைப் பெறுகிறார். அது எப்படியிருக்கிறது, நீங்கள் ஒரு காரியத்தை நேராக ஒரு குறிப்பை நோக்கிக் கூறும்போது, ஒருவன் அதை *இந்த* விதமாகக் கேட்கும்போது, அதனால் அவன் இன்னொன்றைச் சொல்லி இன்னும் கொஞ்சம் சாய்ந்தான், அடுத்தவன் இன்னும் கொஞ்சம் சாய்ந்தான், அதற்கடுத்தவன் இன்னும் கொஞ்சம் சாய்ந்தான், அதன்பின்னர் அது சீர்குலைந்து போய்விடும். ஒருவன் அதை *இந்த* விதமாகக் கேட்கிறான், அவன் இந்த வழியாக, அந்த வழியாக, அந்த வழியாகச் செல்கிறான். பாருங்கள், நீங்கள் விலகிச் செல்கிறீர்கள். கூட்டங்களிலும் மற்ற இடங்களிலும் காரியம் அந்தவிதமாகத்தான் இருக்கிறது, நீங்கள் ஒரு குறிப்பிட்ட காரியத்தை நோக்கிச் செல்லும்போது. அப்போது, தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அந்தச் சத்தியத்தைக் கேட்பார்கள். அவர்கள் அந்தக் காரியத்தைப் புரிந்து கொள்கிறார்கள்! அவர்களுக்குத் தெரியும், ஏனென்றால் நான் சொல்ல வந்ததை அப்படியே, அந்தச் செய்தியை அப்படியே, துல்லியமாகச் சொன்னேன் (பார்த்தீர்களா?).

226 இப்பொழுது, அதைத்தான் நான் கூறுகிறேன், எல்லா நேரத்திலும், தொடர்ந்து தவறான புரிந்துகொள்ளுதல் அதிகமாக இருப்பது போன்று தென்படுகிறது. அது என்ன?...நடப்பட வேண்டிய எல்லா விதைகளையும் நான் விதைத்துவிட்டேனா? காலம் சமீபமாயிருக்கிறதா? இந்த மகத்தான செய்தியாளன் இப்பொழுது காட்சியில் வர ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறாரா? கர்த்தருடைய வருகை சமீபமாயிருக்கிறதா? அது இந்தத் தேசத்திலிருந்து மற்ற தேசத்திற்கு அழைக்கப்படுகிறதா? அவர் சுவிசேஷ ஊழியத்திலிருந்து என்னை அழைத்தாரா?

227 உங்களுக்கு நினைவிருக்கும், நான்...நான் அதை மனைவியிடம் திரும்பக் கூறினேன். உங்களில் அநேகர் புத்தகத்தில்...ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, நான் அந்த மூலைக்கல்லை அங்கே நாட்டினபோது, அங்கே அந்த மூலையில், அங்கே அதில் கூறப்பட்டிருந்தது...அன்று காலை அவர் என்னை எழுப்பி, அங்கே அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, நான் விவாகம் செய்து கொள்வதற்கு முன்னரே, ஒரு இளம் வயது பிரசங்கியாராக இருந்தேன், அவர், "சுவிசேஷகனுடைய வேலையைச் செய். இல்லை...நீ சுவிசேஷகனாயிருக்கவில்லை, ஆனால் ஒருவருடைய *வேலையைச்* செய்" என்று எனக்கு ஒரு

வேதவாக்கியத்தை மேற்கோள் காட்டினார். நான் கீழே ஓடி வந்து அந்த இரண்டு மரங்களையும் பார்த்தபோது, *இங்கிருந்து* ஒன்றை ஒடித்தேன், ஒருத்துவம் மற்றும் திரித்துவம். நான் அவற்றை ஒருபோதும் குறுக்காக நடவில்லை, அந்தவிதமாகவே அவற்றை நட்டேன். அதன்பின்னர் அவர் கனி என் கையில் விழுந்ததைக் கண்டார், அதன்பின்னர் என்னைக் கல்வாரிக்கு கொண்டு சென்றார். இப்பொழுது கவனியுங்கள், அவர், "நீ இதிலிருந்து வெளியே வரும்போது, இரண்டாம் தீமோத்தேயு 4, இரண்டாம் தீமோத்தேயு 4-ஐ வாசி" என்றார்.

228 அது என்னை அறையில் உட்கார வைத்து விட்டது. அது ஒரு தரிசனமாயிருந்தது என்று கூட எனக்குத் தெரியாது. அப்பொழுது அதை என்னவென்று அழைப்பது என்று எனக்குத் தெரியவில்லை. நான் அங்கே அஸ்திபாரத்தின் மூலைக்கல்லை (அந்த நாளில்) நாட்டிக்கொண்டிருந்தேன். அது எழுதப்பட்டு, இப்போது அந்த மூலைக்கல்லில் அப்படியே கிடக்கிறது, மேலும் இவ்வாறு கூறப்பட்டது:

> *...சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று.*
>
> *ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்கமனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதக—போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு,*
>
> சத்தியத்திலிருந்து விலக்கப்பட்டு, *கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்.* (அது ஒருத்துவம் மற்றும் திரித்துவம். அவர்கள் அதைக் காணத் தவறினர்...)

229 இப்பொழுது, "நீங்கள் சுவிசேஷகர்" என்று அவர் ஒருபோதும் கூறவேயில்லை, அவர், "ஒருவருடைய *வேலையைச்* செய்" என்றார். பார்த்தீர்களா? இப்பொழுது, அதற்கான நேரம் வந்துவிட்டதா? நான் அதைத் தொடரலாமா அல்லது வேறு ஏதாவது காரியத்திற்கான நேரம் வந்திருக்கிறதா? அது எனக்குத் தெரியாது.

230 நான் விரும்பியது அதுதான், உங்களுடன் மனம் விட்டுப் பேசுவது. நான் இப்பொழுது உங்களைப் போக அனுமதித்த என்னுடைய நேரம் கடந்துவிட்டபடியால், உங்களை நீண்ட நேரம் வைத்திருப்பதற்காக வருந்துகிறேன்.

231 ஆனால், கர்த்தருக்கு சித்தமானால், சகோதரன் போஸ் ஞாயிறு வருவதற்கு முன்பு, நான் ஞாயிறு காலை வந்து, *சாயங்கால-நேர சுவிசேஷம்* என்ற பொருளின் பேரில் பேசலாம், அல்லது அதைப் போன்ற ஏதோ ஒன்று, பாருங்கள், அது...போதகரே, அது உங்களுக்குச் சரியாயிருக்கிறதா? [சகோதரன் நெவில், "அருமை! தேவனுக்கு ஸ்தோத்திரம்!" என்று கூறுகிறார்—ஆசி.] கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த ஞாயிறு காலை. நான் இன்று இரவு

அதைப் பற்றிப் பேசவிருந்தேன், மேலும் ஒருவேளை வேறொரு சமயம் மனம் விட்டுப் பேசவும் திட்டமிட்டிருந்தேன், ஆனால் அது கர்த்தருடைய சித்தமாக இருக்குமானால், பாருங்கள், ஒரு வேளை இந்தவிதமாக இது சிறப்பாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

232 நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன். நீங்கள் எனக்காக ஜெபியுங்கள். "சகோதரன் பிரான்ஹாம், நான் செய்வேன்" என்று மட்டும் சொல்லாதீர்கள். நீங்கள் அதைச் செய்யுங்கள்! பார்த்தீர்களா? நான் அதன்பேரில் சார்ந்திருக்கிறேன். அவர் என்னை எங்காவது தள்ளிவிட முடிந்தால், ஜெபத்திற்கு தேவைப்படுகிற ஒருவன் நான் தான். நான் ஒரு மனிதன், நான் தேவன் அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனாயிருக்கிறேன், நான் அதில் நடக்கத்தக்கதாகத் தேவனுடைய சித்தத்தை கண்டறிய முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். யாராலும் அறிய முடியாது... "ஞானத்தில் குறைவுள்ளவன் தேவனிடத்தில் கேட்கக்கடவன்." அதைத்தான் நான் செய்துகொண்டிருக்கிறேன், தேவனிடம் கேட்டுக்கொண்டிருக்கிறேன். என் சபையாகிய உங்களிடம் இதை ஒரு மனந்திறந்த உரையாடலாக முன்வைக்கிறேன். என்ன, நாம் எங்கே இருக்கிறோம்? நாம் எங்கே நின்று கொண்டிருக்கிறோம்? நாம் எந்த நேரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன். நாம் இங்கே முடிவில் இருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன்.

233 இப்பொழுது, அது ஒரு பக்கமாக அல்லது மற்ற பக்கமாகத் திரும்பலாம். எனவே நீங்கள்...அது என்னுடைய வேலை முடிந்துவிட்டதா, அல்லது நான் அப்பாலுள்ள ஊழிய களங்களுக்கு அழைக்கப்பட்டிருக்கிறேன், அல்லது அவர் ஒரு சுவிசேஷகனாக அல்லது ஒரு ஞானதிருஷ்டிக்காரனை உண்டாக்குவார். அந்தக் காரியங்களில் ஒன்று சம்பவிக்க வேண்டியதாயிருக்கிறது, ஏனென்றால் நான் முடிவில் இருக்கிறேன். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எந்த வழியில் செல்ல வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. நான் அவைகளை அணுகிக்கொண்டிருக்கிற இந்தக் கூட்டங்களும் கூட, நான் ஜெபித்துக் கொண்டிருந்தேன், நான், "கர்த்தாவே, நான் இருந்து வந்ததைப் போல நான் செய்யப்போவதில்லை. நான் அங்கே முன்பு செய்தது போலவே அதை அணுகப் போகிறேன், நான் அந்தச் சுவிசேஷத்திற்கு திரும்பிப் போவேன், நான் என்ன செய்ய வேண்டுமென்றிருக்கிறீரோ, அதற்காக அந்த அழைப்பை நீர் எனக்கு அருளும் வரையில் நான் ஜெபிக்கிறேன்" என்றேன்.

234 நான்—நான் விதையை எல்லாவிடங்களிலும் விதைத்திருக்கிறேன், ஒலிநாடாக்கள் உலகம் முழுவதிலும் சென்றன, என்னுடைய செய்திகள் உலகம் முழுவதும் சென்றன, அதைக் குறித்து எல்லா சபைகளும் அறிந்திருக்கின்றன, எல்லா இடங்களிலும், பிதா

எதைத் தெரிந்துகொண்டுள்ளாரோ அதை அவர் அழைப்பார். புரிகிறதா?

235 இப்பொழுது அது அவர்களுக்கு ஒரு குற்றமாகிவிடுகிறது போன்று காணப்படுகிறது. ஓ, அவர்கள் அதனோடு எந்தக் காரியத்தையும் செய்ய விரும்புகிறதில்லை. இல்லை, ஐயா. நான் போய் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கலாமா, மேலும் அதன் பேரிலான ஒரு சிறிய எளிய செய்தி, மற்றும்—மேலும் பரிசுத்த ஆவியானவர் என்னை வழிநடத்தும் விதத்தைக் காண்கிறீர்களா? அவர் மற்றொரு அழைப்பை அளிக்கும் வரையில் அதைத்தான் செய்ய வேண்டும் என்று என் சிந்தையில் உள்ளது. ஏனென்றால் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை தேவனிடத்திலிருந்து நீங்கள் புரிந்துகொள்ளும் வரை, உங்கள் நிலைமையைப் புரிந்துகொள்ளும் வரை, ஒரு மனிதன் என்ன செய்ய வேண்டும் என்பதையே அறியாதிருக்கிறான்.

236 நான்—நான் வீட்டில் சும்மா இருக்க விரும்பவில்லை. இந்தச் செய்தி என் இருதயத்தில் உள்ளது. ஜனங்கள் மரித்து, விழுந்துபோய், நித்தியத்திற்குள்ளாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். நான் என்ன செய்ய முடியும்? கர்த்தராகிய இயேசு ஸ்தானத்தை மாற்றும் வரையில், என்னால் முடிந்த எல்லாவிடங்களிலும் நான் அதை முழக்கமிட்டுக்கொண்டு, அவரைக் குறித்து கூறட்டும். நீங்கள் எனக்காக ஜெபியுங்கள், நான் உங்களுக்காக ஜெபிப்பேன். நீங்கள் அதைச் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

237 இப்பொழுது புதன் இரவு, ஜெபக் கூட்டம், வெள்ளிக் கிழமை இரவு, புருஷர்களுக்கான கூட்டங்களை நினைவில் கொள்ளுங்கள். அது இங்கே இருக்கப் போகிறதா? உங்கள் எல்லோரையும் காண நான் வரலாம், நான் ஒரு வெள்ளிக்கிழமை இரவு வந்து உங்களைப் பார்ப்பேன் என்று உங்களிடம் கூறினேன். சரி, அப்படியானால் ஞாயிறு காலையில், கர்த்தருக்குச் சித்தமானால், நான் *சாயங்கால-சுவிசேஷத்தைக்* குறித்து பேசப் போகிறேன், கர்த்தருக்கு சித்தமானால்; அதை மாற்றலாம், தெரியவில்லை. ஆனால் அந்தவிதமான சுவிசேஷகர்கள் சாயங்கால நேரத்தில் இருப்பார்கள் என்று, இப்பொழுது நான் அதைக் குறித்துதான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். அதன்பின்னர் ஞாயிறு இரவு, சகோதரன் போஸின் திரைப்படம், அதை இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள். கர்த்தருக்குச் சித்தமானால், அடுத்த வாரம் நாங்கள் அறுவடைக் களத்திற்கு செல்லுகிறபடியால், எங்களுக்காக ஜெபியுங்கள்.

நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? ஆமென்!
நீங்கள் அவரைச் சேவிப்பீர்களா? ஆமென்!
நீங்கள் அவரை விசுவாசிப்பீர்களா? ஆமென்!
ஆமென்! ஆமென்!
அவரே பிதாவாயிருக்கிறார். ஆமென்!

அவரே குமாரன். ஆமென்!
அவர் பரிசுத்த ஆவியானவர். ஆமென்!
ஆமென்! ஆமென்!

இன்னமும் பாடுங்கள். ஆமென்!

ஆமென்! ஆமென்! ஆமென்! ஆமென்!

நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? ஆமென்!
அவர் வருகிறாரா? ஆமென்!
நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? ஆமென்!
ஆமென்! ஆமென்!

இன்றிரவாக இருக்கலாம், நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? ஆமென்!
காலையில், நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? ஆமென்!
எந்த நேரத்திலும், நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? ஆமென்!
ஆமென்! ஆமென்!

*இன்னமும் பாடுங்கள்.*ஆமென்!
ஆரவாரமிடுங்கள். ஆமென்!
ஜெபித்துக் கொண்டிருங்கள். ஆமென்!
ஆமென்! ஆமென்!

கர்த்தராகிய இயேசுவே வாரும். ஆமென்!
உங்களுடைய சபையை ஆயத்தப்படுத்துங்கள். ஆமென்!
நாங்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம். ஆமென்!
ஆமென், ஆமென்!

என்னுடைய தாயாரைப் பார்க்க விரும்புகிறேன். ஆமென்!
என் தந்தையைக் காண விரும்புகிறேன். ஆமென்!
நான் என்னுடைய இரட்சகரைக் காண விரும்புகிறேன். ஆமென்!
ஆமென்! ஆமென்!

ஓ, நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? ஆமென்!
நீங்கள் அவரைச் சேவிப்பீர்களா? ஆமென்!
நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? ஆமென்!
ஆமென்! ஆமென்!

238 எங்கள் பரலோகப் பிதாவே, இது எங்களுடைய...ஒரு சிறிய *ஆமென்* பாடல். நாங்கள் உம்முடைய போதகத்தை நேசிக்கிறோம், நாங்கள் யாவரும் "ஆமென்!" என்று கூறுகிறோம். நாங்கள் ஆவியானவரை நேசிக்கிறோம், "ஆமென்!" அவர் வருகிறார் என்று

நாங்கள் விசுவாசிக்கிறோம், "ஆமென்!" கர்த்தாவே, உம்முடைய வேதாகமத்தில் நீர் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையையும், நாங்கள் "ஆமென்!" என்று கூறி ஆமோதிக்கிறோம். நாங்கள் அதனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் விசுவாசிக்கிறோம், எங்களுக்குத் தெரிந்த வரையில் மிகச் சிறந்த முறையில், அது எழுதப்பட்டிருக்கும் விதத்திலேயே, ஒவ்வொரு நிறுத்தற்குறி, ஒவ்வொரு இணைப்புக்குறி, ஒவ்வொரு முற்றுப்புள்ளி, ஒவ்வொரு காற்புள்ளியென அனைத்தையும், எங்களுக்குத் தெரிந்த வரையில் அது எழுதப்பட்டிருக்கும் விதத்திலேயே கற்பிக்கிறோம்.

239 ஓ தேவனே, கர்த்தாவே, எங்களுக்குத் திரும்ப அளியும். நாங்கள் ஏங்குகிற அந்த மாபெரும் திருப்தியை எங்களுக்குத் தாரும், ஒருநாள், இயேசு அங்கே தோன்றி, சபை எடுத்துக்கொள்ளப்பட, வானத்தில் தேவதூதர்கள் அல்லேலூயா கீதம் முழங்கும் அந்த முழக்கத்தை நாங்கள் கேட்போம்.

240 அவிசுவாசிகள், "என்ன சம்பவித்துவிட்டது, அந்த ஜனங்களோடுள்ள காரியம் என்ன? அவர்கள் எங்கே போனார்கள்?" என்று வியப்படைவார்கள். ஓ, தேவனே, அவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள், அவர்கள் அவரைக் காணவும் கூட மாட்டார்கள். ஆனால் சபையோ அவரைக் காணும், அதாவது அழைக்கப்பட்டவர்கள், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், மீண்டும் பிறந்தவர்கள், அவர்கள் மறைந்து போவார்கள். அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறியமாட்டார்கள், அவர்கள் காணாமற் போயிருக்கிறார்கள் என்பதை மாத்திரமே அவர்கள் அறிவார்கள்; அவர்கள் தங்களுடைய கர்த்தரோடு இருப்பார்கள்.

241 அப்படியானால் அந்த நேரத்தில், கர்த்தாவே, இரட்சிப்பின் காலம் கடந்துவிட்டது என்பதை அறிந்த நிலையில், இங்கே தனியாக விடப்படுவது எவ்வளவு பயங்கரமான காரியமாக இருக்கும்? இனி மீட்பு இல்லை! வேதம், "அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும், பரிசுத்தமில்லாதவன் இன்னும் பரிசுத்தமில்லாதவனாயிருக்கட்டும்" என்று கூறியுள்ளது. ஓ, அது என்னே ஒரு வேளையாயிருக்கும்!

242 கர்த்தாவே, நாங்கள் இப்பொழுதே ஆயத்தம் செய்வோமாக. பிதாவே, உம்மைச் சந்திக்க நாங்கள் ஆயத்தமாகி, எங்களுடைய இருதயங்களை அனுதினமும் ஆயத்தப்படுத்தினால், அது என்ன ஒரு அற்புதமான நேரமாயிருக்கும். இன்றைக்கு இந்தக் கேள்வியில் இந்தப் பரிதாபமான ஆத்துமா எழுதினது போல, நாங்கள் ஒரு தவறு செய்து, விழுந்து போனால், இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எல்லா பாவங்களையும் சுத்திகரிக்கிறது என்பதை அவர்கள் அறிந்து கொள்ளட்டும். கர்த்தாவே, அந்த நபர் அதைச் செய்ய வேண்டுமென்று கருதவில்லை. அவர்கள் பசியாயும், தாகமாயும் இருந்து கொண்டு, அந்த ஆவியின் ஐக்கியத்திற்குள் திரும்பி வர முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தாவே, அவர்களை மேலே

கொண்டு வாரும். இந்த மேகமூட்டமான, இருண்ட உலகத்திற்கு மேலாக அவர்களை உயர்த்தும்; அவர்களுடைய ஆத்துமாக்களின் மேல் சூரிய வெளிச்சம் மீண்டும் பிரகாசிக்க முடியும். அவர்கள் மேகங்களின் பெரிய அடிவானத்திற்கு கீழே விழுந்துவிட்டனர், அவர்கள் அசுத்தத்திற்குள், அந்தப் பாவத்திற்குள்ளாகக் கீழே இறங்கிவிட்டனர். ஆனால் அவர்கள் ஒரு காலத்தில் அங்கே சூரிய வெளிச்சத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். கர்த்தாவே, அவர்கள்— அவர்கள் மீண்டும் திரும்பிச் செல்ல விரும்புகிறார்கள். கர்த்தாவே, இன்றிரவே அவர்களைத் திரும்பக் கொண்டு வாரும். அங்கு இருப்பதை ஒருபோதும் சாட்சி பகராத யாராகிலும் இங்கிருந்தால், அதை அறிந்திருந்தால்...

243 இங்குள்ள இந்த ஏவுகணைகள் யாவும் மற்றும் ஒவ்வொரு காரியமும் சரியாக உம்முடைய வார்த்தைக்கு இசைவாகவே உள்ளன, அதேவிதமாகவே காரியங்கள் சம்பவிக்க வேண்டியதாயுள்ளது. சபை உலகம், அவர்கள் எப்படி நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாங்கள் காண்கிறோம். நோவாவின் நாட்களில் இருந்தது போலவே, சோதோம் நாட்களில் இருந்தது போலவே, இயேசு சொன்னபடியே எல்லாம் நடப்பதை நாங்கள்— நாங்கள் காண்கிறோம்; பேரலைகள், ஸ்திரீகள் எப்படி நடப்பார்கள், உடை உடுத்துவார்கள் என்றும், அவர்கள் எப்படி மற்றும் எவ்விதமாக அவர்கள் பிறர் விவகாரங்களில் எப்பொழுதும் தலையிடுபவர்களாக இருப்பார்கள், மற்றும் அவர்கள் எவ்விதமாகத் தங்கள் விரும்புகிற விதமாக நடப்பது மினுக்கி மற்றும் நெளிந்து நடப்பது மற்றும் சரியாகத் தீர்க்கதரிசி கூறின விதமாகவே உள்ளன. தானியேல் கூறினது போலவே, "இரும்பும் களிமண்ணும் ஒன்றாக ஒத்துப்போக முடியாது." கர்த்தாவே, ஓ, ஒவ்வொரு காரியமும் நிறைவேறியுள்ளது. நாங்கள் கடைசி காலத்தில் இருக்கிறோம். கர்த்தாவே, நிழல்கள் விழுந்து கொண்டிருக்கின்றன. சிவப்பு விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன, மணிகள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

244 ஓ, தேவனே, சீக்கிரத்தில் தூதன் பூமியின் மேலும் சமுத்திரத்தின் மேலும் பாதத்தை வைத்துத் தம்முடைய கரங்களை உயர்த்தி, "இனி காலம் செல்லாது!" என்று கூறுவதை உம்முடைய ஜனங்கள் உணரட்டும்

இழக்கப்பட்டவர்களுக்கு அவர்களுடைய
கதியைக் குறித்து கூறப்படும்போது,
அப்பொழுது ஓ, என்னே ஒரு அழுகையும்
புலம்பலுமாய் இருக்கும்;
அவர்கள் கன்மலைகளையும், மலைகளையும்
நோக்கி,
அவர்கள் ஜெபிப்பார்கள், ஆனால் ஜெபம்
மிகவும் தாமதமாகிவிட்டது.

245 இப்பொழுது இரட்சிப்பின் நாள். “ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.” கர்த்தாவே, அதை அருளும்.

246 அந்த எடுத்துக் கொள்ளப்படுதலின் நாளில் இங்கே ஒரு நபராவது தவறிப்போகாதிருப்பார்களாக. காத்துக் கொண்டிருப்பவர்களோடு எங்களையும் சேர்த்து பரிசுத்த ஆவியானவர் மேலே எடுத்துக் கொள்ளும் வரையிலும் அல்லது எங்கள் சுதந்திர வீதத்தில் இளைப்பாற செல்லும் வரையிலும் நாங்கள்தாமே தேவனுடைய அன்பிலும் மற்றும் தேவ ஆவியிலும் மிகவும் நிறைய பட்டிருப்போமாக. நீர் தானியேலிடம், “தானியேலே, நீயோவென்றால் போயிரு; நீ இளைப்பாறிக் கொண்டிருந்து அந்த நாளிலே உன் சுதந்திர வீதத்திற்கு எழுந்திருப்பாய்” என்று கூறினது போலவே.

247 ஓ தேவனே, “அநேகரை பாவத்திலிருந்து நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைவிட என்றைக்குமுள்ள சதா கால்களிலும் பிரகாசிப்பார்கள்” என்று நீர் கூறியிருக்கிறீர். என்னே ஒரு நாள்! ஆனால் அந்தத் துன்மார்க்கர்களோ அழிவில் திருப்பித் தள்ளப்படுவார்கள். ஓ, தேவனே, மனிதனுடைய ஜீவியத்தில் அவர்கள் நீதியுள்ள ஒருவரிடத்திற்குத் திரும்பும்படியாக, நித்திய காலதாமதமான காலத்திற்கு முன்பே, இப்பொழுதே அவர்களுடைய நிலையை உணரச் செய்யும். பிதாவே, இதை அருளும்.

248 இப்பொழுது நம்முடைய தலைகள் சற்று நேரம் வணங்கியிருப்பதோடு, முடிவான ஜெபத்தில், ஒரு நபர் நினைவுகூரப்பட வேண்டும் என்பது போன்று இருக்கும், “சகோதரன் பிரான்ஹாம், நான் என்னுடைய கரத்தை உங்களிடமல்ல, தேவனிடத்திற்கே உயர்த்துகிறேன். தேவன் என்னிடத்தில் இரக்கமாயிருப்பாராக, அந்த நாளில் நான் பிரசன்னமாயிருந்து, ஆட்டுக்குட்டியின் இரத்தத்திலே கழுவப்படுவேன்” என்று கூறுவீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. தேவன் உங்களை, உங்களை, உங்களை, உங்களை, உங்களை, அநேக கரங்கள்.

249 இப்பொழுது, பரலோகப் பிதாவாகிய தேவனே, ஒவ்வொருவரையும் ஆசீர்வதியும். நீர் அவர்களுடைய கரங்களைக் கண்டிருக்கிறீர். அவர்களுடைய இருதயங்களை நீர் அறிந்திருக்கிறீர்.

250 கர்த்தாவே, நாங்கள்...ஏதோ ஒன்று சம்பவிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது என்பதை நாங்கள் உணருகிறோம். உலகத்திற்கே அது தெரியும், அவர்கள் பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள், தொலைக்காட்சிகள் நரம்பியல் சார்ந்த நகைச்சுவைகளாலும் பாடல்களாலும் நிரம்பி வழிகின்றன. அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? ஒரு சிறு பையன் இருளில் விசில்

அடித்துக்கொண்டு, மரண பயத்தில் ஒரு கல்லறைத் தோட்டத்தைக் கடந்து செல்வது போல, விசில் அடித்துத் தன்னுடைய நரம்புகளை அமைதிப்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறான். அவன் தன்னையே ஏமாற்றிக் கொள்கிறான். ஆகவே இந்தத் தேசமானது சிரித்துக் கொண்டே, கேலி செய்து கொண்டே, கிண்டல் செய்து கொண்டே மாத்திரம் இருக்கிறது, அவர்கள் அதைச் செய்யும் நேரம் வரும் என்று அது கூறியுள்ளது போல, "சத்தியத்திலிருந்து விலகிக் கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போவார்கள்" என்றும், எப்படி "கடைசி நாட்களில் பரியாசக்காரரும் ஏளனம் செய்பவரும் வருவார்கள்" என்றும், கடைசி காலத்தில் இந்தக் காரியங்கள் எப்படியிருக்கும் என்றும், "துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, சத்தியத்தை விட்டு விலகுதல்" என்று கூறப்பட்டுள்ளது, நாங்கள் அதை இப்பொழுதே காண்கிறோம்.

251 ஓ தேவனே, ஜனங்களை எழுப்பும்! அவர்கள் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறார்கள் என்ற உறுதியை அவர்கள் இப்பொழுதே பெற்றிருக்க முடியும் என்பதை அவர்கள் உணரட்டும். நாங்கள் பரிசுத்த ஆவியாகிய கிறிஸ்துவைப் பெற்றுக் கொள்ளும்போது, நாங்கள் உலகத்திற்கு மேலாக உயர்கிறோம். நாங்கள் ஏற்கனவே அவரோடு உயிர்த்தெழுந்துவிட்டோம் என்றும், அந்த மாற்றத்திற்காகவே நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம் என்றும் அப்பொழுது நாங்கள் அறிகிறோம், அங்கே மரணமானது அழிவுள்ள மண்டலங்களில் நின்றுபோகும், எங்களுடைய புலன்களில் சுழன்று கொண்டிருக்கும் இந்தச் சிறிய அழிவுள்ள ஜீவியத்தின் சக்கரங்கள் மீட்கப்படும். ஓ தேவனே! அப்பொழுது நாங்கள் அவருடைய சரீரத்தைப் போன்ற ஒரு சரீரத்தைப் பெற்று, மகத்தான வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் கொண்டுள்ள அத்தாட்சியோடு அவரோடு நித்தியமாக ஜீவிப்போம்.

252 கர்த்தாவே, அதை ஒருவரும் தவறவிட வேண்டாம். தங்களுடைய கரங்களை உயர்த்தினவர்கள், அவர்கள் (இன்றிரவு) இராஜ்ஜியத்திற்குள்ளாகத் துரிதமாகச் செல்வார்களாக. ஒருவேளை அவர்கள் வீட்டிற்குச் செல்லும்போது, ஒருக்கால் அந்த மனிதன் தன்னுடைய மனைவியிடத்தில், "அன்பே, இன்றிரவு ஏதோ ஒன்று என்மேல் பட்டது" என்றோ; அல்லது மனைவி கணவனிடத்தில், "தேனே, நான்—நான் உண்மையாகவே விநோதமாக உணர்ந்தேன்" என்றோ கூறலாம். "ஆம், அன்பே, நாம் இங்கே படுக்கையின் பக்கத்தில் முழங்காற்படியிடுவோம். நாம் இதற்கு முன்பு இதைச் செய்ததேயில்லை, ஆனால் இன்றிரவு நாம் ஜெபிப்போமாக. நம்மிடத்தில் இரக்கமாயிருந்து, நம்மை ஒன்று சேர்க்கும்படி நாம் தேவனிடத்தில் வேண்டிக் கொள்வோம். இனிய இருதயமே, நான் உன்னை நேசிக்கிறேன்" என்று கூறுவார்களாக.

253 மற்றொன்று, ஆண் பெண்ணிடம் பேசுவதும், அவர்கள்

ஒருவரையொருவர் நேசிப்பதும், "நான்—நான்—நான் உங்களோடு பரலோகத்தில் இருக்க விரும்புகிறேன். நான் அதைத் தவறவிட விரும்பவில்லை. என்றோ ஒரு நாள் நாம் வீட்டிற்கு வரவேற்கப்படும்போது, நான் உங்களைக் கரம் பிடித்து அழைத்துச் செல்வேன், மகத்தான நடைபாதைகளினூடாகவும், நித்திய தோட்டங்களினூடாகவும் நடந்து செல்வேன், அங்கே ஆட்டுக்குட்டியும் மற்றும்—மற்றும் சிங்கமும் ஒன்று சேர்ந்து படுத்திருக்கும், ஓநாய்களும்—பசுவும் ஒன்றாக இருக்கும். இனிமேல் மரணமும் இருக்காது, துக்கமும் இருக்காது. நாம் அதன் வழியே நடந்து செல்லும்போது, தேவதூதர்களின் கீதங்கள், ஒன்றாகச் சேர்ந்து பாடும் பாடல் குழுக்கள் நமக்கு மேலே ஒலித்துக் கொண்டிருக்க, தேவதூதர்கள் நம்மை வீட்டில் வரவேற்கும்போது, அன்பே, நான் அங்கே உங்களோடு இருக்க விரும்புகிறேன். நான்—நான் உன்னை நேசிக்கிறேன். ஒருக்கால் உனக்கு வயதாகிக்கொண்டிருக்கலாம், நான் உன்னை விவாகம் செய்தபோது, உன்னுடைய அழகான சிறிய முகம் எனக்கு நினைவிருக்கிறது" என்று கூறுவார்கள். "மேலும்—மேலும் நீ, அன்பே, நீ ஒரு அழகான வாலிபனாயிருந்தபோது, எனக்கு உன்னை நினைவிருக்கிறது."

254 ஆனால் இவையாவும் திரும்ப அளிக்கப்படும். ஒரு முறை உன்னுடைய அழகான முகத்தை வர்ணம் தீட்டினவர் அதைக் குறித்த ஓவியத்தை அவருடைய சிந்தையில் கொண்டிருந்தார். அது ஒருபோதும் மங்கிப்போகாத இடங்களில் அவரால் மீண்டும் அதற்கு அப்பால் வர்ணம் தீட்ட முடியும். ஓ, தேவனே, இது ஒரு கட்டுக்கதை சொப்பனமல்ல, ஆனால் இது ஒரு—ஒரு சத்தியம் என்பதை ஜனங்கள் அறிந்து கொள்வார்களாக, தேவன், பரிசுத்த ஆவி, சாட்சி கொடுக்க இங்கே இருக்கிறார். காலங்களினூடாக அவருடைய வார்த்தை அதைக் குறித்து உரைத்துள்ளது. நாம் பின்னோக்கிப் பார்த்து, பாருங்கள், நம்முடைய சரித்திரத்தை வாசிப்போமாக. இந்தப் பூமியில் எவரேனும் உயர்ந்த நிலையை அடைந்தவர்கள் மனிதர்களே, தேவபயமுள்ள மனிதன், வாஷிங்டன், லிங்கன் போன்ற நமது ஜனாதிபதிகள், *யோசுவாக்கள்,* மற்றும்—மற்றும்...*மோசேக்கள்,* மற்றும் அவர்களும்...உலகத்தின் மகத்தான மனிதன் அதில் விசுவாசங்கொண்ட மனிதனாயிருந்து, தங்களுடைய சாட்சியை முத்தரித்து, உயிர்த்தெழுதலுக்கு அப்பால் காத்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்த அச்சாரமாகிய, அதனுடைய முதற்பலன்களை நாங்கள் உடையவர்களாயிருக்கிறோம்.

255 என் ஜெபத்தின் மூலமாக, நீர் இந்த ஜனங்களையும் அவர்களுடைய ஜெபத்துடன் ஏற்றுக்கொண்டு, அவர்களை இராஜ்ஜியத்திற்குள்ளாகக் கொண்டு செல்ல வேண்டும் என்று இப்பொழுது நான் ஜெபிக்கிறேன். நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

256 தேவன் உங்களை ஆசீர்வதித்து, உங்களிடத்தில் இரக்கத்தில்

ஐசுவரியமுள்ளவராயிருந்து, அவருடைய முகத்தை உங்கள்மேல் பிரகாசிக்கச் செய்து, உங்களைக் காத்து, எல்லா பரலோக ஆசீர்வாதங்களிலும் உங்களை ஆசீர்வதிப்பாராக.

257 இப்பொழுது நான் இதைக் கொடூரமாகக் கூறவில்லை, ஆனால் அன்பினால் கூறுகிறேன். அவரை அறியாதவர்களே, உங்கள் தலையணை நீங்கள் இனி தூங்க முடியாத அளவுக்குக் கடினமாகவும், உங்களுடைய ஆகாரம் நீங்கள் புசிக்க முடியாத அளவுக்குக் மோசமாகவும், இறுதியில் நீங்கள் எங்காவது ஓரமாக நழுவிச் சென்று, "கர்த்தாவே, என்மீது இரக்கமாயிரும்" என்று சொல்லும் வரையிலும் நான் ஜெபிக்கிறேன். அது உங்களுக்குத் தவறான எதையும் விரும்புகிறதல்ல. சகோதரனே, சகோதரியே, அது உங்களுடைய நன்மைக்காகவே. அது உங்களுக்கும் அந்தவிதமாக இருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

நாம் சந்திக்கும் வரை! நாம் சந்திக்கும் வரை!
நாம் இயேசுவின் பாதத்தில் சந்திக்கும் வரை,
(நாம் சந்திக்கும் வரை!)
நாம் சந்திக்கும் வரை! நாம் சந்திக்கும் வரை!
நாம் மீண்டும் சந்திக்கும் வரை தேவன்
உங்களோடு இருப்பாராக!

நாம் மீண்டும் சந்திக்கும் வரை தேவன்
உங்களோடு இருப்பாராக!
அவருடைய ஆலோசனையின்
வழிகாட்டுதலினால் உங்களைத் தாங்கி,
உங்களுக்கு முன்பாக அச்சுறுத்தும் அலைகளை
அடிப்பாராக;
நாம் சந்திக்கும் வரைக்கும் தேவன்
உங்களோடிருப்பாராக...

258 இப்போது, பழைய கால நினைவுக்காக, இப்பொழுது நாம் யாரோ ஒருவருடன் கரங்குலுக்குவோமாக.

நாம்...

கர்த்தராகிய இயேசுவே...?...முழுமையாக்கும், தொற்று நோயை அகற்றி, அவருக்கு ஆரோக்கியத்தைத் தாரும், கர்த்தாவே, இயேசுவின் நாமத்தில்.

நாம் இயேசுவின் பாதத்தில் சந்திக்கும் வரை;
(நாம் சந்திக்கும் வரை!)
நாம்...?...

நாம்...
...இயேசுவினிடத்தில்...

259 நாம் வழக்கமாக அந்தப் பாடல்களைப் பாடுவது உங்களுக்கு நினைவிருக்கிறதா? நாம்...மேலும் இந்த மற்றொன்றை நாங்கள்

பல ஆண்டுகளுக்கு முன்பு பாடுவோம், இங்கே யாராவது இருக்கிறார்களா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை, நாம் வழக்கமாக இங்கே ஒரு பழைய அடுப்பைச் சுற்றிலும் மண் தரையில் கரங்களைச் சேர்த்து பாடுவோம். உங்களுக்கு அது நினைவிருக்கிறதா? நாம் பாடுவோம்:

நாம் சீயோனுக்கு அணிவகுத்து சென்று
கொண்டிருக்கிறோம்,
அழகான, அழகான சீயோன்;
நாம் சீயோனுக்கு மேல் நோக்கி அணிவகுத்து
சென்று கொண்டிருக்கிறோம்,
அந்த அழகான தேவனுடைய நகரம்.

260 ஆயிரம் வருட அரசாட்சியில் சீயோன் என்னவாயிருக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா? சீயோனின் மேல் ஒரு வெளிச்சம் உண்டாகும், அது பகலில் சூரியனிலிருந்து வரும் ஒரு நிழலைப் போலவும், இரவில் ஒரு ஒளியைப் போலவும் இருக்கும். அங்கே இரவே இராது. ஓ, என்னே!

சீயோனின் வயல்கள் ஆயிரம் புனித
இனிப்புகளை விளைவிக்கின்றன,
நாம் அந்தப் பரலோக சிங்காசனத்தை
அடைவதற்கு முன்பு,
நாம் அந்தப் பரலோக சிங்காசனத்தை
அடைவதற்கு முன்பு,
அல்லது பொன் வீதிகளில் நடந்து,
அல்லது பொன் வீதிகளில் நடந்து செல்வோம்.

இப்பொழுது யாவரும் சேர்ந்து:

நாம் சீயோனுக்கு அணிவகுத்து சென்று
கொண்டிருக்கிறோம்,
ஓ, அழகான, அழகான சீயோன்;
நாம் சீயோனுக்கு மேல் நோக்கி அணிவகுத்து
சென்று கொண்டிருக்கிறோம்,
அந்த அழகான தேவனுடைய நகரம்.

261 நான் அதை விரும்புகிறேன், அது மிகவும் அழகாக இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது, நீங்கள் அந்தப் பண்டைய கால பாடல்களை விரும்பவில்லையா? இன்றைக்கு நம்மிடம் உள்ள பாடல்கள் என்று அழைக்கப்படும் இந்தத் துண்டிக்கப்பட்ட காரியத்தைக் காட்டிலும் இது முற்றிலும் மேலானது என்று நான் நினைக்கிறேன். நான் அதை விரும்புகிறேன். நான் வழக்கமாகச் சபையில் ஒரு பழைய பாடலைப் பாடுவது உங்களுக்கு நினைவிருக்கும்:

இடம், இடம், ஆம், இடம் உண்டு,
உனக்காக ஊற்றண்டையிலே இடம் உண்டு.

262 ஓ, என்னே! அந்த நல்ல, பழைய பாடல்களுக்கு, எழுதுகோல் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டது என்று நான் நினைக்கிறேன், அவரே அந்தப் பாடல்களை எழுதினார்.

> என் தேவனே, உம்மண்டை, உம்மண்டை நெருங்கி!
> சிலுவை என்னை உயர்த்தினாலும்.

263 அதே சமயத்தில், சார்லஸ் வெஸ்லி மற்றும் அதைப் போன்ற அந்தப் பாடல்களை எழுதிய மகத்தான ஆசிரியர்கள், அவர்கள் புலவர்கள். அது அழகாக இருக்கிறது, அவர்கள் மிகவும் நல்லவர்கள் என்று நான் நினைக்கிறேன். அப்பொழுது நாம் வழக்கமாக...அதை நினைவுகூருகிறோம்:

> ஓ பியூலா தேசம், இனிமையான பியூலா தேசம்,
> நான் மிகவும் உயரமான மலையின் மேல் நிற்கிறபடியால்,
> நான் தூரமாய் சமுத்திரத்தை நோக்கிப் பார்க்கிறேன்,
> வாசஸ்தலங்களை எனக்காக ஆயத்தம் பண்ணியிருக்கிறீர்.

264 கர்த்தருடைய தூதன் முதன்முறையாக ஆற்றண்டையில் பிரசன்னமானார் என்பது நினைவிருக்கிறதா? நாம் பாடிக்கொண்டிருந்தோம்:

> யோர்தானின் புயல் கரையில் நான் நிற்கிறேன்,
> ஒரு ஆவலுள்ள கண்ணில் நோக்கிப் பார்க்கிறேன்,
> கானானின் அழகான, மகிழ்ச்சியான தேசத்திற்கு,
> என்னுடைய உடைமைகள் அங்கே கிடக்கின்றன.
>
> நான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு சென்று கொண்டிருக்கிறேன்,
> என்னோடு வந்து போவது யார்?
> நான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு சென்று கொண்டிருக்கிறேன்.

265 நாங்கள் அதைப் பாடிக்கொண்டிருக்கையில், ஆகாயத்திலிருந்து ஒரு சத்தம், இங்கே அந்த மகத்தான அக்கினி ஸ்தம்பம் வட்டமிட்டு வந்து, "யோவான் ஸ்நானன் அவருடைய முதலாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டதைப் போலவே, இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக ஒரு செய்தியை நீ பெற்றிருக்கிறாய்" என்று உரைத்தது. அவள் எங்கே போய்விட்டாள் என்று பாருங்கள். அது முப்பத்தியொரு ஆண்டுகளுக்கு முன்பு. ஒரு எழுப்புதல் அக்கினியில் உலகம் முழுவதிலும் அது எங்குச் சென்றது என்று பாருங்கள். இப்பொழுது அது குளிர்ந்துபோவதை நாம் காண்கிறோம். காலம் சமீபித்துவிட்டது.

266 நாம் இப்பொழுது நம்முடைய தலைகளை வணங்கி, எல்லா அறிவிப்புகளையும் நினைவு கூருவோமாக.

267 மந்தையின் மகத்தான மேய்ப்பன், என்றோ ஒரு நாள் வருவதை நாம் காண எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம், எங்களுடைய இருதயங்கள் நாம் அவரைக் காணும் அந்த வேளைக்காக வாஞ்சித்துக் கொண்டிருக்கின்றன. ஒரு நாள் நீர் மலையின் மேல் அமர்ந்து, நீர் உம்முடைய ஜனங்களுக்குப் போதித்தபோது, நீர், "இந்த விதமாக ஜெபியுங்கள்" என்றீர்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே,
உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.
உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய
சித்தம் பரலோகத்தில் செய்யப்படுகிறது
போலப் பூமியிலும் செய்யப்படுவதாக.
எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று
எங்களுக்குத் தாரும்.
எங்களுக்கு விரோதமாகத் தப்பிதங்களை
செய்கிறவர்களை நாங்கள் மன்னிக்கிறது போல,
எங்களுடைய தப்பிதங்களை எங்களுக்கு
மன்னியும்.
எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்,
தீமையினின்று எங்களை
இரட்சித்துக்கொள்ளும்; ராஜ்யமும்,
வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும்
உம்முடையவைகளே. ஆமென், என்பதே.

268 வேதம், "அவர்கள் ஒரு ஸ்தோத்திரப் பாட்டைப் பாடின பின்பு புறப்பட்டுச் சென்றனர்" என்று கூறியுள்ளது.

இயேசுவின் நாமத்தை உன்னோடு கொண்டு செல்,
துன்பமும் துயரமுமான பிள்ளையே;
அது உனக்குச் சந்தோஷத்தையும் ஆறுதலையும்
அளிக்கும்,
நீ எங்குச் சென்றாலும் அதைக் கொண்டு செல்.

விலையேறப்பெற்ற நாமம், ஓ எவ்வளவு
இனிமையானது!
பூமியின் நம்பிக்கையும், பரலோகத்தின்
சந்தோஷமும்;
விலையேறப்பெற்ற நாமம், ஓ எவ்வளவு
இனிமையானது! (எவ்வளவு இனிமை!)
பூமியின் நம்பிக்கையும், பரலோகத்தின்
சந்தோஷமுமாம்.

269 அது அழகாகத் தென்படவில்லையா? நாம் பாடுகையில், ஒரே ஒரு முறை, அங்கொன்றும் இங்கொன்றுமாக நிறுத்தி, மீண்டும்

அதைக் கேளுங்கள்:

இயேசுவின் நாமத்தில் தலைவணங்கி,
அவருடைய பாதத்தில் விழுந்து, (புரிகிறதா?)
பரலோகத்தில் ராஜாதி இராஜாவாக நாம் அவருக்கு முடிசூட்டுவோம்,
நம்முடைய யாத்திரை முடிவுறும்போதே.

ஓ, அது அழகாக இருக்கிறதல்லவா? நாம் பார்ப்போம்:

இயேசுவின் நாமத்தை உன்னோடு கொண்டு செல்,
ஒவ்வொரு கண்ணிக்கும் கேடயமாக;
உன்னைச் சுற்றிலும் சோதனைகள் சூழ்ந்து கொள்ளும்போது,
ஜெபத்தில் அந்தப் பரிசுத்த நாமத்தை அப்படியே உச்சரி. (புரிகிறதா?)

ஓ விலையேறப்பெற்ற நாமம்! நாம் அதைப் பாடுவோமாக:

இயேசுவின் நாமத்தை உன்னோடு கொண்டு செல்,
ஒவ்வொரு கண்ணிக்கும் கேடயமாக;
சோதனைகள் உன்னைச் சூழும்போது,
அந்தப் பரிசுத்த நாமத்தை ஜெபத்தில் உச்சரி.

ஓ விலையேறப்பெற்ற நாமம், (விலையேறப்பெற்ற நாமம்!) ஓ எவ்வளவு இனிமையானது! (ஓ எவ்வளவு இனிமையானது!)
பூமியின் நம்பிக்கையும், பரலோகத்தின் சந்தோஷமுமாம்;
விலையேறப்பெற்ற நாமம், ஓ எவ்வளவு இனிமையானது! (எவ்வளவு இனிமை!)
பூமியின் நம்பிக்கையும், பரலோகத்தின் சந்தோஷமுமாம்.

270 இப்பொழுது, நாம் நம்முடைய தலைகளை வணங்குவோமானால், நம்முடைய போதகர் ஜெபத்தில் சபையோரை கலைந்து செல்லச் செய்வார். சகோதரர் நெவில், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

62-0527 கேள்விகளும் பதில்களும்
பிரான்ஹாம் கூடாரம்
ஜெபர்ஸன்வில், இந்தியானா அமெரிக்கா

TAMIL

©2026 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org